
# கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்

மூன்றாம் பாகம்

இலட்சணா விருத்தி
வேதாந்த சூடாமணி
கைவல்லிய நவநீதம்




கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்

# கோவிலூர்மரபு வேதாந்த நூல்கள்

மூன்றாம் பாகம்

இலட்சணா விருத்தி
வேதாந்த சூடாமணி
கைவல்லிய நவநீதம்

வெளியீடு
சீர்வளர்சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்
*கோவிலூர் ஆதீனம்*

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் – 630 307
2007

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலஉ லாவிய் நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்.

வானவ ரசமாந் தொடர்பினால் உலகோர் வழுத்துறும் வன்னி ஐங்கரனை
வாநவ ரதந மணியறு முகனை மாசறு கொற்றவாள் இறையை
வானவர் முதுவன் பாலன வலவன் வணங்குநற் றிருநெலை மாதை
வானவ ரதனா முத்திரா மேச வள்ளலை வணங்கி வாழ்த் திடுவாம்.

தந்தைதாய் ஆவானும் சார்கதிஇங் காவானும்
அந்தமிலா இன்பநமக் காவானும் – எந்தம்உயிர்
தான்ஆகு வானும் சரணாகு வானும் அருட்
கோனாகு வானுங் குரு.

உ

சிவமயம்

## ஆசியுரை

### கோவிலூர் ஆதீனம்
### ஸ்ரீ ல ஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்

பாரத நாட்டின் தலையாய பெருமை நமது ஆன்மீக உயர்வு பற்றியதாக உள்ளது. ஆன்மீகத்தில் தலையாயது வேதாந்தம். நாமனைவரும் 'இன்பம் எங்கே உள்ளது' எனத் தேடுகிறோம். 'அது உனக்குள்ளேயேதான் இருக்கிறது' என்பது வேதாந்தம். இன்பமும் மன அமைதியும் பெற்று, அவற்றை நிரந்தரமாக்கிக் கொள்வதில் தொடங்கி, உண்மையான தேடுதல் யாது என அறிவுறுத்தி, 'உயிருடன் உள்ளபோதே முத்தி' என்பதற்கான வழிகாட்டலை அருளுவது வேதாந்தம் மட்டுமே. இவற்றையெல்லாம் வாழ்வில் நடைமுறைப்படுத்த உதவுவன வேதாந்த சாத்திர நூல்கள்.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வேதாந்த நூல்கள் சமஸ்கிருத மொழியில் கற்றுக் கொடுக்கப்பட்டன. வேதாந்த விருப்ப முடையவர்களில், தமிழ் மட்டுமே அறிந்தோர், சமஸ்கிருதம் பயிலுவதில் உச்சரிப்பு இடர்ப்பாடுகள் உண்டு. சாமான்ய மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கோடு, இக் கருத்துக்களை எளிமையாக்கிக் கொடுத்த பல பெரியோர்களும் உண்டு. சுமார் 700 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த தவத்திரு தத்துவராய சுவாமிகள் இத்தகையவர். தமிழ்மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வல்லவரான சுவாமிகள், அவரது குருவை மகிழச்செய்ய, சங்கரரின் அத்வைத வேதாந்தக் கருத்துக்களையெல்லாம் திரட்டி, அவற்றை தமிழ்ச்செய்யுட்களாக உருவாக்கினார். இவ்வாறு பல ஞான நூல்கள் சுவாமிகளால் இயற்றப்பட்டன. இந்நூல்களைக் கற்றவர்கள், பின்னர், தமிழ் வழி வேதாந்த மரபு ஒன்றை உருவாக்கினர்.

சுமார் 180 ஆண்டுகளுக்கு முன், நகரத்தாரான முத்திராமலிங்கர், தமிழ் வழியில் வேதாந்தம் முழுமையும் பயின்று, அதனை மற்றோருக்கு கற்றுக்கொடுக்க விரும்பி இத் திருமடத்தினை உருவாக்கினார். வேதாந்தக் கருத்துக்களனைத்தையும் உள்ளடக்கிய தமிழ் நூல்களைத் தேர்வு செய்து கோவிலூரில் கற்பித்து வந்தார். ''கற்க வேண்டியவை அனைத்தையும் தாய் மொழியிலேயே கற்கவேண்டும்' எனவும், 'கற்க விரும்புபவனுக்கு,

ஏழ்மை, சாதி வேறுபாடுகள் தடையாகாது' என்பதையும் வற்புறுத்தும் இக்காலத்தவருக்கு முன்னோடியாகத் திகழ்ந்து, இதற்காகவே தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் முத்திராமலிங்க ஞானதேசிக சுவாமிகள் ஆவார்.

இத்திருமடத்தில் கடந்த 180 ஆண்டுகளாகக் கற்பிக்கப்பட்டுவருவது 16 வேதாந்த நூல்கள் ஆகும். இந் நூல்களெல்லாம் மொழிபெயர்ப்பாக அமையாது, தமிழ்ச் செய்யுட்களாக இயற்றப்பட்டதால், இவை மூலத்திற்கு இணையெனப் போற்றப் படுகின்றன. ஆனால் அக்கால வழக்கிற்கேற்ப மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளன. உண்மைப் பொருளான பிரம்மத்தைப் பற்றி நூல்கள் மூலமாகப் படித்தறிந்து கொள்வதற்கும் மேலாக, பிரம்மத்தையே உணர்வதற்குப் பயன்படுமாறு இந்நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இங்கு கற்பிக்கப்படும் தமிழ்வழி வேதாந்தப் பாடத்திட்டம் கல்லூரிப் படிப்பிற்கு இணையானது. 'கோவிலூர் மரபு' எனப் பெயர்பெற்றது. வேதாந்தம் மிகுதியாகக் கற்பிக்கப்படும் வடமாநிலங்களிலேயே, இப்பாடத்திட்டம் மற்றும் மரபுதனை அங்குள்ள முறைக்கு ஒப்பாகக் கருதப்பட்டு, 'கோவிலூர் மண்டலி' எனப் பெருமைப் படுத்தப்பட்டுள்ளது.

தற்கால மாணவர்களுக்கு எளிதில் புரியும்படி அமைய வேண்டும் எனும் பேரவாவினால், இந் நூல்களின் மூலம் பதம் பிரித்தும் மற்றும் பதவுரைகளின் மணிப்பிரவாள நடையை மாற்றி தமிழில் எளிய உரையாகச் செய்தும் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்நூல்களைத் துறவியர் மட்டுமின்றி, குடும்பத்தவரும் கற்கலாம். இலவச உணவு, உடை, இருப்பிடத்துடன், உலகியல் கவலைகளற்ற சூழலில் இந் நூல்களைக்கற்றுப் பயனடைய விரும்புவோர் வரவேற்கப்படுகிறார்கள்.

மேலும் இந்நூல்கள் நாம் மடாதிபதியாகி 10ஆம் ஆண்டு விழா கொண்டாடப்படும் சமயத்தில் வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். இதை நமது திருமடத்தை நிறுவிய ஸ்ரீ ல ஸ்ரீ முத்திராமலிங்க ஞான தேசிக சுவாமிகளின் திருப்பாதக் கமலங்களில் சமர்ப்பித்து அவரது பேரருளை நம் அனைவருக்கும் அருளப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத் சத்

ஸ்ரீ சற்குருநாதன் துணை

உ

சிவமயம்

# அணிந்துரை

அயன் படைப்பாம் இவ்வுலகில் ஏழு வகைப் பிறப்புச் சீவர்கள் உள்ளனர். இவர்களுள் மனித சரீரம் படைத்த சீவர்களே மேலோர் ஆவார்கள்.

மனித சரீரத்தில் தான் இகலோக பரலோக அறிவு உள்ளது. இந்த அறிவினால், இறைவனால் செய்யப்பட்ட சுருதி(வேத)ப் பிராமாணம் உண்டாகிறது. இப்படிப் பல பிறவிகள் அடைந்தும், சுவர்க்காதிப் பதவிகளும் இவ்வுலகில் போக பாக்கியம் பெற்றும் மனித சீவனுக்குத் திருப்தி உண்டாகவில்லை. அவன் இலட்சியமான மாறாத பெரிய, துக்க கலப்பில்லாத பேரின்பம் கிடைக்கவில்லையே என்று ஏமாற்றம் கொள்கிறான். சுருதியை ஆராய்கிறான். அதில் கர்மம், பக்தி, ஞானம் என்னும் மூன்று பிரிவுகளில் தத்துவ ஞானமே சர்வதுர்க்க நிவர்த்திப் பரமானந்தப் பிராப்தி ரூப முத்தியைக் கொடுக்குமே அல்லாது, வேறு எதுவும் கொடுக்காது என்று தெரிந்து கொள்கிறான். அப்படித் தெரிந்து விவேகம் உடையவர்கள் சற்குருவைத் தேடிச் செல்கின்றனர். இவர்களைத்தான் ஜிஞ்ஞாசு (ஞான விருப்பம் உடையவன்) முமூட்சு (மோட்ச இச்சையுடையவன்) என்று சாத்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய முமூட்சுகளைத்தான் காரைக்குடி கோவிலூர் வேதாந்த மடம் வருக! வருக! என வரவேற்கிறது.

காரைக்குடி கோவிலூர் வேதாந்த மடம் சுமார் 180 ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ ல ஸ்ரீ முத்திராமலிங்க ஞானதேசிக சுவாமிகளால் திருநெல்லை அம்மையின் பேரருள் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இம்மடத்தில் தமிழ் வழி வேதாந்த பாடங்கள் நடத்தப்படுகின்றன. அந்தச் சாத்திரங்களின் வரிசை வருமாறு:-

1. நாநா சீவ வாதக் கட்டளை
2. கீதாசாரத் தாலாட்டு
3. சசிவன்ன போதம்
4. மகாராஜா துறவு
5. வைராக்கிய சதகம்
6. வைராக்கிய தீபம்
7. இலட்சணா விருத்தி
8. வேதாந்த சூடாமணி
9. கைவல்லிய நவநீதம்
10. விவேக சூடாமணி
11. அஞ்ஞவதைப் பரணி
12. பஞ்ச தசி
13. ஈசுவர கீதை
14. பிரம்ம கீதை
15. பகவத் கீதை
16. ஞான வாசிட்டம்.

மேற்படி நூல்களுக்கு ஆதாரமாக முதலில் படிக்கவேண்டிய நூல்கள், குட்டித்திருவாசகம், சீடாச் சாரம், கோவிலூர் குசுமாஞ்சலி, பட்டினத்தார் பாடல்கள் ஆகும். இக்கிரம நூல்களைக் குருமுகமாகக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற முறையில் முமூட்சுகளின் வாழ்க்கை அமையும்.

இந்நூல்களைக் கற்க வரும் முமூட்சுகளுக்கு விவேகம், வைராக்கியம், சமாதி சட்க சம்பத்தி, முமூட்சுத்துவம் ஆகிய நான்கு சாதனங்கள் வேண்டும். இவைகளே தகுதியாகும். ஆனால் மேற்படி சாதனங்களை முழுதும் பெற்றிருக்கவில்லை என்றாலும் எட்டில் ஒரு பாகம், அதாவது 1/8 பாகமாவது, பெற்றிருந்தால் கூட அவரை பரிசீலனை செய்து சேர்த்துக்கொண்டு முழுமை பெறச் செய்வர். மற்றபடி கல்வி, வயது, திருமணம் ஆனவரா அல்லது ஆகாதவரா என்ற தகுதிகளைக் கொள்வதில்லை. இன்னும் இந்து மதத்தின் உட்பிரிவுகளான சைவம் முதலிய சமய, ஜாதி, இனம் இவைகளையும் தகுதிகளாகக் கொள்வதில்லை. மேற்படி சாதனங்கள் பெற்றவர்கள், இல்லறத்திலும் உள்ளனர். அவர்களும் இங்கு பாடங்களைக் கேட்டு ஞானம் பெற்றிருக்கின்றனர். இனியும் பெறலாம்.

நமது சந்நிதானம் அவர்கள் மேற்படி நமது கோவிலூர் சம்பிரதாய நூல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். அதாவது, இப்போது முதல் ஆறு நூல்கள் மட்டும் இரண்டு பாகங்களாக வெளிவருகின்றன. பிறகு மற்ற நூல்களும் வெளிவரத் தீவிரமான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள்.

இந்த நூல்களில் நாநாசீவவாதக் கட்டளைக்கு விளக்கமான முன்னுரை எழுதப்பட்டுள்ளது. அப்படியே மற்ற ஐந்து நூல்களுக்கும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் முதல் நூல் நமது அத்வைதக் கொள்கைக்கு ஆதாரமானது. அதனை மனனம் செய்வது நல்லது. இல்லையேல் தினசரி பாராயணம் செய்வது போல தொடர்ந்து படித்து வரலாம். அவ்வாறு செய்தால் மேல் சாத்திரங்கள் படிக்கும் போது விளக்கம் பெறப் பெரிதும் உதவும்.

முதல் மூன்று நூல்கள் பிரம்ம ஞானத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பவைகளாகும். நான்காவது, ஐந்தாவது, ஆறாவது ஆகிய நூல்கள் வைராக்கியத்தை திடப்படுத்தப் பெரிதும் உதவும் அற்புத நூல்கள் ஆகும்.

ஆக இந்த ஆறு நூல்களும் மூலமும் பொழிப்புரையுமாக அமைக்கப்பட்டுள்ளன. இதைப் படிப்பவர்கள் வேதாந்தக் கருத்துக்களை நன்கு அறிய முடியும். இப்படிப் பட்ட நூல்களை வெளிவர உதவுமாறு, அமரர் கல்கியின் மகளான திருமதி ஆனந்தி ராமச்சந்திரன் அம்மையாருக்கு நமது சந்நிதானம் அவர்கள் அருளாணை பிறப்பித்தார்கள். அதற்கு அவ்வம்மையார் தமக்கு உதவியாக யாரை அனுப்புவீர்கள் என வினவ, தமது சீடரும் குமாரபாளையம் ஆனந்த ஆஸ்ரமத்தில் கோவிலூர் வேதாந்த மடம்

சம்பிரதாயப் பாடங்களைக் கிரமமாக மனனம் செய்து பாடம் கேட்டவருமான திரு. குருநாதன் அவர்களை அனுப்புவோமெனக் கூறி அனுப்பினார்கள். ஆக மேற்படி இருவர் முயற்சியினால் மேற்படி ஆறு நூல்கள் வெளிவந்துள்ளன.

நமது 12–வது பட்டம் மகா சந்நிதானம், திருப்பெருந்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகளின் பத்தாண்டுகள் அருளாட்சியில் கோவிலூர் வேதாந்த மடம் கர்மம், பக்தி, ஞானம் என்று சொல்லப்படும் நமது வேதாந்தத்தின் மூன்று பிரிவுகளில் சீரும் சிறப்புமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

*அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்*
*அற்குப ஆங்கே செயல்,*

என்ற திருக்குறளின்படி நிலையில்லாத தமது செல்வத்தை எல்லாம் நிலையான தரும காரியங்களைச் செய்வதற்கே சுவாமிகள் செலவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இம்மனப்பரிபாகம் பெரிதும் பாராட்டுக்குரியதாகும். இந்த அணிந்துரையில் நமது சந்நிதானம் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். பாராட்டுவதற்குச் சொற்கள் கிடைக்கவில்லை என்பது மிகையாகாது.

நமது மகா சந்நிதானம் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழவும், திடகாத்திரமாக இருக்கவும். எல்லாம் வல்ல மாயா விஷிட்ட காரணப் பிரம்மம் பேரருள் புரிவதாகுக.

திருமதி. ஆனந்தி ராமச்சந்திரன் அம்மையாருக்கும், திரு. குருநாதன் அவர்களுக்கும், குமாரபாளையம் ஆனந்தாஸ்ரம முமூட்சுக்கள் சார்பாகப் பெரிதும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது மகா சந்நிதானம் அவர்கள் வாழ்க! வளம் பெறுக!
கோவிலூர் வேதாந்த மடம் வாழ்க! வளம் வளர்க!
மேற்படி மடத்துச் சம்பந்தப்பட்ட அனைவரும் வாழ்க! வளம்பெறுக!

இப்படி ஒரு அணிந்துரை எழுத வாய்ப்புக் கொடுத்த மகா சந்நிதானம் அவர்களுக்கும் திருவருளுக்கும், குருவருளுக்கும் நன்றி! வணக்கம்! வாழ்த்து!

சுபம்

வேணும் ஸ்ரீ சற்குருநாதன் துணை

தவத்திரு. சோம. சச்சிதானந்த சுவாமி,
அத்வைத ஆசிரியர்,
குமாரபாளையம்.

## கோவிலூர் மரபில் பாடத்திட்டமாக உள்ள 16 வேதாந்த நூல்கள்

1. **நாநாசீவ வாதக் கட்டளை**
(சேஷாத்திரி சிவனார் இயற்றியது)

2. **கீதாசாரத் தாலாட்டு**
(திருவேங்கட நாதர் இயற்றியது)

3. **சசிவன்ன போதம்**
(எறும்பூர் தத்துவராய சுவாமிகள் இயற்றியது)

4. **மகாராஜத் துறவு**
(விருத்தாசலம் குமார தேவர் இயற்றியது)

5. **வைராக்கிய சதகம்**
(பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றியது)

6. **வைராக்கிய தீபம்**
(பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றியது)

7. **இலட்சணா விருத்தி**
(கருணாநிதி என்னும் சிதம்பர ஞான தேசிகர் இயற்றியது)

8. **வேதாந்த சூடாமணி**
(துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியது)

9. **கைவல்ய நவநீதம்**
(நன்னிலம் தாண்டவராய சுவாமிகள் இயற்றியது)

10. **விவேக சூடாமணி**
(திருவிடைமருதூர் உலகநாத சுவாமிகள், இயற்றியது)

11. **அஞ்ஞவதைப் பரணி**
(எறும்பூர், தத்துவராய சுவாமிகள் இயற்றியது)

12. **பஞ்ச தசி**
(நித்தியானந்த சுவாமிகள் வீர. சுப்பையா சுவாமிகள் இயற்றியது)

13. **ஈசுவர கீதை**
(எறும்பூர், தத்துவராய சுவாமிகள் இயற்றியது)

14. **பிரம்ம கீதை**
(எறும்பூர், தத்துவராய சுவாமிகள் இயற்றியது)

15. **பகவத் கீதை**
(பாட்டனார் இயற்றியது)

16. **ஞான வாசிட்டம்**
(வீரை. ஆளவந்தார் இயற்றியது)

கோவிலூர் ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக
சுவாமிகள் அருளிச் செய்த

# இலட்சணா விருத்தி

## முன்னுரை

ஸ்ரீ ஆதிசங்கரர் வடமொழியில் அருளிச் செய்த நூல் ''இலக்ஷணாவிருத்தி'' ஆகும். கருத்தால், பிரம்ம நாமாவளி எனப்படும். இந்நூல், கோவிலூர் ஸ்ரீ கருணாநிதி என்னும் ஸ்ரீ சிதம்பர ஞானதேசிக சுவாமிகளால், தமிழில் 115 பாடல்களாக இயற்றப்பட்டது. இந்த பாடல்கள் அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவாக விளங்கும் பிரம்மத்தையே விளக்கி நிற்கின்றது. பிரம்மத்தின் லட்சணத்தை விரிவாக விளக்கிக் கூறுவதால் ''இலக்ஷணா விருத்தி'' எனப்பெற்றது.

சிரவணத்தால் மனனமும், மனனத்தால் நிதித்தியாசனமும், நிதித்தியாசனத்தால் திட அபரோட்ச ஞானமும் உண்டாகும். இவற்றை அடைய வழியாக, இந்நூலின் முதல் 72 பாடல்களில் நிதித்தியாசன யுத்தியும், தொடர்ந்து சமாதி யுத்தியும் விளக்கப்பட்டுள்ளன.

> ''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
> திண்ணியர் ஆகப் பெறின்''

என்று திருவள்ளுவர் அருளிச் செய்துள்ளபடி, அனான்ம சிந்தனைகளை நீக்கி, ஆன்ம சிந்தனைகளைத் தொடர்ந்து எண்ணினால்தான் அஞ்ஞானம் நாசமடைந்து, ''நாமே சச்சிதானந்த வடிவம்'' எனக் கலக்கமறத் தெளிந்து சீவன் முத்தன் ஆகலாம். இதற்குச் சாதனமாக இந்நூல் அமைந்துள்ளது.

உ

சிவமயம்

கோவிலூர் ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக சுவாமிகள் அருளிச் செய்த

# இலட்சணா விருத்தி

## பாயிரம்

### விநாயகக் கடவுள்

***ஆரணம் பன்முகத் தால்அ நாதியே**
**காரண னேஎனக் கழறி ஏத்திடும்**
**பூரண மாஞ்சிவன் புதல்வன் ஆகிய**
**வாரணா னன்அத்தனை வணங்கி வாழ்த்துவாம். 1**

சிவபெருமான் உலகத்திற்குக் காரணன் எனக் கூறி, தொன்று தொட்டு வேதம் துதிக்கிறது. எங்கும் நீக்கமற நிறைந்துள்ள சிவனின் மூத்த மைந்தனாகிய யானை முகத்தை உடைய விநாயகப் பெருமானை உடலால் வணங்கி, வாக்கால் வாழ்த்தி, மனதால் தியானிப்போம்.

### சபாநடேசர்

**காரண ம்ஆனதன் கலையின் ஓர்கலை**
**தாரணி தனில்உறுந் தலங்கண் மேவிவந்து**
**ஆரண உரைப்படி அடங்கும் அம்பலப்**
**பூரண நடேசனைப் போற்றல் செய்குவாம். 2**

நடராசப் பெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களைச் செய்பவர். அவரது ஐந்து தொழில்களுக்கும் காரணமாகிய சத்திகளுள் ஒன்றான அருளானது அதிகாலையில் விரிந்து பரந்து இந்த உலகில் உள்ள அனைத்து தலங்களிலும் உள்ள மூர்த்தங்களிலும் பொருந்தி இருந்து, வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்கிறது. அந்த அந்தத் தலங்களில் இரவில் அர்த்த சாம பூசை நிறைவானதும் அந்த அருளானது நடராசப் பெருமானிடத்திலேயே மீண்டும் வந்து ஒடுங்குவதாக வேதம் அவரது அருளைச் சிறப்பித்துக் கூறுகிறது. இவ்வாறு தில்லை அம்பலத்தில் பூரணமாக எழுந்தருளி, அடியார்களுக்கு அருள்புரியும் நடராசப் பெருமானைப் போற்றி வழிபாடு செய்வோம்.

** ஆரணம் - வேதம்*

### முத்திராமலிங்க சுவாமிகள்

**சித்தரும் பரவா நின்ற சீர்மிகுங் கழனி தன்னிற்**
**பித்தனாம் எனையும் ஆளப் பேரருள் உருவாய் உற்ற**
**முத்தனாம் முத்தி ராம முதல்வன்நற் கமல பாதம்**
**நித்தமும் தொழுது வாழ்த்தி நெஞ்சினில் இருத்தல் செய்வாம். 3**

சிறப்பு மிகுந்த கழனி வாசல் (கோவிலூர்) என்னும் தலத்தில் சித்தர்களும் தவம் புரிந்து வாழ்ந்தார்கள். இந்த தலத்தில் எழுந்தருளி இருந்தவர் சீவன் முத்தரான முத்திராமலிங்க சுவாமிகள். கருணையே வடிவமான அவர் குருவாய் எழுந்தருளி பித்தன் ஆகிய என்னையும் ஆட்கொண்டு அருளினார். ஞானிகளுக்குள் எல்லாம் முதன்மையான முத்திராமலிங்க சுவாமிகளின் செந்தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தினந்தோறும் உடலால் வணங்கி, வாக்கினால் துதி செய்து, மனதினில் தியானித்து நாம் வழிபாடு செய்வோம்.

### பஞ்ச மூர்த்தி துதி

**வானவர் *அசமாம் தொடர்பினால் உலகோர்**
**வழுத்துறும் வன்னிஜங் கரனை**
**வானஅ ரதன மணியறு முகனை**
**மாசறு கொற்றவாள் இறையை**
**வானவர் முதுவன் பால்அன வலவன்**
**வணங்குநல் திருநெலை மாதை**
**வானவ ரதனாம் முத்திரா மேச**
**வள்ளலை வணங்கிவாழ்த் திடுவாம். 4**

மதுப்பிரியன் என்னும் தவ முனிவருக்குக் கொற்றவாளீசுவரன் அருளியபடி, பிரம தேவன், ஆத்ம ஞானத்தை உபதேசித்து அருளிய வரலாற்றை அறிந்தோர்கள் வன்னி வனத்திற்கு (கோவிலூர்) வந்து வழிபடுகிறார்கள். நாமும் ஆத்ம ஞானம்பெற, வன்னி வனத்தில் எழுந்தருளியிருக்கின்ற விநாயகப் பெருமானையும், சிறந்த இரத்தின ஆபரணங்களை அணிந்துள்ள ஆறுமுகப் பெருமானையும், அடியார்களின் அறியாமையை நீக்கி அருளுகின்ற கொற்றவாளீசுவரனையும், நன்மை செய்து அருளும் திருநெல்லை அம்மையையும், தன்னை அடைந்தவர்களுக்கு ஆத்ம ஞானத்தை உபதேசித்து அருளும் முத்திராமலிங்க சுவாமிகளையும் வணங்கி வாழ்த்துவோம்.

---

* *அசம் (அஜம்) = பிறப்பில்லாதது. (ஆன்மா)*

## நூலின் வரலாறு

**பிரமத்திற்கு உரிய வாகும்**
**பெயர்கள்நூற் றுஎட்டி னுக்கும்**
**விரிவதாம் பனுவல் நூலின்**
**விளங்கிய பொருள்கள் உள்ளத்து**
**உரமதாத் தரிக்க வேண்டி**
**உற்றிடுங் கவிகள் ஆகப்**
**பரமசற் குருவாய் ஓங்கும்**
**பகவனின் அருளால் செய்தேன். 5**

பிரம்மத்திற்கு உரித்தான நாமங்கள் நூற்று எட்டினுக்கும், சாத்திரங்களை விரிவாக ஆராய்ந்து, அந்த நாமங்களின் அர்த்தங்கள் விளக்கி சொல்லப்பட்டுள்ளது. இந்த அர்த்தங்களை மனதில் திடமாக நிலை நிறுத்தும் பொருட்டு தகுந்த பாடல்களாக, மேலான சற்குருவாய் விளங்கும், முத்திராமலிங்க சுவாமிகளின் அருளால் இயற்றினேன்.

## நூற்பயன்

**பன்னுபா யிரக்கவிகள் இருமூன் றாகும்**
**பகர்நூலின் கவிநூறோடு ஒன்ப தாகும்**
**அன்னகவி முற்றும்நிறைந்து எங்கும் நின்ற**
**அஸ்திபா திப்பிரிய சொரூபம் ஆன**
**மன்னன்முத்தி ராமலிங்க தேசி கேசன்**
**மருவும்எனது இதயமதுஉற்று உரைத்த தாகும்**
**சொன்னஇந்நூல் தனில்கவிஒன்று அருத்த மேனும்**
**துகள்அறவே அறிந்தவர்கள் பிரமம் ஆவர். 6**

நூலில் சொல்லப்பட்ட கவிகள் நூற்று ஒன்பதாகும். அந்த கவிகள் எல்லாம், எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கின்ற சத்து சித்து ஆனந்தம் ஆன, ஞான வேந்தன் ஆன, முத்திராமலிங்க சுவாமிகள், எனது மனதில் எழுந்தருளி உரைத்ததாகும். இந்த நூலின், ஒரு கவியின் கருத்தாவது குற்றமில்லாமல் அறிந்தவர்கள், சீவ பிரம்ம ஐக்கியத்தை உணர்ந்து, தான் பிரம்ம சொரூபம் என்பதை உணர்வார்கள்.

பாயிரம் முற்றிற்று

# நிதித்தியாசன யுக்தி

## நூல்

### நிர்விகாரி

சொல்லல்உறும் ஐங்கோசம் நாமல்ல அதனினால்
தோற்றல்இறல் நரைதி ரையுடன்
தூய்திலா வாலிபம்அது ஆதியும் தாகபசி
துனுபெலன் பெலமது இல்லோன்
எல்லையற வேசொனஅன் னவையிலோன் ஆதியும்
இகழ்காமம் மதமும் உலோபம்
இழிபயங் குரோதங்கள் ஆதியும் சுகதுக்கம்
இயலும்அபி மானம் மானம்
அல்லல்உட னேகாண ல்ஆதியும் அறியாமை
அறிவொடு சுழுத்தி விடயம்
அவைகள்தமில் வருசுகமும் ஆகஐங் கோசத்தின்
அமர்விகா ரம்எ மக்குஒன்று
இல்லைஅவி தம்பஞ்ச கோசங்கள் உறுவிகா
ரங்கள்அவை இன்மை யினையும்
இலகஅறி கின்றஅறி வேஉருவம் ஆனதால்
யாம்நிரு விகாரி யாமே. 1

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்று சொல்லப்படுகின்ற ஐந்து கோசங்களும் நாமல்ல. ஏனெனில் தூல சரீரமான அன்ன மய கோசம் பிறப்பு இறப்பு உடையது, சுத்தம் இல்லாதது. தூல சரீரமானது, பிறந்து வளர்ந்து வாலிபம் ஆகிய பருவங்களை அடைந்து, முதுமையில் முடி நரைத்து கண்பார்வை குறைந்து மரணமடைகிறது. சூட்சும சரீரத்தில் முதலாவதான பிராணமய கோசம் பசிதாகமும், வலிமையும், வலிமையில்லாததும் ஆகிய தன்மைகளை உடையது. மேலும் கன்மேந்திரியங்களோடு பொருந்திப் பேசுபவன், கொடுப்பவன், செல்பவன் என்றும், அந்த இந்திரியங்கள் இல்லாதபோது ஊமை, முடவன் என்றும் சொல்லப்படுவது பிராணமய கோசம். சூட்சும சரீரத்தில் இரண்டாவதான மனோமய கோசம் காமம், மதம், உலோபம், பயம், குரோதம், பொறாமை முதலிய தன்மைகளை உடையது. சூட்சும சரீரத்தில்

மூன்றாவதான விஞ்ஞானமய கோசம் சுகதுக்கத்துடன், கர்த்தா போக்தா தன்மை உடையது. மனோமயம் விஞ்ஞானமய கோசங்களுடன் பொருந்தியுள்ள ஞானேந்திரியங்கள் பார்த்தல், கேட்டல், சுவைத்தல் முதலிய தன்மைகள் உடையன. காரண சரீரமான ஆனந்தமய கோசம் அறிவு அறியாமையோடு நித்திரையில் வரும் சுகம் முதலிய தன்மைகளை உடையது. இப்படி ஐந்து கோசங்களும் அடைகின்ற விகாரங்கள் எமக்கு ஒருசிறிதும் இல்லை. அவ்விதம் விகாரத்தோடுள்ள ஐந்து கோசங்கள் தோன்றி ஒடுங்குவதையும் தெளிவாக அறிவதால், அறிவே உருவமான யாம் நிருவிகாரியாம்.

### ஞான வடிவம்

**இன்னலே உருவ மான இந்தஜங் கோசங் கட்கும்**
**துன்னும்அக் கோசங் கட்குச் சொல்விகா ரங்க ளுக்கும்**
**அன்னிய மாக நின்றே அவைகளை அறிவ தாலே**
**மன்னிய நாமே ஞான வடிவம்என்று அறிந்து கொள்ளே** **2**

இந்த அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் ஆகிய ஐந்து கோசங்களும் துன்பமே வடிவமானது. ஐந்து கோசங்கட்கும் அவற்றின் விகாரங்கட்கும் வேறாக இருந்தே அவைகளை அறிவதாலே, நிலையான நாமே ஞான வடிவம் என்று அறிந்துகொள்ள வேண்டும்.

### அசங்கன்

**ஞானம்இல்கா லம்தனினும் ஞானம் தோன்றி**
**நண்ணுபினும் மூன்றுஅவத்தை தமிலே தோன்றும்**
**ஊனஉல கங்கள் வரும் போதுங் கூட**
**உதியாமல் ஏகின்ற போதுங் கூட**
**ஈனமுடன் ஏகாமல் இவைக ள்யாவும்**
**இயல்பாகக் காணும்அறி வேசொ ரூபம்**
**ஆனதனால் ஒன்றுடனும் தொடக்கற்று என்றும்**
**அமர்ந்திடுநாம் அசங்கன்என அறிந்து கொள்ளே.** **3**

அஞ்ஞான காலத்திலும், ஞானம் பெற்ற பின்னரும், மூன்று அவத்தைகளிலும் துக்கமான உலகம் தோன்றும் போதும், ஒடுங்கும் போதும், அதனுடன் தோன்றி ஒடுங்கும் தன்மை எனக்கில்லை. மூன்று அவத்தைகளையும், அவற்றில் தோன்றி ஒடுங்கும்

உலகங்களையும் சுயமாக அறிகின்ற அறிவே வடிவம் ஆனவன். இந்த ஐந்து கோசங்களுடன் சம்பந்தமில்லாமல் எப்போதும் இருக்கின்ற நாம் அசங்கன் என்று அறிந்துகொள்.

### சுயம்பிரகாசன்

**சகம்அதனைப் பிரகாசம் செய்யும் *சண்டன்**
***சசி*வன்னி ஆதியையும் அவைவி ளக்கும்**
**அகம்சட்சு முதல்ஐங்கோ சத்தை யும்சொல்**
**அவையின்விகா ரங்களையும் அவையின் தோற்றம்**
**தகவுதிதி மரித்தன்முத லையும்வி ளக்கும்**
**தமைஒன்றும் விளக்கஒணாத் தன்மை யாலே**
**இகழ்விலதா மியாமிகவும் சுயம்ப்ர காசன்**
**என்னஇத யத்துஉறுதி யாக எண்ணே. 4**

உலகத்தை சூரியன், சந்திரன், மின்னல், நட்சத்திரம், தீ முதலியவை விளக்குகின்றன. அவைகளை இந்திரியம், மனம், புத்தி முதலானவை விளக்குகின்றன. இந்த ஐந்து கோசங்களும் அவற்றின் விகாரங்களும் அவற்றின் உற்பத்தி, திதி, நாசம் முதலியவைகளும் நம்மால் விளக்கப்படுகின்றன. இவற்றால் நாம் விளக்கப்படாத தன்மை உடையவன். ஆதலால் இகழ்வில்லாத நாம் சுயம் பிரகாசன் என்று மனதில் உறுதியாக உணர்ந்து கொள்.

### சொப்பிரகாசன்

**நாம்இலமேல் ஐங்கோசம் முதலா கின்ற**
**நலமில்சகங் களைஅறிவார் இலாமை யானும்**
**தீமையிலா அறிவுஉருவே ஆன நம்மால்**
**செகங்கள்எலாம் மிகஅறியப் படுகை யானும்**
***நீமம்அதா யாவையும்இவ் விதமாய்க் காணும்**
**நிகரில் நமை அறிவதற்கு ஓர் அறிவுதானும்**
**தோம்அறவே வேண்டாத படியி னானும்**
**துகள்அறுசொப் பிரகாசன் நாம்என்று ஓர்வாய். 5**

---

** சண்டன் : சூரியன்* ** சசி : சந்திரன்*
** வன்னி : தீ* ** நீமம் : விளங்குதல்*

நாம் இல்லையேல், ஐந்து கோசங்கள், மூன்று அவத்தைகள், அதில் காணப்படும் நன்மையில்லாத உலகங்களை அறிவார் வேறு ஒருவர் இல்லை. குற்றமில்லாத அறிவே வடிவமான நம்மால் உலகங்கள் எல்லாம் நன்கு அறியப்படுகின்றன. தானே விளங்கிக் கொண்டு எல்லாவற்றையும் இவ்விதமாய் அறிகின்ற, ஒப்பில்லாத நம்மை அறிவதற்கு வேறு அறிவு முற்றிலும் வேண்டாதபடியினால் குற்றமில்லாத சொப்பிரகாசன் நாம் என்று அறிவாயாக.

### ஆனந்த ரூபன்

**காலம்ஒரு மூன்றிலும்செய் உபய கன்மம்**
**கருதும்ஐங்கோ சச்செயலாக் காண்கை யானும்**
**சீலம்இல்ஐங்கோ சங்கள் இலாத போது**
**திரள்கன்மம் தோன்றாமை யானும் நாம்இவ்**
**ஏலுசெயற் கோசத்தின் புறம்பு அதானும்**
**யாம்கருத்தா உடன்போக்தா அன்று அதாலே**
**சாலஉறு கன்மபெந்த சென்மம் ஆதி**
**தரித்தல்இல்யாம் ஆனந்த ரூபன் ஆமே. 6**

சென்ற காலத்தில் செய்த, நிகழ்காலத்தில் செய்கின்ற, எதிர்காலத்தில் செய்யக்கூடிய நல்வினை தீவினை ஆகிய இரண்டு கருமங்களும் ஐந்து கோசங்களின் செயல்களாகும். நன்மையில்லாத ஐந்து கோசங்கள் இல்லாதபோது இரண்டு கருமங்கள் சிறிதும் இல்லை. நாம் நல்வினை தீவினைகளைச் செய்கின்ற கோசங்களுக்கு வேறாகும். நாம் செயல்களைச் செய்பவனும் அல்ல, அவற்றின் பலன்களை அனுபவிப்பவனும் அல்ல. நல்வினை தீவினைகளால் கட்டுண்டு, பிறத்தல் இறத்தல் இல்லாதபடியினால் நாம் ஆனந்த வடிவனாகும்.

### சத்தியன்

**தினமாதம் வருடமொடு காலந் தோறும்**
**திகழ்சனனந் தொறும்வரும்மூன்று அவத்தை தம்மில்**
**இனமாகிப் பிறந்துஇறந்து போகும் ஐந்தாம்**
**இழிவான கோசத்தின் வேறாம் ஆன்மாப்**
**பனியான கோசம்உதிப் பதற்கு முன்னும்**
**பஞ்சவித கோசம்அழிந்து ஒழிந்த பின்னும்**

**தனியான ஒருவிதமாய் இருக்கா நின்ற**
**தன்மையினால் சத்தியன்யாம் எனவே ஓர்வாய். 7**

யான் தினம், மாதம், வருடம், யுகம், கற்பம் ஆகிய எல்லா காலங்களிலும் இருப்பவன். புண்ணிய பாவத்திற்கு ஈடாக விளங்குகின்ற ஒவ்வொரு பிறவியிலும் இருப்பவன். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்று அவத்தைகளிலும் இருப்பவன். உதித்து அழிந்து போகும் இழிவான ஐந்து கோசங்களுக்கும் வேறாய் இருப்பவன். ஆன்மாவை மறைப்பதான துன்பமான கோசம் உதிப்பதற்கு முன்னும், ஞானம் அடைந்தவுடன் ஐந்து விதமான கோசங்களும் அழிந்து நாசமான பின்னும் இருப்பவன். ஏகமாய், அறிவு வடிவமாய் இருக்கின்ற இயல்பினால் நாம் சத்தியன் என்று அறிவாயாக.

### நிஷ்கிரியன்

**இகஉலகம் பரஉலகங் களைக்குறித்தே**
**இயற்றுபல விதகன்மம் அவைக ளாலே**
**பகர்உறும்எப் போதினுமே விவக ரிக்கும்**
**பஞ்சவித கோசத்தின் சாட்சி ஆன**
**இகழ்வில்நமைப் புறம்பாகக் காணல் ஆகாது**
**இருந்தாலுங் கிரியைஇலாத் தன்மை யாலே**
**புகழ்தல்உறும் நான்தினம்நிஷ் கிரியன் என்றே**
**புண்ணியநீ அறுதியதாய் எண்ணு வாயே. 8**

இகபர உலக சுகங்களைக் குறித்தே பலவிதமான கருமங்கள் செய்யப்படுகின்றன. இப்படி கருமங்களைச் செய்கின்ற ஐந்து கோசங்களின் செயல்களுக்கும் நாம் சாட்சியாய் இருப்பவன். இகழ்வில்லாத நம்மை வேறாகக் காணலாகாது இருந்தாலும் செயல்கள் இல்லாதவன். (இது சுழுத்தியில் எல்லோருக்கும் அனுபவமாம்.) இப்படி புகழப்படுகின்ற நாம் நிஷ்கிரியன் என்று புண்ணியனே நீ திடமாக எண்ணுவாய்.

### முத்தன்

**ஞானம்உதித்து அதன்பின்புஜங் கோசங் கட்கும்**
**நமைவேறாய் மிகவும்அறிந் ததுவே போல**
**ஞானம் வரும் முனும்கோசம் அவைக்கு வேறா**
**நாம்இருந்தோம் என்பது சித்தித்த லானும்**

**பானம்அலாக் காலத்தும் பஞ்ச கோசம்**
**பண்ணினசஞ் சிதகன்மம் தமைக்கு றித்துப்**
**பானம்அதாம் நாம்கருத்தா ஆகா தாலும்**
**பலவிதசஞ் சிதம்அறும்நாம் முத்தன் ஆமே. 9**

தத்துவ ஞானம் அடைந்தவுடன் ஐந்து கோசங்கட்கும் வேறாக நம்மை நன்கு அறிகிறோம். அதுபோலவே அஞ்ஞான காலத்திலும் கோசங்களுக்கு வேறாகவே நாம் இருந்தோம். ஆதலால் அஞ்ஞான காலத்தில் ஐந்து கோசங்களாலும் செய்த கருமங்களுக்கு நாம் கர்த்தா ஆவதில்லை. அறிவே வடிவமான நாம், சஞ்சித கருமங்கள் அற்றபடியால் முத்தனாம்.

### அகர்த்தா

**ஞானம்உதித்து அதன்பின்பும் கன்மம் செய்யும்**
**நவைஉறும்ஐங் கோசங்கள் தமக்கு வேறாய்**
**ஈனம்இலா நாம்தினமும் இருப்ப தாலே**
**இன்றுமுதல் ஆகாமி யங்கள் ஆக**
**ஊனம்அதாம் பஞ்சவித கோசம் செய்யும்**
**உறுகன்ம பெந்தம் நமக்குஇலை அதாலே**
**ஞானஉரு வாகியநாம் அகர்த்தா என்றே**
**நாடிஉளம் தனில்தினமும் நண்ணு வாயே. 10**

தத்துவ ஞானம் தோன்றிய பின்பு குற்றம் பொருந்திய ஐந்து கோசங்கள் செய்கின்ற இருவினைகளுக்குச் சாட்சியாய், அழிவில்லாத நாம் எப்போதும் இருக்கின்றோம். இன்று முதல் இழிவான ஐந்து கோசங்கள் செய்கின்ற ஆகாமிய சஞ்சித கருமங்கள் ஆகிய கன்ம பந்தம் நமக்கு இல்லை. ஆதலால் அறிவே வடிவாகிய நாம் அகர்த்தா என்று உள்ளத்தில் எப்போதும் நிச்சயித்து இருப்பாய்.

### அபோக்தா

**பிராரத்த கன்மம்அதாற் சரீர நாசம்**
**பெறும்அளவும் வருகின்ற சுகதுக் கத்தை**
**இராகவெறுப்பு உடன்புசிக்கும் ஐங்கோ சங்கட்கு**
**ஈனம்இல்நாம் அந்நியமாய் இருப்ப தாலே**

**விராவுசுக துக்கம்அவை புசிக்கின் றோனாய்**
**மேவாமை யானும்அறி வாம்எ மக்குப்**
**பிராரத்தம் வேண்டாத படியி னானும்**
**பேசுகின்ற அபோக்தாநாம் எனவே ஓர்வாய்.** 11

பிராரத்த கருமத்தால் சரீரம் நாசமடையும் வரை வருகின்ற சுகதுக்கங்களை விருப்பு வெறுப்புடன் ஐந்து கோசங்களே அனுபவிக்கின்றன. அழிவில்லாத நாம் அக் கோசங்களுக்கு வேறாய் இருப்பதாலே சுகதுக்க அனுபவம் நமக்கில்லை. அறிவே வடிவமான நமக்குப் பிராரத்தம் வேண்டாதபடியினால் நாம் அபோக்தா என ஆராய்ந்து தெளிவாயாக.

### நிருபத்திரவன்

**நனிவாத பித்தம்சி லேற்பனம்அது ஆதியாய்**
**நவில்வியா தியும்உ றிச்சல்**
**நலிசூடு *மிடியாதி *பீடையும்தூ லதனு**
**நண்ணுறும் அலாது சூக்க**
**தனுவினுக்கு இலதாலும் மாமயக் கம்குரோ**
**தம்காம உலோபம் ஊமை**
**சார்செவிடு இலச்சைமுதல் ஆனசுர மேசூக்க**
**தனுவினுக்கு அன்றி மூல**
**தனுவினுக்கு இல்லாத தாலுமே காரியத்**
**தனுஆக்கு சுரமும் மூல**
**தனுக்குஉறுத லாலும்இத் திரிவிதசு ரங்களும்**
**தனுவின்அயல் சீவ னுக்கே**
**சனியாது அதாலுமே அறிவாம் நமக்குஇப்ர**
**சங்கம்வர ஞாயம் இல்லாத்**
**தன்மையால் நிருபாதி யாகின்ற நாம்மிகத்**
**தவறுஇல்நிரு பத்தி ரவனே.** 12

* மிடி = வறுமை
* பீடை = துன்பம்

வாதம், பித்தம், சிலேத்துமம் ஆனவை மிகுந்தாலும் குறைந்தாலும் உண்டாகின்ற வியாதிகளும், சளியால் மூக்கு உறிஞ்சுதலும், வெப்ப நோயும், வறுமை முதலிய துன்பங்களும் தூல சரீரத்திற்கு அல்லாது சூட்சும சரீரத்திற்கு அவை இல்லை. மோகம், சினம், ஆசை, ஈயாமை, வெட்கம் முதலிய மனதின் வியாதிகளும், ஊமை, குருடு, செவிடு முதலிய ஞானேந்திரிய வியாதிகளும் சூட்சும சரீரத்திற்கு அன்றி காரண சரீரத்திற்கு இல்லை. தூல, சூட்சும சரீரங்களைத் தோற்றுவிப்பதே காரண சரீரத்திற்கு வியாதியாகும். இப்படி தூல , சூட்சும, காரண சரீரங்களுக்குச் சொல்லப்படும் மூன்றுவித வியாதிகளும், சரீரத்தின் வேறான சிதாபாசனிடத்தில் இல்லை. சிதாபாசனிடத்தில் இல்லாத வியாதிகள், அறிவே வடிவான நம்மிடத்தில் வர நியாயம் இல்லாத்தன்மையால் இந்த உபத்திரவங்கள் இல்லாத நாம் குற்றமில்லாத நிருபத்திரவன் ஆகும்.

### நிர்லேபன்

**பகர்தல்உறு தூங்கினவன் கையில் தங்கும்**
**பதார்த்தம்அது நீங்கிமிகத் தானே செல்லும்**
**தகைமையுறல் அன்னமயம் ஆதி யான**
**தகும்பஞ்ச கோசங்கள் ஆன்மா வாக**
**நிகழ்தல்உறும் எமக்குஅயலாய்த் தோன்றி வேறாய்**
**நின்றுபுறம் பேஇறந்து நீங்க லாலே**
**இகழ்விலதாய் இருக்கின்ற நாமே நித்தம்**
**ஈனமிலா நிருலேபன் எனவே கொள்வாய். 13**

தூங்கும் முன்பு கையில் பிடித்துக்கொண்டிருந்த பொருள், தூங்கினவுடன் கையிலிருந்து தானே நழுவிவிடும். அதுபோல அன்னமயம் முதலிய ஐந்து கோசங்கள், ஆன்மாவான, சுயமாக விளங்குகின்ற நமக்கு அன்னியமாகத் தோன்றி, வேறாய் இருந்து நாசமாகி நீங்கிவிடுகின்றன. ஆதலால் இகழ்தல் இல்லாமல் எப்போதும் இருக்கின்ற, நாமே அழிவில்லாத நிருலேபன் என்று அறிந்து கொள்வாய்.

### நிர்ச்சம்பந்தன்

**தான்அலவாய் உறும்பஞ்ச கோசம் தன்னைத்**
**தான்ஆகும் படியாயும் அவற்றின் வேறாய்**
**ஞானஉரு வாகும்நமை நமக்கு வேறாய்**
**நண்ணவுமே வேண்டுமெனத் தவஞ்செய் தாலும்**

**ஈனம் அலால் ஆகாத படியி னானும்**
**இயல்நித்ய அபரோட்சம் எமக்குளக் காலும்**
**ஊனம்உறும் கோசதொடக்கு அற்ற தாலும்**
**ஒப்பில்நிர்ச்சம் பந்தன் அகம்எனவே ஓர்வாய். 14**

அறிவில்லாத சடமாய் இருக்கின்ற ஐந்து கோசங்கள் அறிவு வடிவமாக ஆக வேண்டுமெனவும், கோசங்களுக்கு வேறாய் அறிவே வடிவமான நம்மை, நமக்கு வேறாகக் காணும்படி வேண்டுமெனவும், தவம் செய்தாலும் இகழ்ச்சி உண்டாகுமே அல்லால் அவ்வாறு ஆகாது. இயல்பாக சுயமாக விளங்கிக் கொண்டிருக்கும் எமக்கு எப்போதும் கேடு உறுகின்ற ஐந்து கோசங்களின் சம்பந்தம் இல்லை. ஆதலால் ஒப்பில்லாத நிர்ச்சம்பந்தன் நான் என்று நிச்சயிப்பாய்.

**கூடஸ்தன்**

**ஆற்றுகொலன் அடைக்கல்லே கூடம் மற்றது**
**அவிகாரம் ஆனாலும் அயவி காரம்**
**தோற்றுதல்போல் அறிவதனில் பகுதி ஈசன்**
**துவிதசகம் சீவர் உதித்து இறத்த லானும்**
**தோற்றிஅவை அழிவதற்கு மூல மாகிச்**
**சுயம்சித்தாய் இருக்கின்ற நாம் அவற்றில்**
**சாற்றுபற்று அற்றுஉறலாலும் மிகவும் யாமே**
**சார்அகர்த்தா ஆகியகூ டஸ்தன் ஆகும். 15**

கொல்லனின் பட்டறையில் உள்ள பட்டறைக்கல்லே கூடம் எனப்படும். அந்த பட்டறைக்கல்லின் மீது காய்ச்சிய இரும்புத் துண்டுகளை வைத்து அடிக்கும்போது, இரும்புத்துண்டுகள் வளையுமே அன்றி பட்டறைக்கல் எந்தவித மாற்றமும் அடைவதில்லை. அதுபோல் அறிவே வடிவமாகிய நம்மிடத்தில் பிரகிருதி, ஈசுவரன், ஈசுவரனாற் சிருட்டிக்கப்பட்ட உலகம், சீவனாற் சிருட்டிக்கப்பட்ட உலகம், சீவன் எல்லாம் தோன்றி அழிகின்றன. அவை தோன்றி அழிவதற்கு ஆதாரமாயும் இயல்பாகவே அறிவு வடிவமாயும் நாம் இருக்கின்றோம். மூலப்பிரகிருதி, ஈசுவரன், உலகம், சீவர்கள் என்று கூறப்படும் அவற்றில் நாம் பற்றற்று இருக்கின்றோம். ஆதலால் எப்போதும் அகர்த்தா ஆகிய நாம் மாறுதல் அடையாத கூடஸ்தன் ஆகும்.

## ஆத்மா

**நான்என்று மானத்துக்கு இடம தாக**
**நவில்கின்ற ஆன்மாவாய்த் தோன்றா நின்ற**
**ஈனம்உறு புத்ரஆதி தூல சூக்க**
**இருதேகம் சீவனுமே வேறு பேர்பெற்று**
**ஊனம்இல்தன் புறம்புஆகித் தோன்ற லாலும்**
**உறும்இவைகட்கு அப்பாலாய் நிருவி கார**
**ஞானகனப் பிரமம்அதாம் தானும் வேறாய்**
**நண்ணாது அதாலும்நாம் ஆத்மா ஆகும்.** **16**

அழிவுறுகின்ற மைந்தன், மனைவி, மற்றை சுற்றமும், நான் என்று அபிமானிக்கப்படுவதாகவும், ஆன்மாவாயும் தோன்றுகின்றன. தூலம் சூட்சுமம் ஆகிய இரண்டு தேகமும், அவித்தையில் பிரதிபிம்பனான சீவனும், அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் ஆனந்தமய கோசம் என பெயர் தனித்தனியாக இருக்கின்றன. நாசமில்லாத நமக்கு வேறாகவும் தோன்றுகின்றன. நாம ரூபங்களான இவைகளைக் கடந்து வியாபாகமாய், விகாரமில்லாத அறிவு வடிவமான பிரம்மம் அவைகட்கு வேறாய் இல்லாததாலும் நாம் ஆத்மா ஆகும்.

(கனவில் கனவு உலகை அறிபவனுக்கு, கனவு, உலகத்தின் அறிவு, அறியப்படும் கனவு என மூன்று விஷயங்கள் உள்ளதுபோல் தோன்றுகிறது. இவை மூன்றும் வெவ்வேறு போல தோன்றினாலும் இவை அனைத்தும் ஆத்மாவாகிய நம்மிடத்திலேயே தோன்றி ஒடுங்குவது விழித்தவுடன் நன்கு விளங்குகிறது. அதுபோல தூல சூட்சும காரண சரீரங்கள் ஆத்மாவாகிய நம்மிடத்தில் தோன்றி ஒடுங்குவதால் இவை ஆத்மா ஆகா. இவைகட்கு அப்பாலாய் நிருவிகாரமாய், அறிவு வடிவமாய் இருக்கும் நாமே ஆத்மாவாகும்.)

## நிர்த்தோஷன்

**தோடம்எனும் வாதம்முதல் ஆன தோடும்**
**துன்னியிடும் இராகஆதி அதனி னோடும்**
**பீடுபெறு ஞானஅஞ்ஞா னங்க ளோடும்**
**பிறத்தலுடன் இறத்தலுமே மயம் அதான**
**சேடிலதாம் தூலஉடல் சூக்க தேகம்**
**செப்பியிடும் சீவனொடு பூதங் கட்கும்**

**கேடிலதாய் வேறாகி இருப்ப தால்நாம்**
**கிளத்தியநிர்த் தோஷன்என அறிய வேண்டும். 17**

வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய தோஷங்கள் தூல சரீரத்திற்காம். விருப்பு வெறுப்பு முதலிய தோஷங்கள் சூட்சும சரீரத்திற்காம். பெருமையைத் தருகின்ற ஞானம், அஞ்ஞானம் ஆகிய தோஷங்கள் சீவனுக்காம். மேலும் இவைகள் பிறத்தல் இறத்தல் ஆகிய தோஷங்களை உடையது. இப்படி தோஷங்களோடு கூடிய தூல சரீரம், சூட்சும சரீரம், சீவன், சடமான ஐந்து பூதங்கள் இவைகட்கு வேறாகி நாசம் இல்லாததாய் நாம் இருக்கின்றோம். ஆதலால் நாம் சொல்லிய நிர்த்தோஷன் என அறிய வேண்டும்.

### அப்பிரமேயன்

**ஆனபொறி யால்அறிதல் பிரமே யம்தான்**
**அன்றிஅறி யாததுஅப்ர மேய மாகும்**
**ஊனஇந்தி யத்தறிசத் தாதி கட்கும்**
**உட்கரணத் தறிகால திக்கு வஸ்து**
**ஆனதுஎனும் பிரகிருதி புருஷ ருக்கும்**
**அந்நியமாய் இருகரணத்து அறிய லாகாது**
**ஈனம்இலாது அவைகளையும் அறிவ தாலே**
**இலங்குசற்சிற் சுகநாம்அப் பிரமே யன்தான். 18**

சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் ஆகிய பொறிகளால் அறிவது பிரமேயம். இப்படி அல்லாமல் அறியப்படாதது அப்பிரமேயமாகும். குற்றமுடைய இந்திரியங்களால் அறியப்படுகின்ற சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் முதலியவைகட்கும், அந்தக்கரணங்களால் அறியப்படும் காலம் திக்கு முதலியவைகட்கும், பொருள் ஆனது எனப்படும் மூலப்பிரகிருதியில் பிரதிபிம்பமனான ஈசுவரன், சீவனுக்கும் வேறானவன். வெளிக்கரணங்களாகிய ஞானேந்திரியங்கள், உட்கரணமாகிய அந்தக்கரணம் ஆகிய இரண்டு கரணங்களாலும் அறியப் பெறாதவன். நாசமில்லாது, அவைகளை அறிவதாலும், எப்போதும் சுயமாக விளங்கிக் கொண்டு இருக்கும் சச்சிதானந்தமான நாம் அப்பிரமேயுன்.

### பிரத்தியக்ஷன்

**ஏகதே சத்துடன்எக் காலும் தோன்றும்**
**இயல்தமோ காரியமுப் பான்ஒன் றிற்கும்**

**ஆகம்எலாம் எக்காலும் தோன்று ஈசற்கும்**
**அங்கங்கள் முழுதினும்எக் காலந் தோறும்**
**சோகமுடன் தோன்றுஉறுசீ வர்க்கும் வேறாய்ச்**
**சொல்காலம் அவத்தைமுழு தினுமே நான்என்று**
**ஆகுபிரத் தியக்ஷமதாய் விளங் கலாலே**
**அறிவாம்நாம் பிரத்தியக்ஷன்ஆகும் தானே. 19**

தமோகுண காரியமான சூட்சும சரீர தத்துவங்கள் 20, தூல சரீர தத்துவங்கள் 6, பஞ்ச பூதங்கள் 5 ஆக தத்துவங்கள் 31ம் பிரம்ம சொரூபத்தில் ஏக தேசத்தில் எப்போதும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. சகல சரீரங்களிலும் எப்போது வியாபித்துள்ளவன் ஈசுவரனாம். அங்கங்கள் முழுவதும் எப்போது வியாபித்து இருக்கின்றவன் சீவனாம். அறிவு வடிவமாகிய நாம் இந்த தத்துவங்கள் 31, சமட்டிதூல சரீர அபிமானியான ஈசுவரன், வியட்டி தேக அபிமானியான சீவன் இவை யாவைக்கும் வேறானவன். சென்றகாலம், நிகழ்காலம், எதிர்காலங்களிலும், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்று அவத்தைகளிலும் நான் என்று பிரத்தியட்சமாய் விளங்குபவன். ஆதலால் பிரத்தியக்ஷன் ஆகும்.

### அணு

**பலகணி வெயிலினிற் பரந்து தோன்றிய**
**சலபர மஅணுபோற் சாட்சி யாம்எமை**
**அலைவுஉறு பொறிஅறி தற்குஅ லாததால்**
**இலகுநாம் அணுஎன இதயத்து உன்னுவாய். 20**

ஜன்னல் வழியாக விளங்குகின்ற சூரியனின் கதிர்களில் பரந்து தோன்றி சலனமாகிக் கொண்டிருக்கின்ற அதி நுண்மையான தூசி போல், நாம் தத்துவங்கள் 31, சகலசரீர அபிமானியாகிய ஈசுவரன், சரீர அபிமானியாகிய சீவன் ஆகிய யாவைக்கும் சாட்சியாய் இருப்பவன். புற நோக்குடன் விஷயங்களிலே அலைந்து கொண்டிருக்கின்ற பொறிகளால் அறிவதற்கு இயலாதவன். ஆதலால் சுயமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற நாம் அணு என மனதில் சிந்தித்து உணர்வாய்.

### அசரீரன்

**பகரும்உடல் உறுங்கன்மி யோகி லோக**
**பாலர் வைசு வானரன்ஆ தியசீ வர்க்கும்**

**செகசரீரம் உடையஈசன் தனக்கும் வேறாய்த்**
**திகழ்உறுநாம் சிற்சுகசத்து உருவ தாலும்**
**தகைமைநமக்கு இவ்விதம்ஓர் உடலம் இல்லா**
**தாலும்உடல் எனதுஎன்அனு பவத்தால் எற்கும்**
**மிகஅனியம் அனித்தம்எனும் யுத்தி லோகம்**
**மேவும்அத னாலும்அச ரீரன் நாமே. 21**

சரீரத்தைப் பொருந்திய சீவன், யோகி, பூமியைக் காக்கின்ற லோகபாலர்கள், அக்கினி, யமன், பிரஜாபதி முதலிய தேவர்கள் ஆகியோருக்கும், தூல பஞ்ச பூதங்கள், மற்றும் சகல சரீரங்களையும் தனக்கு சரீரமாக உடைய ஈசுவரனுக்கும் வேறாய் சுயமாக விளங்கிக் கொண்டிருப்பவன். சச்சிதானந்தம் ஆகிய தன்மை உடைய நமக்கு ஓர் சரீரமும் இல்லை. எல்லோருக்கும் சரீரம் எனது என்னும் அனுபவம் இருப்பதாலும், இந்த சரீரம் நமக்கு அன்னியம், அநித்தியம் என்னும் ஊகமும் மிகவும் பொருத்தமாக இருப்பதாலும் அசரீரன் ஆகும்.

### நிரிந்திரியன்

**அவன்அவன் சாதியின் தொழில்அவர் அவர்க்குஉறலின்**
**அனியர்சா தித்தொ ழில்அதும்**
**அமருசா தாரணம்அ தாயில்அது போல்தேகம்**
**அதனிலே வேறு பட்ட**
**அவம்உறும் பொறிகள்பல் விதம்எனும் காரியத்து**
**ஆகும்மற்று ஒன்று செய்ய**
**அறியாமல் அதன்அதன் காரியம் கைவந்து**
**அதுவும்நனவு அதனின் மட்டும்**
**விவகரித் துக்கனவி னொடுசுழுத் தியில்இன்ன**
**விடமென்று காணல் அற்றே**
**வீகின்ற இந்தியத்து அயலாக அவையும்அவ்**
**வியாபாரம் அவையும் அறியும்**
**அவிரும்அறி வேஉருவ மாகிஇந் தியம்உதித்து**
**அடங்கல்அவை தொழில் கள்தம்மை**
**அறிதலுடன் அசையாமல் உறுநாம் நிரிந்திரியன்**
**ஆகுமென அறிகு வாயே. 22**

அவர் அவரது குலத்தொழில் அவரவர்க்கு இயல்பாக அமையுமே யல்லாது வேறு குலத் தொழில் ஒருவருக்கு இயல்பாக அமைவதில்லை. அதுபோல தூல சரீரத்திற்கு வேறுபட்ட, கேடு அடைகின்ற இந்திரியங்கள் வேறு வேறு காரியங்கள் செய்ய உதவுகின்றன. ஞானேந்திரியம் ஒன்று மற்றொன்றின் குணத்தை அறியாது. கருமேந்திரியம் ஒன்று மற்றொன்றின் தொழிலைச் செய்யாது. அவையும் அதன் அதன் காரியம் மட்டும் செய்து நனவில் மட்டும் செயல்பட்டுக் கனவிலும் சுழுத்தியிலும் செயல்படுவதேயில்லை. அந்த இந்திரியங்களுக்கு வேறாய் இருந்து அவற்றின் செயல்களை அறிகின்ற சுயமாக விளங்கும் அறிவே வடிவமான நாம், இந்திரியங்கள் தோன்றி ஒடுங்குவதையும், அவற்றின் தொழில்களையும் அறிவதுடன், சலனமில்லாமல் இருக்கின்றதால் நிரிந்திரியன் ஆகும் என அறிந்து கொள்வாய்.

### அப்பிராணன்

**பெலம்உடனே பெலம்இலதாய்க் காணப் பட்டும்**
**பேசுபசி தாகம்உடன் தோற்றப் பட்டும்**
**நலம்அதுடன் சீவித்தேன் மரித்தேன் என்று**
**நாடும்நனவு அதனில்விவ கரித்தும் மற்றுஅப்**
**பலவிதமாம் அவத்தைகளிற் காணல் ஆகா**
**ப்ராணனுக்கும் வேறாய்அத் தொழிலைக் கண்டும்**
**நலமில்அதன் தன்மம்இன்றிச் சாட்சி ஆகும்**
**நாம்அசைவில் அப்பிராணன் எனவே ஓர்வாய். 23**

வலிமையுடனும் வலிமையில்லாததாய் காணப்பட்டும், பசி என்றும் தாகம் என்று தோற்றப்பட்டும், நான் நன்றாக வாழ்ந்தேன் என்றும் நான் இறந்து போவேன் என்றும் நனவின் கண்ணே மட்டும் சொல்லப்படும். சொப்பன சுழுத்தி அவத்தைகளில் வலிமை வலிமையின்மை, பசி தாகம், சீவித்தேன் மரித்தேன் என்பவை விளங்குவதில்லை. இந்தப் பிராணனுக்கும் வேறாய் அதன் தொழில்களை அறிந்து கொண்டு, நன்மையில்லாத அதன் தருமங்கள் இன்றி சாட்சியாய் இருக்கும் நாம் சலனமில்லாத அப்பிராணன் என்று அறிந்து கொள்வாய்.

### அமனசு

**ஒரும் ஒரு கூத்தாடி பலவே ஷத்தை**
**உறுதல்எனக் காமஆதி பலவேஷங் கொண்டு**

**ஆரும்நனவு அதனில்வெளிச் சகமே ஆகி**
**அயர்கனவில் உட்சகமே ஆகி மற்றுஅச்**
**சீர்இலதாம் சுழுத்தியினில் காணாது ஏகும்**
**தீதுஆன மனச்செயலைக் கண்டு கொண்டு**
**சேரும் அதற்கு அன்னியமாய்ச் சாட்சி ஆகித்**
**திகழ்உறும்நாம் அம்மனசுஎன்று அறிவாய் மைந்தா. 24**

சீடனே, ஒரு கூத்தாடியே பல வேடங்களில் நடிப்பது போல, மனம் ஒன்றே நனவில் விருப்பு வெறுப்பு வேடங்கொண்டு புற உலகில் தோன்றுகின்றது. கனவில் உள்ளே தோன்றும் கற்பித உலகமாய் ஆகிறது. சிறப்பில்லாத சுழுத்தியில் காண இயலாதபடி ஒடுங்குகின்றது. தீதான மனதின் செயலை அறிந்து கொண்டு, நனவிலும் கனவிலும் வந்து சேரும் அந்த மனதிற்கு சாட்சியாய் இருக்கிறது. ஆதலால் சுயமாய் விளங்கிகொண்டு இருக்கும் நாம் அம்மனசு (மனமற்றவன்) என்று அறிவாய்.

### நிர்மலன்

**அறைகின்ற மலமூத் திரங்குப்பை சேறதுஇழி**
**வாம்*சுடலை சேரி முதலாய்**
**அளவில்மலம் மேவுற்ற புவியொடுக லங்கல்புகை**
**ஆகின்ற புழுதி முதலாய்**
**உறைகின்ற மலம்மேவும் நான்குபூ தத்தின்உடன்**
**உறுகோழை சளிபித் தமும்**
**ஒழுகின்ற மலமூத்ரம் முதலான மலம்உற்ற**
**ஊனம்உறு தூலதனுவோடு**
**உறுகின்ற காசபட லம்குரோத காமம்முதல்**
**ஒழிவில்மலம் உற்ற சூக்க**
**உடலின்உடன் ஞானஅஞ் ஞானமலம் உறுசீவன்**
**உடன்ஐந்து தொழில்கள் ஆதி**
**நிறைகின்ற மலமுற்ற ஈசற்கும் வேறாகி**
**நீண்மலமும் அற்று மிகவும்**
**நிகழ்கின்ற ஞானஆ னந்தவடி வானநாம்**
**நிருமலன் என்று கொள்வாய். 25**

---

* சுடலை = சுடுகாடு

மலம், மூத்திரம், குப்பை, சேறு, இழிவான சுடுகாடு, சேரி முதலியவை பிருதிவிக்கு அளவற்ற அசுத்தமாம். கலங்கல், குமிழி, நுரை, பாசி முதலியவை அப்புவுக்கு அசுத்தமாகும். புகை, பொறி முதலியன அக்கினிக்கு அசுத்தமாகும். புழுதி, நற்கந்தம், துற்கந்தம் முதலியவை வாயுவுக்கு அசுத்தமாகும். இப்படி மலம் மூத்திரம், கலங்கல், புகை, புழுதி முதலான அசுத்தங்களுடன் கூடி இருப்பது பிருதிவி, அப்பு அக்கினி, வாயு அகிய நான்கு பூதங்களின் தன்மையாம். இழிவான தூல சரீரத்திற்கு கோழை, சளி, பித்தமும், மலம், மூத்திரமும் அசுத்தமாம். காசபடலம், குரோதம், காமம், செருக்கு, உலோபம், பொறாமை முதலியன சூட்சும சரீரத்திற்கு அசுத்தமாம். சீவனுக்கு அறிவு, அறியாமை அசுத்தமாம். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்கள் ஈசுவரனுக்கு அசுத்தமாம். இப்படி அசுத்தமுடைய பூதங்கள், சரீரங்கள், சீவன், ஈசுவரன் ஆகியவற்றிற்கு வேறாக இருந்து கொண்டும், அவைகளுக்கு விரிவாக சொல்லப்பட்ட அசுத்தங்களும் அற்றவன். ஆதலால் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற சத்து, சித்து, ஆனந்த வடிவமான நாம் நிருமலன் என்று அறிந்து கொள்வாய்.

### சுத்தன்

**கொள்கின்ற சாதிவன்ன ஆச்சிரமம் அதனுடன்**
**கூறுஅதன் அதன்ம தன்மம்**
**கூடும்அதன் உறுபயன தாம்சொர்க்க நரக ஆதி**
**குறைவில்அதின் மிச்ச மான**
**உள்கின்ற கோடிபவம் முதல்தொடக் குற்றுமிக**
**உலைகின்ற சீவ ருடனே**
**உளகிருபை அவதாரம் மாற்சரியம் முதலான**
**உறு தொடக் குற்ற ஈசன்**
**என்சீவர் சங்கத்து அசுத்தமுறு பூதங்கள்**
**யாவுக்கும் வேற தான**
**யாம்இவைகள் உடன்உற்று நின்றிடினும் எமைஅசுத்**
**தங்கள்எய் தாது அதாலும்**
**விள்கின்ற இவைகள்நம் முடைவிவர்த் தங்களாய்**
**மேவியே உறுத லானும்**
**விமலசித்து ஆகின்ற நாம்சுத்தன் என்னவே**
**விளங்கிட அறிந்து கொள்ளே. 26**

தூல தேகத்தின் தருமமான சாதி, வருணம், ஆச்சிரமங்களைப் பொருந்தி அவர் அவர்க்குள்ள தர்ம அதர்மங்களைச் செய்து, அவற்றின் பயன்களாகிய சொர்க்க நரகங்களைச் சேர்வதும், எஞ்சிய வினைகளுக்கு ஈடாக அனந்த கோடி சனன மரணங்களில் தொடர்புற்று அலைவது சீவனுக்கு அசுத்தமாம். ஈசுவரனுக்கோ கருணையினால் அவதாரம் எடுப்பது முதலியன அசுத்தமாம். இழிவான சீவர்கள் கூட்டமாக சேர்ந்து வாழ்வதால் பூதங்களும் அசுத்தம் உறுகின்றனவாம். சீவன், ஈசுவரன், பஞ்சபூதங்கள் இவை யாவைக்கும் நாம் வேறானவன். இவைகளுள் பொருந்தி இருந்தாலும் நம்மை அவற்றின் அசுத்தங்கள் பற்றாது. சீவன், ஈசுவரன், பிரபஞ்சமாய் சொல்லப்படுகின்ற இவைகள் அதிட்டானமாகிய நம்மிடத்தில் கற்பிதமாய் தோன்றியிருப்பதாலும், மலமில்லாத அறிவே வடிவான நாம் சுத்தன் என்று தெளிவாக அறிந்து கொள்வாயாக.

### புத்தன்

**அறைதல்உறு தானாயும் கூடி நின்றும்**
**அறிவற்ற கடம்ஆதி பூதா திக்கும்**
**முறைதனக்கோர்அ றிவிலதாய் ஒன்றி னோடே**
**உறுதலினால் அறிவெனவே தோற்று கின்ற**
**குறைவுறுமூன் றுஉடல்சீவன் மாயை கட்கும்**
**கூறல்உறும் வேறாகி அவைகள் தம்மைக்**
**கறையின்றிப் பிரகாசம் செய்துஎப் போதும்**
**கனபோத வடிவாம்நாம் புத்தன்ஆமே. 27**

பஞ்ச பூதங்களும், அவற்றின் கலப்பினால் தோன்றுகின்ற குடம் போன்றவையும் எப்போதும் சடங்களாம். ஈனமான மூன்று சரீரங்களையுடைய சீவனும், மாயாப் பிரதிபிம்பனான ஈசுவரனும் ஏகமான நமது சம்பந்தத்தினாலே அறிவுடையன போலத் தோன்றுகின்றன. பஞ்சபூதங்கள், சீவன், ஈசுவரன் ஆகிய இவற்றிற்கு வேறாய் இருந்து கொண்டும், அவைகளை விளக்கிக் கொண்டும் உள்ள நாம், எப்போதும் பூரண அறிவு வடிவான புத்தன் ஆகும்.

### சர்வக்ஞன்

**அறிதலுடன் அறிதல்இலது ஆகியே மூவித**
**அவத்தையுறு ஞேயத் தையும்**

**அறியாமை உடன்அறிவ தாய்இலகு சர்வபுத்தி**
**ஆகின்ற ஞானத் தையும்**
**அறியும்அவன் அறிவிலோன் எனஇலகும் உயிர்களாய்**
**அமர்ஞா துருக்கள் தமையும்**
**அவர்களின் நிவிர்த்திபிர விர்த்தியையும் அதுவதற்கு**
**ஆம்பலனும் எப்பொ ழுதுமே**
**அறுதியாய் இனதுஎன அவத்தைமூன்று அதனினும்**
**அறிகின்ற வடிவ மேநம்**
**அளவிலா உருவான தாலும்இத் திரிபுடியை**
**அழிவில்நாம் இல்லை ஆயின்**
**அறிவர்இல தாலும்நாம் சகலதிரி புடிகளையும்**
**அறிகின்ற தாலும் இவிதம்**
**அனைத்துஎன அவத்தையும் அறியும்நாம் சர்வக்ஞன்**
**ஆகும்என்று அறிகு வாயே. 28**

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்று அவத்தைகளிலும் அறிந்த, அறியாத விஷயங்கள் ஞேயங்களாம். விஷயங்களை அறிந்த அறியாத தன்மையான புத்தியே ஞானம் எனப்படும். அறிபவன், அறியாதவன் என விளங்கும் சீவனே ஞாதுரு எனப்படுவான். அறியப்படும் பொருள் ஞேயம், அறிவு ஞானம், அறிபவன் ஞாதுரு ஆகிய இம்மூன்றும் திரிபுடி எனப்படும். இத்திரிபுடியின் நிவிர்த்தி பிரவிர்த்திகளையும், அதன் பலன்களையும் எப்போதும் திடமாய் இன்னது என மூன்று அவத்தைகளிலும் அறிகின்ற அறிவு வடிவமே நம் அகண்ட உருவமாகும். இந்த திரிபுடியை நாசமில்லாத நம்மையன்றி அறிபவன் வேறு எவனுமேயில்லை. நாமே சகல திரிபுடிகளையும் அறிந்துகொண்டு இருப்பவனாம். இவ்விதம் ஞேயம், ஞானம், ஞாதுரு என அனைத்தையும் மூன்று அவத்தைகளிலும் அறிகின்ற நாம் சர்வஞ்ஞன் என்று அறிந்துகொள்வாய்.

### பரமானந்தன்

**தனதானி ஆதிசெல் வம்பிரியம் அதுஇரா**
**சாதியால் நீங்கு காலை**
**தவிராத கையுடைமை பிரியம்அது செலவுஆதி**
**தன்னினால் ஒருவு காலை**

**இனமான புத்திரஆதி பிரியம்அவர் அனல்உற்ற**
***இலமதால் நீங்கு காலை**
**இழிதூல உடல்பிரியம் அதுபுழுதி யால்நீங்கில்**
**இந்தியம் பிரியம் அதுவும்**
**பினமாம்பி ராணகண் டமதான வாக்கினைப்**
**பெறுபோது அகன்று சீவன்**
**பிரியம்அது வும்பிராணன் இறுகாலை விட்டுஎக்**
**காலுமே பிரிய உருவாம்**
**கனமான ஆன்மாவை அன்றிஒன்று இவ்விதம்**
**காணாத படியி னாலும்**
**கருதும்எக் காலுமே தானாக உற்றநாம்**
**கழறு பரமா னந்தனே.** **29**

தனம், தானியம், வீடு, நிலம் முதலியவை சுக சாதனம் ஆனதால் அவற்றில் பிரியம் உண்டாகும். அரசபயம், வெள்ளம் முதலியவற்றால் அவை நீங்க நேரிடும்போது, அவற்றை விட்டொழித்து, கிடைத்த தனத்தின் மீது பிரியமாகிறது. அந்த தனமும் செலவு, களவு முதலியவற்றால் இழக்கப்படும்போது சுற்றமான மனைவி புத்திரன் முதலியோர் மீது பிரியமாம். தீப்பிடித்த வீட்டில் சுற்றத்தினர்களை கைவிட்டு நீங்கி வெளியே தப்பிவந்து சரீரத்தைக் காப்பதால் இழிவான தூல சரீரம் பிரியமாம். அந்த சரீரம் தூசிக்காற்றால் அவதிப்படும்போது, கண் முதலிய இந்திரியங்களைக் காப்பதால், சரீரத்தைக் காட்டிலும் இந்திரியம் பிரியமாம். மரண தண்டனை விதித்த் போது இந்திரியங்களில் பிரியம் அற்று பிராணனில் பிரியம் உண்டாகும். பிராணன் நீங்கும் காலத்தில் (மரணம் அடையும்போது) அதில் பிரியம் நீங்கும். எப்போதும் பிரியமான பூரண ஆன்மாவையன்றி பிரியமான ஒன்று கிடையாது. ஆதலால் ஆராய்ந்து பார்க்கும்போது எப்போதும் தானாகவே இருக்கின்ற நாமே பரமானந்தன் என்று சொல்லப்படும்.

### சம்பு

**கனவிடயஞ் சுழுத்திசொர்க்க விடயந் தன்னிற்**
**காண்சுகங்கள் தமைஎதிர்த்த கரணந் தன்னில்**
**தனதுசுகப் பதிவிம்ப மாகத் தானே**
**தங்குதலா லுஞ்சுழுத்தி உபேட்சை நிட்டை**

* *இலம் - இல்லம் (வீடு)*

**துனுகாலந் தனில்உதிக்குஞ் சுகங்கள் ஆன்ம**
**சுகமான படியால்தற் சுகம் அதின்றிப்**
**பனுசுகங்கள் வரவேறு வழியி லாத**
**படியாலும் பகர்சம்பு நாம்என்று ஓர்வாய்.** **30**

கனவிலும் சொர்க்கத்திலும் உள்ள விடயங்களால் அனுபவிக்கப்பட்ட சுகங்கள், அந்தக்கரணத்தில் தனது ஆனந்த வடிவத்தின் பிரதிபிம்பமே ஆகும். சுழுத்தி, உதாசீனம், ஆத்மநிட்டை கூடுதல் ஆகிய காலங்களில் உண்டான சுகங்கள் ஆத்ம சுகமே ஆகும். சுக வடிவமேயான தனது சுகமன்றி சுகங்கள் வரவேறு காரணமே கிடையாததால் சம்பு என்று சொல்லப்படுவதே நாம் என்று உணர்ந்து கொள்வாய்.

**அசலன்**

**தூய்தற்ற கிரகம்ஊர் தேசம்விட்டு அலைகின்ற**
**தூலஉடல் லோக லோகம்**
**சுழல்கின்ற இருதேகம் உடன்மண்ணை வளையமாய்ச்**
**சூழ்ந்துஅலைக் கின்ற தாகி**
**ஏய்கின்ற *அறல்*வன்னி இவைஅசைக் கின்றகால்**
**இவைகளுக்கு இடம் அதாகி**
**எய்துற்ற அம்பரம் பௌதிகச மட்டியோடு**
**எலையில்இவை யாவும் உடலாய்த்**
**தோய்வுற்று மெய்யறிவுள் அசைகின்ற ஈசனும்**
**சொல்கின்ற வேக முடனே**
**சுழல்கின்ற பறவையென ஈர்ஐந்து திக்கினும்**
**சூழ்கின்ற நூறு கோடி**
**ஆய்வுற்ற கற்பங்கள் ஓடிமிக நாடிடினும்**
**அளவைகா ணாதது ஆகி**
**அங்கங்கு சாட்சியாய் அசைவிலாது அமரும்நாம்**
**அசலன்என அறிகு வாயே.** **31**

வீடு, ஊர், தேசம், இவைகளில் ஒன்றை விட்டு மற்றொன்றில் தூலதேகம் அலைகின்றது. சூட்சும தேகம், காரண தேகத்துடன் சேர்ந்து வேறு வேறு உலகங்களில்

* *அறல் : நீர்; * வன்னி : தீ*

அலைகின்றது. நீர் பூமியை சூழ்ந்து கொண்டு அலைக்கின்றது. நீரும் தீயால் அலைக்கப்படுகிறது. நெருப்பும் காற்றால் அலைக்கப்படுகிறது. இவைகட்கு இடமாய் உள்ள ஆகாசம் பௌதிக சமட்டியோடு கூடியுள்ளது. இவையனைத்தையும் உடலாகக் கொண்ட ஈசுவரனும் அறிவு வடிவமேயான நம்மிடத்தில் அலைகின்றார். மேற்கூறிய சலனப்படுகின்ற அனைத்தும் அதிவேகமாக பறவைபோலப் பத்து திக்கிலும் நூறு கோடி கற்பங்கள் ஓடி அளவிட வேண்டும் என்று முயன்றாலும், அளவுகாண இயலாததாய் அங்கங்கே சாட்சியாய் அசைவற்று இருப்பதனால் நாம் அசலன் ஆகும்.

### நிர்க்குணன்

**சத்துவமாங் குணந்தனில்ஈ சனையும் ஆக்கித்**
**தகும்இரா சதந்தனில்சீ வரையும் ஆக்கி**
**அத்தமோ குணத்தில்உலகு அதையும் ஆக்கி**
**அவைகள்தமை விரித்தடக்கி யுகங்கள் தோறும்**
**வித்தரமாய் விளையாடல் செய்து கொண்டு**
**விளங்குபிர தானத்திற்கு அதீத மாகிச்**
**சுத்தஅதிட் டானம்அதாய் அபரிச் சின்ன**
**சுகவடிவாய் உறும்நாம்நிர்க் குணன்என்று ஓர்வாய். 32**

நமது சந்நிதானத்தில் மூலப்பிரகிருதியானது சாத்துவிக குணத்தினால் ஈசுவரனையும், இரஜோ குணத்தினால் சீவர்களையும், தமோ குணத்தின் விட்சேப சக்தியினால் உலகத்தையும் தோற்றுவிக்கிறது. யுகங்கள் தோறும் அவற்றை படைத்தல் காத்தல், ஒடுக்குதல் ஆகிய விளையாடல்களை செய்துகொண்டு விளங்குகின்ற மூலப்பிரகிருதிக்கு அப்பாலாய், இவைகள் தோன்றி நின்று ஒடுங்குவதற்குக் காரணமாய், எல்லையில்லாது, எங்கும் நிறைந்த சுகவடிவமாய் இருக்கின்றதால் நாம் நிர்க்குணன் என்று அறிந்து கொள்வாய்.

### நிர்விகற்பன்

**ஆகும்ஐயேழ் தத்துவமாம் விகற்பங் கட்கும்**
**அப்பாலாய் அவையின்அதிட் டான மாகி**
**ஏகமதாம் அத்துவித ஞான மாகி**
**இருக்கின்ற நாம்தனில்தான் விகற்பம் அற்றே**

போகும்இவை தமில்கூடி னாலும் பற்றாப்
புகல்நிமல படிகம்போல் விகற்பம் அற்று
வேகலிலாக் கடம்ஆதி உறும்வெ யிற்போல்
இருக்கின்ற நாம்நிரு விகற்பன் ஆகும். 33

தத்துவங்கள் 35ம் வேறுபாடு அடைகின்றன. நாம் அவைகளுக்கு அப்பாலாயும், அவைகளுக்கு அதிட்டானமாயும் இருக்கின்றோம். இரண்டற்ற ஒன்றேயான அறிவு வடிவமாய் இருக்கும் நாம், வேறுபாடு அடையாதவன். நிறங்களின் சம்பந்தத்தால் படிகம் அந்த அந்த நிறமாய் தோன்றுவது போலும், வேகாத கடம் முதலிய பாத்திரங்கள் சூரியனால் வேறுபாடு அடைந்தாலும் சூரியன் எந்த விதமான வேறுபாடும் அடையாது இருப்பது போலும், 35 தத்துவங்களோடு கூடினாலும் நாம் வேறுபாடு அடையாமல் இருப்பதால் நிருவிகற்பன் ஆகும்.

### நிராகாரன்

ஆகுவெளி உருவாகும் பிரமம் என்றும்
அதற்குஉருவம் நாமம்இலை அமூர்த்தம் என்றும்
ஆம்முன்பின் உட்புறமில் பிரமம் சாட்சி
ஆகும்என்றும் அறிபடுதல் அஃதுஇ லாதில்
ஏகமதாம் பிரமம்இதற்கு அநிய மாகி
இவைவிளக்கும் அறிவும்நிரா காரம் என்றும்
ஈர்இரண்டு சுருதிகளும் கூற லானும்
இயல்கதிரை நாடும் மனம் உடனே நீண்ட
சோகசிதா பாசனுக்கும் சித்து அதென்னும்
தொடர்பால்வாள் வெட்டும்அனல் சூடுங் கையில்
தொடருதல்போல் இலதேல்தற் சுபாவசித்துச்
சொல்உருவ ரகிதரென வேண்டு மோஎன்
சோகமில் உத் தியினாலும் நாமே உள்ளில்
தோற்றுபொறி வெளிப்பொறியின் விடயம் இன்றித்
தொடர்அவையை விளக்கும்அனு பவித்தி னாலும்
துகளில்நிரா காரன்நாம் எனவே ஓர்வாய். 34

உருவமற்ற ஆகாயம் போல், நமக்கு உருவமில்லை. நமக்கு உருவமும் நாமமும் இல்லாததால் நாம் அமூர்த்தமாய் சாட்சி மாத்திரமாய் உள்ளோம். நாம் இரண்டற்ற

ஒன்றேயான பிரம்மம் என்றும் உருவமில்லாத அறிவு வடிவம் என்றும் நான்கு வேதங்களும் சொல்கின்றன. சீவன், சூரியனைக் காணும்போது, சூரியன்வரை நீண்டுள்ள விருத்தியுடன் கூடியுள்ள சிதாபாசனை, கையை வாள் வெட்டுவது, நெருப்பு சுடுவது போல, வெட்டவோ சுடவோ முடியாதாம். ஆதலால் ஆபாசன், அமூர்த்தன் என்று அறியப்படுகிறது. ஆதலால் இயல்பாகவே அறிவுவடிவான நாம் உருவம் அற்றவன் என்பதில் ஐயமில்லை. நாம் அந்தக்கரணத்திற்கும், புறத்திலுள்ள ஞானேந்திரியங் களுக்கும் விஷயம் ஆகாமல், அவைகளை விளக்குவதால் நாம் நிராகாரன் என்று அறிந்துகொள்.

## நித்திய முத்தன்

**அயர்கருத் தாவாயு மேபுசிப் பவனாயும்**
**அனுதினமும் அமர்த லாலே**
**அதன்மமொடு தன்மம்அத னால்நிதம் பெத்தனே**
**அன்றிஒரு காலும் முத்தன்**
**நயமாக அலன்என்று கன்மகாண் டத்தினில்**
**நண்ணும்ஆன் மாஇ தென்றே**
**நாடுபிர மாதாவி னுக்கும்அஞ் ஞானத்தில்**
**நவில் மலம்கன் மம்அதனால்**
**உயருதலில் பெத்தனாய் உறுவன்ஞா னத்தினில்**
**உயர்முத்தன் ஆவன் என்றே**
**உபாசனா காண்டத்தில் ஆன்மாஇ தென்றுதான்**
**உரைத்திடும் சீவ னுக்கும்**
**அயலாகி நிருவிகா ரஅவ்வறிவ தாம்எமக்கு**
**ஆகும்பெந் தத்தொ டக்கும்**
**அணுகல்ஒரு காலத்தும் இல்லாத படியினால்**
**அமர்நித்திய முத்தன் நாமே.** **35**

கருத்தாவாயும், போக்தாவாயும் தன்னைக் கருதிக்கொண்டு புண்ணிய பாவங்களைச் செய்வதால் எப்போதும் வினைகளால் கட்டுப்பட்டவனே சீவன் ஆவான். ஒருகாலும் அவன் முத்தியடைய மாட்டான் எனக் கரும காண்டத்தினை அனுசரிப்பவர்கள் கூறுவார்கள். சீவன், அஞ்ஞானம், மலம், கன்மங்களால் கட்டுப்பட்டிருக்கிறான். ஞானம் அடைந்தால் சீவன் முத்தன் ஆகுதல் கூடும் என்று ஈசவரனை உபாசிப்பவர்கள்

கூறுவார்கள். நாம் அவ்வாறு இன்றாம். நாம், இப்படி சொல்லப்பட்டவர்களுக்கு வேறாக, அமூர்த்தமாய் அறிவு வடிவாக இருப்பதால், வினைகளினாலோ, அஞ்ஞானத்தினாலோ பந்தப்படுவதில்லை. ஆதலால் நாம் நித்திய முத்தன் ஆகும்.

### அநாதிமுத்தன்

**ஆம்அயர்வில் மூவர்முதல் தேவர் சாலோக**
**ஆதியெனக் கற்பிதமாய் அழியும் முத்திக்கு**
***ஏமம்உறப் புறம்பாகச் சித்தித் தென்றும்**
**எள்அளவும் கிரகிக்க விடக்கூ டாதாய்த்**
**தோம்அறுசற் சிற்சுகமே வடிவாம் தம்மைச்**
**சுருதியினால் உணர்கின்றது அநாதி முத்தி**
**ஆம்அதனால் ஏழைந்தின் மேலாம் நாமே**
**அநாதிமுத்தன் எனஅகத்தில் அறிய வேண்டும். 36**

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் அருளுகின்ற சாலோகம், சாமீபம், சாரூபம், என்ற பத முத்திகள் கற்பிதமாம். அநாதி முத்தியானது இவற்றை விட நிரந்தரமானதும், மிகுந்த இன்பமானதும், இவற்றிற்கு புறம்பாகவும் கைகூடுவதாம். சிறிதளவும் தள்ளத்தகாததும், கொள்ளத்தகாததும் ஆகிய குற்றங்களில்லாத சச்சிதானந்த வடிவான நம்மிடத்தில் அநாதி முத்தியானது சுருதியால் அறியத்தக்கதாம். அது முப்பத்தைந்து தத்துவங்கட்கும் அப்பாற்பட்டதாம். அதனால் எப்போதும் நாமே அநாதி முத்தன் என ஐயமின்றி அறிந்துகொள்வாய்.

### அச்சுதன்

**நழுவல்*சுதம் நழுவாதுஅச் சுதம் அதாகும்**
**நாடும்ஒரு நூறாண்டின் மேல் இராமல்**
**நழுவுகின்ற தூலஉடல் பிரள யத்தில்**
**நழுவுலிங்க உடல்பூத ஞானம் தன்னில்**
**நழுவுஅவித்தை மாயைபரன் சீவன் ஆக**
**நவிலும்ஐயே முக்குஅயலாய்ச் சுகசிற் சத்தாய்**

---

* ஏமம் : இன்பம் ; * சுதம் : அழிவு

**நழுவல்இலாது எக்காலும் தானே ஆக**
**நண்ணிவிளங் கிடுதலின்அச் சுதன்நாம் ஆகும். 37**

மறைந்து ஒடுங்குவது அழியும். மறைந்து ஒடுங்காதது அழிவில்லாத தாகும். உலகில் ஒரு நூறு ஆண்டு சென்றால் தூல உடல் அழியும். பிரளயத்தில் சூட்சும உடலும், பஞ்ச பூதங்களும் அழியும், ஞானத்தினாலோ அவித்தையும், மாயையும், சீவனும், ஈசுவரனும் மறைவுறும். அதனால் முப்பத்தைந்து தத்துவங்கட்கும் வேறாயும், சச்சிதானந்தமாயும், எப்போதும் மறைந்து ஒடுங்காமலும் சுயமாகவே விளங்குவதால் நாம் அச்சுதனே ஆவோம்.

## க்ஷேத்திரக்ஞன்

**மூலஅஞ் ஞானகா ரியமதாய் அமர்கின்ற**
**மூன்றுதனு வும்சேத் திரம்**
**உன்னும்இதை அறிபவன் சேத்ரக்ஞன் ஆகும்நீ**
**மொழிஅர்த்தம் அறியேன் எனல்**
**சீலமில் பாவவுரு அஞ்ஞானம் இதுபரம**
**சித்தில்ஆ ரோபம் ஆகித்**
**திகழ்அநா திஅதுஎனச் சொல்வதாம் நான்எனச்**
**சேத்திரம் தன்னில் உற்ற**
**ஆலம்பம் இல்அறிவுஅ நாதியாய் உறுஅத்தி**
**யாசமாம் பூர்வ தேக**
**ஆன்மஅனு பவமாம்பி ராந்திமேல் வருதேக**
**ஆன்மப்பி ராந்தி கட்கும்**
**மூலம்இது பிராந்திமூ லப்பிரமை அறிவின்மை**
**மொழிசேத்ரம் அத்தியா சமும்**
**மோகம்என நீக்கிஅவ் அதிட்டான மாய்அறியும்**
**முரண்இல்நாம் சேத்தி ரக்ஞன். 38**

மூல அஞ்ஞான காரியமாதலால் மூன்று சரீரங்களும் க்ஷேத்திரமாம். இந்த மூன்று சரீரங்களும் க்ஷேத்திரம் என்று அறிபவன் க்ஷேத்திரஞ்ஞன் ஆகும். சரீரமே தான் என எண்ணி மயங்குபவன், அஞ்ஞானத்தால் இந்த விளக்கத்தை அறிவதில்லை. இந்த அஞ்ஞானமானது மேலான அறிவே உருவமான நம்மிடத்தில் அநாதியாகவே கற்பிதமாய் திகழ்கின்றது. நான் எனச் க்ஷேத்திரமான மூன்று சரீரங்களிலும் நேரிட்ட நிலையில்லாத அறிவானது அத்தியாசத்தினால் அநாதியே பொருந்தியதாம். முன் பிறவியில் சரீரமே

ஆத்மா என்று மயங்கிய அபிமானம், அடுத்த பிறவியிலும் தேகமே ஆத்மா என்ற விபரீத உணர்வுக்கு மூலமாம். பிராந்தி, அஞ்ஞானம், க்ஷேத்திர அத்தியாசம் எனப்படும் இந்த மயக்கத்தை நீக்க வேண்டும். ஆதலால் மூன்று தேகங்களுக்கும் அதிட்டானமாய் அறியப்படுகின்ற மாறுபாடில்லாத நாம் க்ஷேத்திரஞ்ஞன் ஆகும்.

### மனோவாசாமகோசரன்

**மலையும்மனம் என்னல்அந் தக்கரணம் வாக்குஎன்னல்**
**மருவுபத்து இந்தி ரியமாம்**
**வரும்இருவ கைக்கும்மிக எட்டொ ணாப்பொருள்**
**மனோவா சாமகோ சரம்தான்**
**அலைவுஇல்பொருள் இந்தவிதம் ஆகுமேல் சூன்யம்**
**அதாம்எனில் சுருதி பிரமம்**
**அஸ்திபா திப்பிரியம் என்றும்அதை அறிபவன்**
**அதுஆவன் என்றும் இன்னம்**
**எலையதுஅற ஓதலில் பொருள்சூன்யம் அலவாயின்**
**எட்டொணாது எவிதம் என்னில்**
**எழுகின்ற திரிவித அவத்தைஅறி கின்றசித்து**
**எலைஉற்ற வாக்கு மனதில்**
**அலைதல்உறு அன்னுவய எதிரேகம் அவையைஅறி**
**பொருள்அலாது அவையின் விடயம்**
**அல்லவா தலின்மனோ வாசாம கோசரன்**
**ஆகும்நாம் என்ன அறிவாய்.** **39**

ஒரு நிலையில் நில்லாது சஞ்சலம் அடைகின்ற மனமே அந்தக்காரணமாம். வாக்கு என்று சொல்வது ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து ஆக பத்து இந்திரியங்களாம். மனம் வாக்கு ஆகிய இரண்டிற்கும் புலப்படாத பொருளே மனோ வாசா மகோசரம் ஆகும். மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாத பொருள் என்றால் அது சூனியம் எனக்கருதப்படும். பிரம்மம், சத்து, சித்து, ஆனந்தம் என்பதை சுருதியினாலும், பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமே ஆகின்றான் என்பதை சுருதியினாலும், இன்னும் அளவில்லாமல் இதை சுருதி விளக்குவதாலும், அது சூனியம் அல்ல. ஆயினும் மனவாக்குகட்கு விடயம் ஆகாமை எவ்விதம் கூடும் என்றால்? மூன்று அவத்தைகளும் தோன்றி ஒடுங்குதலை அறிகின்ற அறிவு வடிவமே நாம் ஆகும். மனம், வாக்கு தோன்றாத சுழுத்தியில் தான்

தோன்றுவதை உடன்பாடாக அறிந்தும், சுழுத்தியில் தான் தோன்றினும் மனம் வாக்கு தோன்றாததை எதிர்மறையாகவும், அறிபவன் நாம். இப்படி மனம் வாக்குகளை அறிகின்ற பொருளாயும், அவைகளுக்கு விடயம் ஆகாததாலும் நாம் மனோ வாசாமகோசரன் ஆகும் என்று உணர்ந்து கொள்.

### அவ்வியாகிருதன்

**ஆற்றும்உரு நாமமொடு விவகரிக் கப்படுவது**
**ஆம்பொருள் வியாகி ருதமாம்**
**அவைஇலாது அவ்வியா கிருதமாம் இதுசகம்**
**அதன்கார ணப்பி ரமமாச்**
**சாற்றும்வே தாந்தத்தி னில்சாங்கிய மாம்மதம்**
**தனில்முக்கு ணங்கள் உற்ற**
**தகவுபிர கிருதிக்கு முக்குணம் தாமுமே**
**சமமுடன் அடங்கு காலை**
**ஏற்று*பிர தானமோடு அவ்வியா கிருதம்உலகு**
**அதன்மூலம் என்று சொல்வர்**
**இருவகையி னில்சர்வ சத்தியாய்ச் சித்துஅதாய்**
**இயலுசர் வக்ஞ பிரமம்**
**தோற்றுஉலகின் மூலமாம் அறிவில்பிர தானம்அது**
**துகள்உலகின் மூலம் ஆகாச்**
**சொல்லும்இவ் ஏதுவால் சகமூலம் ஆனநான்**
**துரிசுஇல்அவ் வியாகி ருதனே. 40**

நாம உருவத்தோடு கூடிய பொருள் வியாகிருதமாம். நாம உருவம் இல்லாத பொருள் அவ்வியாகிருதமாம். வேதாந்தம், பிரம்மமே அவ்வியாகிருதத்திற்கும் அதன் காரியமாகிய உலகத்திற்கும் காரணம் எனக்கூறும். சாங்கிய மதத்தினர் முக்குணங்களோடு கூடிய மூலப்பிரகிருதியே உலகத்திற்குக் காரணம் எனச் சொல்வர். இப்படி உலகின் காரணம் என வேதாந்தம் பிரம்மத்தையும், சாங்கியம் மூலப் பிரகிருதியையும் கூறுகிறது. இவற்றில் சர்வசத்தியாய் அறிவு வடிவமாய் எங்கும் நிறைந்துள்ள பிரம்மமே உலகின் காரணமாம். சடமான மூலப்பிரகிருதி உலகின் காரணமாகாது. ஆதலால் உலகின் கரணமான நாம் அவ்வியாகிருதன் ஆகும்.

---

** பிரதானம் = பிரகிருதி*

### அக்ஷரன்

நாசமுறல் சரம்அற்றது அக்ஷரம்நூ றாண்டுபிர
 ளயம்ஞானம் அவையின் நாசம்
நணுகின்ற மூவுடற்கு அதிதசித் தானநாம்
 நந்தல்இல தால்அ க்ஷரம்
காசின்மறு யுத்திசரம் எனல்வேதம் அதனினால்
 கழறுபொருள் அக்ஷ ரந்தான்
கருதுமீ மாங்கிசன் சங்கைமுன் னுள்ளபொருள்
 காணலாம் பொறியின் அதனால்
ஆசின்மறை விதிநிடே தத்தையுங் கிரியையுற்று
 அதையுமே அறையும் என்னில்
ஆரணம் பொறியினால் பிரமம்அறி யப்படா
 ததுவிதி நிடேதம் என்னப்
பேசும்அவை யால்உறாது இமிசையைச் செயவொணாது
 என்றுதான் பேசல் போலப்
பிரமமே நாம்என்ன அறியெனக் கூறலால்
 பிரிவில்நாம் அக்ஷ ரம்தான். 41

நூறு வருடமானால் தூல உடல் அழியும். பிரளயத்தில் சூட்சும உடல் அழியும். தத்துவ ஞானத்தினால் காரண உடல் அழியும். இதுபோல சத்து, சித்து, ஆனந்தமான நமது சுயவடிவம் அழிவது இல்லை. மேலும் க்ஷரம் என்றால் வேதம் என்றும் பொருள் உண்டு. அந்த வேதம் எந்த பொருளை விளக்குகின்றதோ அது அக்ஷரமாம். இதன்கண் மீமாங்கிசனின் ஐயம், நமக்கு முன் உள்ள பொருளையே, இந்திரியங்களால் நாம் அறியலாம். இதைச் செய் இதைச் செய்யாதே என்று வேதம், விதித்த கருமங்களையும், விலக்கப்பட வேண்டிய கருமங்களையும் விளம்புகிறது. ஆதலால் பிரம்மம் இந்திரியங்களாலும், வேதத்தினாலும் அறியப்படாதது, என்று மீமாங்கிசன் வினவுகிறான். கருமங்களை கடைபிடித்தால் ஒழிய பிற உயிர்களுக்கு தீங்கு செய்யாமல் இருப்பது அரிது என்று விளக்கும் வேதமே, பிரம்மமே நான் என சிரவணம் செய்து அறிந்துகொள் என்றும் கூறுகின்றது. ஆதலால் பிரிவுபடாத நாம் அக்ஷரன் ஆகும்.

### திருக்கு

அறிவதுதி ருக்காம்அ தான்மா அலாதுதான்
 அமர்திருசி யங்கள் ஆன்மா

அன்றுஉலோ காயதன் சங்கை*அனம் வனிதைமுதல்
ஆனபோ கங்கள் எல்லாம்
அறிந்துஅனுப விக்கையால் ஆகந்தி ருக்குஎன்னும்
அவனையே சாரு வாகன்
அமரவே கண்டித்தல் இந்திரியம் இல்காலை
அறிவுகெட்டு ஒன்றை யும்தான்
அறிந்துஅனுப வித்திடா தாலுமே இந்திரியம்
அமர்காலை அறிவ தாக
ஆகமது இலகலால் ஆகம்அறி வன்றுபொறி
அறிதிருக்கு என்னும் அவனை
அறிதத்து வாதிகண் டித்தல்அய னால்வழக்கு
அற்றபடி யேபி ராணன்
ஆன்மாஅ லாதுஇந்தி யங்கள்ஆன் மாவுமே
அன்று என்று உரைக்கும் அவனை
அறிஉபா சகனுமே நீக்கல்அப் பிராணபொறி
ஆகம்முதல் யாவும் மனம்இல்
லாவிடில் தோற்றாமை யான்மனம் திருக்குமற்று
அதுதிருசி யங்கள் என்னும்
அவனையுந் தார்க்கிகன் கண்டித்தல் புத்திஇல்
லாதுவிடின் மனது சலனம்
அதனால்தி ருக்குஅன்று புத்தியே அறிவுஎன்னும்
அவனையும் புத்தன் நீக்கல்
அறிதல்உறு யாவும்சு ழுத்தியில் இலைச்சூன்யம்
ஆன்மாவென் அவனை நவில்பட்
டாசாரி அதுவும்ஆன் மாவன்று உறுஞ்சுகம்
அடைந்தனன் சுழுத்தி யில்என
அறைசீவன் அறிவுஎன்பன் யாவரையும் நீக்கல்வே
தாந்தி அறிவில் சீவனே
ஆதியாய் விடயவரை இலகலால் அறிவல்ல
அவைஅறியும் நாம்தி ருக்கே. **42**

*அனம் = அன்னம் (உணவு)*

அறிகின்ற திருக்கே ஆன்மாவாம். அறியப்படுகின்றவை யாவும் அநாத்மாவாகும். (இதன் கண்ணே வாதிகட்கு உண்டாகும் விவாதத்தை இனி விளக்குகிறார்.) உணவு, மகளிர் முதலிய போக்கியப் பொருள்கள் தேகத்திற்கே பயன்படுவதால் தேகமே ஆத்மா என்பான் உலோகாயதன். அவனை சாருவாகன் மறுத்தல்: தேகத்தில் இந்திரியங்கள் ஒடுங்கியபொழுது மதிமயங்கி, தேகம் ஒன்றையும் அறியாமலும், அனுபவிப்பதும் இல்லாததாக இருக்கின்றது. இந்திரியங்கள் தோன்றியபொழுது காண்கிறேன், வசனிக்கிறேன் முதலிய தொழில்கள் காணப்படுவதால் இந்திரியங்களே ஆன்மா. பிராணவாதி கூறுவதாவது: இந்திரியங்கள் ஆன்மா ஆகாவாம். ஏனெனில், இந்திரியங்கட்கும் பிராணனுக்கும் பரஸ்பரம் கலகம் நேரிட்டபோது, எது நீங்கினால் உடல் மரணம் அடையுமோ, அது ஆன்மா என்று பிரம்மா கூறியுள்ளார். கண், கால் முதலிய இந்திரியங்களுள் ஒன்று இழந்த போதிலும் பிராணன் இருந்தால் குருடன், ஊனமுற்றவன் என உயிர் வாழ்தலாலும் பிராணனே ஆன்மாவாம். அந்த வாதத்தை மனமே ஆன்மா என்னும் உபாசகனாகிய மற்றொருவன் கண்டனம் செய்தல்: மனத்தினாலேயே பிராணன் விளங்குகின்றது. மனத்தாலேயே உலகம் முழுவதும் காணப்பெறுகின்றது. ஆதலால் மனமே ஆன்மா. அதனைத் தார்க்கீகன் கண்டித்தல்: புத்தி நிச்சயிக்க விட்டால் மனம் ஒரு பொருளையும் அறியாது சலனமடையும். ஆதலால் புத்தியே ஆன்மாவாம், மற்றையது அன்றாம். இதனை புத்தன் மறுத்து கூறுவதாவது: தேகம், இந்திரியங்கள், பிராணன், மனம், புத்தி என அறியப்படுகின்ற எல்லாம், நித்திரையில் இல்லாமல் சூன்யமாய் இருப்பதால் சூன்யமே ஆன்மா. அதனை பட்டாசாரி மறுத்தல்: சூன்யம் ஆன்மா ஆகாது. நான் சுகமாகத் தூங்கினேன், என அனுபவித்துச் சொல்கின்ற சீவனே ஆன்மா. இவர்கள் கூறிய தேகம் முதலாகச் சீவன் வரை நம்மால் அறியப்படுகின்றவை அநாத்மாவாகும். அவைகளை அறிகின்ற நாம் திருக்கு (பார்ப்பவன்) ஆகும்.

## பிரத்தியக்கு

**அகநோக்க மனதினில் அகப்படும் வஸ்துவே**
**பிரத்தியக்கு அந்த ஆன்மா**
**அவித்தையா திகளினால் சீவாதி யாய்ப்பராகு**
**ஆம்விர்த்தி வெளிநோக் கமாய்ச்**
**சுகம்ஈசர் தேவர்சாஸ் திரம்என்னும் விடயங்கள்**
**தமில்அலைந்து தோய்ந்து பருவம்**
**சார்ந்துபர மோட்சத்தை நாடில்ஆன் மாமிகத்**
**தகுநிர திசய முத்தியென்**

**பகர்சுருதி வாக்யஉப தேசமுற்று உடல்பொறிகள்**
**பல்கரணம் யாவும் நீக்கிப்**
**பன்னிடும் பிரத்யக்கு விர்த்தியென்று உறுபெயர்**
**பற்றியே தன்னை நோக்கித்**
**தகைமையுறு வெய்யிலின் விளக்கெனக் குன்றியே**
**சாட்சிமாத் திரம தாகச்**
**சனிக்கின்ற விர்த்திஞா னத்தையே காணும்நாம்**
**தயங்கிடு பிரத்தி யக்கே. 43**

உள்முகமாக இடைவிடாது சிந்திப்பதால் அகப்படுவதே பிரத்தியக் எனப்படும். அஞ்ஞானத்தினால் ஆத்மாவானது சீவத்தன்மை உடையதாய் தேவர், மனிதர், மிருகங்கள் முதலிய சரீரங்களில் இருந்து கொண்டு போகங்களை அனுபவிக்கக் கருதி கருமங்களை செய்கிறது. இப்படி சுகத்தின் பொருட்டு உலகம், ஈசுவரன், தேவர்கள், சாத்திரங்கள் முதலிய விடயங்களில் அலைந்து துன்புற்று ஒய்கின்றது. பக்குவம் அடைந்து பேரானந்தத்தை நாடும்போது, "தானே இயல்பாகவே, பேரானந்தன்" என்பதை குருமுகமாக அறிகிறது. சற்குருவின் உபதேசத்தால் உடல், இந்திரியங்கள், அந்தக்கரணம் யாவற்றையும் நானல்ல என்று நீக்கி, உள்முகமாக தன் உண்மை சொரூபத்தை தொடர்ந்து சிந்திக்கும். இதனால், சூரியனின் முன்பு விளக்கின் பிரகாசம் மங்கி சூரியனின் பிரகாசம் விளங்குவது போல், சீவத்தன்மை கெட்டு தான் அறிவு வடிவாகிய சாட்சி என்று உணரும். இப்படி சாட்சி மாத்திரமே நாம் என இடைவிடாத சிந்தனையால் அறியப்படுகின்ற நாம் ஐயமில்லாமல் சுயம் பிரகாசமாய் விளங்கிடும் பிரத்தியக் ஆகும்.

## சின்மாத்திரன்

**செடமாகி அறிவற்றுத் தோற்று கின்ற**
**செகங்களையும் செயற்கைஅறி வாக உற்று**
**மடமானது அறும்இயற்கை அறிவின் மூன்று**
**வகையான உடல்களையும் இயற்கை ஆன**
**இடமான அறிவாகிக் காணா நின்ற**
**இயல்பான தமக்குஅறிவே வடிவல் லாமல்**
**திடமாம்மற் றொருவடிவும் இலாத தால்நாம்**
**சின்மாத்ரன் எனஎன்றும் சிந்தை செய்வாய். 44**

உலகம், சடமாக, அறிவில்லாமல் இருக்கின்றது. இயல்பாகவே அறிவில்லாத தூல சூட்சும காரண சரீரங்கள் நமது சன்னிதிமாத்திரத்தால் அறிவுடையன போல தோன்றுகின்றன. இவற்றை எப்போதும் சாட்சி மாத்திரமாக இருந்து கொண்டு அறிகின்ற நாம் இயல்பாகவே அறிவு வடிவமாகும். நமக்கு அறிவே வடிவம் அல்லாமல் வேறெரு வடிவம் இல்லாததால் நாம் சின்மாத்திரனாய் இருக்கிறேன் என்று தொடர்ந்து சிந்திப்போம்.

## சத்து

**நான்எனமூன்று அவத்தையின்உண் நோக்காய்த் தோன்றும்**
**நால்ஏழ்தத் துவங்கள் வெளிநோக்காய் ஈதென்று**
**ஈனமுடன் தோற்றும்ஏழ் தத்து வங்கள்**
**இருவகையாம் ஐயேழுந் தினங்கள் தோறும்**
**ஊனதிரி விதஅவத்தை களினும் தோன்றி**
**ஒழிகையினும் கூடஒழி யாமல்தானே**
**ஈனமிலா நித்தியமாய் நிலைமை உற்றே**
**இருக்கின்ற நாமேசத்து என்ன ஓர்வாய். 45**

மூன்று அவத்தைகளிலும் தோன்றி ஒடுங்கும் இருபத்தெட்டு தத்துவங்களில் 'நான்' என்னும் எண்ணம் உண்டாகிறது. நமக்கு அன்னியமாக 'இது' என சுட்டி அறியப்படுவது ஏழு தத்துவங்கள். இவ்வாறு முப்பத்தைந்து தத்துவங்கள் இருவகையாக உள்ளன. இவை முப்பத்தைந்தும் தினந்தோறும் மூன்று அவத்தைகளிலும் தோன்றி ஒடுங்குகின்றன. இவ்வாறு தோன்றி ஒடுங்காமல், குறைவில்லாது, நித்தியமாய் விளங்கும் நாம் சத்து வடிவம் என்று அறிந்துகொள்.

## நிர்ஈசுவரன்

**வரமான பிரமாதி காரண ஈசுரரோடு**
**வைகவா னரன்முத லதாய்**
**மன்னுபர மாங்கிசன் ஈறுகா ரியஈசர்**
**வகையுடன் விராட்டு ஆதியாய்த்**
**திரமான சுத்தம்ஈ றாம்சத்தி பேதங்கள்**
**செறிசீவ ராய்இ ருந்து**
**திகழ்இவ ருடன்சரிய தாய்இலக ஞானயோ**
**கங்களைச் செய்த திகழ்ஐங்**

**ஈரன்வேலன் ஆதியாம் நூதன ஈசுரர் மிகக்**
**கருது இவரினில் பாதியாய்க்**
**கதிர்ஞான யோகம் செய் நந்திசண் டிஈசாதி**
**கனயோகி கட்கும் வேறாய்**
**உரமான நமில்அவர்கள் ஒரொர்கா லந்தனில்**
**உதிப்பதால் உண்மை அலதால்**
**உயர்வாம் அகண்டசித்து உருவம்ஆ கின்றநாம்**
**உறுநிர் ஈசுவர னாமே. 46**

மேன்மையான பிரம்மா, விஷ்ணு உருத்திரன் முதலியோர் காரண ஈசுவரர்களாம். அக்கினி, இந்திரன், வருணன், சூரியன் முதலியோர் காரிய ஈசுவரர்களாம். இப்படி விராட் முதல் நித்திய சுத்த பிரம்மம் ஈறாக எண்ணற்ற ஈசுவர பேதங்கள் உளவாம். ஞான யோகங்களால் மேன்மை பெற்று திருவருள் புரியும் கணேசன், முருகன் முதலியோர் அவதார ஈசுவரர்களாம். அவதார ஈசுவர்களுக்கு குறைந்த ஞானயோகங்களை உடையோர் நந்தி, சண்டீகேசுவரர் முதலியவர்களாம். இவர்கள் சுயமாகவே அறிவே வடிவமான நம்மிடத்தில் தோன்றி விளங்குவதால் நித்தியாமானவர்கள் அல்ல. ஆதலால் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற, அறிவே வடிவம் ஆகின்ற நாம் நிரீசுவரன் ஆகும்.

## நிர்ச்சீவன்

***சீவன்அற்று ஒழிதல்நிர்ச் சீவனாஞ் சீவனாய்ச்***
**செறிபொருள் அவித்தை தன்னில்**
**சேர்பிரதி விம்பிதசி தாபாசன் அவன்அளவில்**
**சென்மம்நற் கன்மம் உற்றே**
**பாவமறு சித்தசுத் தியைஉற் றுஉபாசனை**
**பலசன்மம் உற்ற அதனால்**
**பகரும்ஏ காக்கிரம் அடைந்துசா தனமுடன்**
**பரமதே சிகனை உற்றே**
**தாவில்சிர வணமனன மேநிதித் தியாசன**
**சமாதி சாட்சாத் காரமும்**
**தடையறச் செய்துஉறும்அஞ் ஞானமும் பஞ்சவித**
**தகு*பிரம மும்த விர்த்துச்**

***** *பிரமம் = பிராந்தி*

**சீவத்து வம்கெட்டு விம்பசை தன்னியச்**
**சித்துமாத் திரம் அதாகச்**
**செறிகின்ற தால்இயாம் நிர்ச்சீவன் என்னவே**
**தெளிவுடன் அறிந்து கொள்ளே. 47**

நான் சீவன் என்ற அபிமானம் முற்றிலும் ஒழிவதே நிர்ச்சீவனாம். நீரில் குமிழிகள் போல அநேக ரூபமாய் பிரிந்த அவித்தைகளின் இடத்தில் பிரதிபிம்பித்துள்ள சிதாபாசனே சீவன் எனப்படுவான். அவன் அளவில்லாத பிறவிகளை எடுத்து உழன்று, பல பிறவிகளில் செய்த நிழ்காமகரும புண்ணியத்தினால் மலம் நீங்கி சித்த சுத்தியைப் பெறுவான். அதனால் நிழ்காம உபாசனைகளை பல பிறவிகளில் செய்து சித்த ஏகாக்கிரத்தை அடைவான். அதனால் விவேகாதி சாதனங்களைப் பழகி, சிறந்த ஞான ஆசாரியர் திருவடிகளை அடைவான். முத்தி அடையும் பொருட்டு இடைவிடாது சிரவண, மனன, நிதித்தியாசனங்களைப் பயின்று, சீவ பிரம்ம ஐக்கியத்தை உணரத் தடையில்லாமல் சமாதிகளைப் பழகுவான். அதனால், உலகம் சத்தியம் எனக்கருதல், தேகமே நான் என்று கருதல், தான் கர்த்தா போக்தா எனக் கருதல், ஈசுவரன் வேறு தான் வேறு எனக் கருதல், தான் பிரம்ம சொரூபம் என்பதை மறந்து, நான் பிரம்மம் அல்ல எனக்கருதல் ஆகிய ஐவகை பிராந்திகளையும், அஞ்ஞானத்தையும் நீக்குவான். அதனால் சீவன் என்ற அபிமானம் நாசமாகி, அறிவு மாத்திரமாக எங்கும் நிறைந்து இருக்கின்ற தனது வடிவத்தை அறிவான். ஆதலால் யான் நிர்ச்சீவன் என்பதை தெளிவாக அறிந்து கொள்வாய்.

## நிஷ்பிரகிருதி

**பிரகிருதி இன்மைநிஷ் பிரகிருதி சாங்கியன்**
**பெறுசங் கைசீ வஆதியைப்**
**பிரகிருதி முக்குணத் துஉண்டுபணி நிற்கையிற்**
**பிரமம்நிஷ் பகுதி எவிதம்**
**விரவுகயிறு ஆதிகளை அன்றியே சர்ப்பஆதி**
**மேவாதின் வாக்கு மாத்ரம்**
**விளங்குமூ லப்பகுதி பிரமத்தை விடஅற்பம்**
**வேறுஇல்எனும் யுத்தி யாலும்**
**திரநனவு கனவுசகம் யாவும்அதை அறிகின்ற**
**சித்தாக அழிதல் கண்டும்**

**சித்தின்வே றாய்அறிந் தவன்ஆன்ம பிரமத்தி**
**செய்கின்ற பாவி யென்றும்**
**பரமில்அவை யாவும்நம துஉருவென்று கண்டவன்**
**பரப்பிரமம் என்றும் வேதம்**
**பன்னலர் லும்திரப் பிரமமா கின்றநாம்**
**பகரும்நிஷ் பிரகி ருதியே.** **48**

பிரகிருதி இல்லாதது நிஷ்பிரகிருதி ஆகும். இதை சாங்கியன் மறுத்து வினாவுதல். சீவன், ஈசுவரன், உலகம் ஆகியவற்றை பிரகிருதி முக்குணத்தால் உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறது. ஆதலால் பிரம்மம் எப்படி பிரகிருதி இல்லாதது ஆகும்? கயிற்றில் பாம்பு, கானல்நீர், கிளிஞ்சல் வெள்ளி முதலியவை வாக்குமாத்திரமே இருப்பதுபோல மூலப்பிரகிருதி பிரம்மத்திற்கு வேறாக இல்லவே இல்லை. நனவு, கனவு முதலிய உலகம் யாவும் அதை அறிகின்ற அறிவினிடத்திலேயே ஒடுங்குகின்றது. ஆதலால் தன்னை அறிவே வடிவமான பிரம்மத்திற்கு வேறாய் காண்கிறவன் தன்னைக் கொன்ற பெரும் பாபத்தை செய்தவன் ஆவான். ஈசுவரன், சீவன், உலகம் ஆகிய யாவும் பிரம்மமமே என்று அறிந்தவன் பரப்பிரம்மமே என்று வேதம் கூறுகிறது. ஆதலால் நித்தியமாய் பிரம்ம வடிவமாய் இருக்கின்ற நாம் நிஷ்பிரகிருதியாம்.

### அசம்சாரி

**வரமில்சம் சாரம்இல் லோன்அசம் சாரியாய்**
**வன்ன ஆச்சிர மங்களும்**
**மருவிஇவைக் குரியதன் மஅதன்ம பேதமும்**
**வரும்இவற் றின்ப லமதாத்**
**தருசொர்க்க நரகாதி யும்அவற் றின்சேஷ**
**சனனமர ணாதி யாவும்**
**சம்சாரம் ஆகும்இது தனுவைநாம் என்றிடில்**
**தன்னைஉறும் இவ்வு டற்குத்**
**திரமருவும் நாம்அனிய மெனஅறிந்து இவ்விதம்**
**தேர்சிதா பாச னுக்கே**
**சிறிதும்இலை இவனையும் உடலையும் பொய்யெனத்**
**தேர்ந்துஇவற்கு அதித மான**

**பிரமம்அகம் எனஅறிந்து உறும்எமக்கு அற்பமும்**
**பெந்தசம் சாரம் இல்லாப்**
**பெற்றியாற் சுத்தசித் தாகின்ற நாம்மிகப்**
**பேண்அசம் சாரி யாமே.** **49**

மேன்மையில்லாத பிறப்பு இல்லாதவன் அசம்சாரியாகும். அவர் அவர்களது வருண ஆச்சிரமங்களுக்கு உரிய வேறு வேறான தர்ம அதர்மங்களைச் செய்து, அவற்றின் பலன்களாக சொர்க்க நரகங்கள் அனுபவிக்கப்படும். பின் எஞ்சி நின்ற வினைகளுக்கு ஈடாக அளவில்லாத பிறவிகளை அடைவதே சம்சாரம் ஆகும். எவன் உடலை யான் என்று கருதுகிறானோ அவன் சம்சாரத்தை அடைவான். இந்த உடலுக்கு நாம் வேறு என்று அறிவதால் சீவனுக்கு சம்சாரம் இல்லை. ஆதலால் ஆபாசனான சீவனையும், உடலையும் பொய் என்று நிச்சயித்து அவற்றிற்கு அப்பாற்பட்ட பிரம்மம் நாம் என்று அறிய வேண்டும். ஆதலால் நமக்கு அற்பமும் பந்தத்தை தரக்கூடிய சம்சாரம் இல்லாத் தன்மையால், சுத்த அறிவே வடிவான நாம் மிகவும் அசம்சாரியாம்.

### அபெத்தன்

**கட்டுண்ட வன்பெத்தன் அதுவிலன் அபெத்தனாம்**
**கள்வன்க யிற்றி னாலே**
**கட்டுண்டல் போல்பிரமம் நாம்எனும் புத்தியை**
**மறைத்துமே களவு செய்த**
**திட்டஅஞ் ஞானம்அது வந்தஉடனே அகம்**
**தேகம் எனமா னித்திடும்**
**திருடனும் புண்ணியபா வம்குரோத காமஆதி**
**தீயபா சங்க ளாலும்**
**கட்டுண்பன் அப்போது துக்கபய சென்மம்**
**கணக்கிலா துஉண்டு பரன்நல்**
**கருணையின்மெய்ஞ் ஞானம்வந் துஉடன்மானம் அற்றபின்**
**கனபெந்த துன்பு அவற்கும்**
**விட்டுஒழித லாலும்உடல் உலகினான் மட்டிடா**
**வியன் அகண்ட ஆனந்தமாய்**
**மேவுஎமக்கு ஒருபெந்த மும்இல்லை யாதலான்**
**மிகநாம் அபெத்த னாமே.** **50**

அஞ்ஞானத்தால் கட்டுப்பட்டவன் பெத்தனாம். கட்டுப்படாதவன் அபெத்தனாம். கயிற்றால் கட்டுண்ட திருடனைப்போல அஞ்ஞானத்தால் கட்டுப்பட்டவனாகி தேகத்தை தான் என்று அபிமானிக்கிறான். அதனால் புண்ணியம் பாவம், கோபம், காமம் முதலிய பாசக்கயிற்றால் கட்டுப்பட்டு அளவில்லாத பிறவிகளில் பயம், துக்கங்களை அடைகிறான். சற்குருவின் கருணையினால் தன்னை அறியும் மெய்ஞ்ஞானம் வந்தவுடன், தேக அபிமானம் நீங்கி, அஞ்ஞானத்தில் கட்டுப்படுகின்ற துன்பம் விட்டொழியும். உடலாலும், உலகினாலும் அளவிடப்பட்டு அறிய இயலாததாய், ஒன்றேயாய், எங்கும் நீக்கமற நிறைந்து, ஆனந்தமாய் பொருந்தியிருக்கின்ற நமக்கு ஒரு பந்தமும் இல்லாததால் நாம் மிகவும் அபெத்தனாம் (கட்டு இல்லாதவன்).

## நிரவயவன்

**அத்தம்உறு சரண்ஆதி அவயவமும் உடைத்தாகி**
**அமர்கின்ற மூவு டற்கும்**
**அனியமாய் ஆகாய உருவமாய் மூவித**
**அவத்தையின் கரிய தாக**
**நித்தம்உறு என்றனக்கு எற்கெனஓர் அவயவம்**
**நின்றிடா தாலும் நம்போல்**
**நிகழ்உண்மை அல்லாது தன்னதுஅவ யவம்என்ன**
**நேர்கின்ற பொருளும் அன்றிச்**
**சுத்தம்உறும் நம்மினில் கற்பிதம் அதாகியே**
**தோற்றல்உறும் உலகம் அதனைத்**
**தொட்டுமே அவயவம்இலா தாலும் இவ்விதம்**
**துகள்உற்ற உபய வகையாய்ச்**
**சத்தம்உறும் அவயவம் சற்றுமே சார்ந்திடாத்**
**தகுதன்மை யோடு தானே**
**தானாய் இருக்கின்ற நாம்நிரவ யவன்எனச்**
**சந்ததமும் எண்ணு வாயே. 51**

கைகால் முதலிய அவயங்களை உடையதாய் இருக்கின்ற தூலம், சூட்சுமம், காரணம் என்ற மூன்று சரீரங்களுக்கும் வேறாக, உருவமற்றதாய், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்று அவத்தைகளுக்கும் சாட்சியாக நான் இருக்கிறேன். என்றும் அழிவில்லாது நித்தியமாய் விளங்குகின்ற நமக்கு ஓர் அவயவமும் கிடையாது. நம்மைப் போல் சுயமாக

இருப்புடைய உண்மைப் பொருளும் தன்னுடைய அவயவம் என சொல்லப்படும் பொருளும் இல்லாமல் சுத்தமாக நான் விளங்குகிறேன். நம்மிடத்தில் கற்பனையாகவே தோன்றுவது இந்த உலகம். அதற்குண்டான சத்த பரிச, ரூபம் முதலிய அவயங்கள் நமக்கில்லை. இவ்விதம் சரீரங்கள் உலகம் ஆகிய இரண்டினுக்கும் சொல்லப்பட்ட அவயவங்கள் எனக்கு இன்றாம். மாறுதல் இல்லாத தன்மையோடு சுயமாக நாம் விளங்கிக்கொண்டு இருப்பதால், யான் நிரவயவன் என எப்போதும் எண்ணுவாயாக.

### அபரோட்சன்

**ஆதாரமாம் கன்மகாண் டத்தில் ஓதும்**
**அதன்மதன்மம் அதன்பலன்கள் பத்தி காண்டத்து**
**ஓதல்உறு தேவதையும் பரோட்ச மாகும்**
**உயர்ஞான காண்டத்தில் ஓது பிர்மம்**
**கேதமுறும் அவைபோலப் பரோட்ச மின்றிக்**
**கேட்டவுடன் தானாகக் கிளர் தலாலே**
**ஏதம்இலாது இப்படிஎப் போதும் தானாய்**
**இருக்கும்நாம் அபரோட்சன் என்ன லாகும்.** **52**

கர்ம காண்டத்திலே சொல்லப்பட்டிருக்கும் நல்வினை தீவினைகள் அவற்றின் பயன்கள், பக்தி காண்டத்திலே சொல்லப்பட்டிருக்கும் தெய்வங்களும் பரோட்சமாகும். உயர்ந்த ஞான காண்டத்திலே சொல்லப்பட்டிருக்கும் தெய்வங்களும் பரோட்சமாகும். உயர்ந்த ஞான காண்டத்திலே சொல்லப்பட்டிருக்கும் பிரம்மம் அவைகளைப்போல பரோட்சம் அல்ல. நீ பிரம்மமாய் இருக்கின்றாய் எனக் கேட்டவுடன் அப்போதே தான் பிரம்மம் என்பது விளங்கும். ஆதலால் கேடில்லாமல் எப்போதும் சுயமாய் விளங்கிக் கொண்டு இருக்கும் நாம் அபரோட்சன் எனப்படும்.

### சுயம்

**அறைசுயம் தானாய்இருத்தல் எவிதம் என்னில்**
**அஞ்ஞான காலத்தில் அனிய மாகி**
**மறைவிலதாய் இலகுஏழ்தத் துவமும் ஞானம்**
**மருவினபின் தான்அலவாய்த் தள்ளல் உற்ற**
**அறிவுஇலதாம் தத்துவங்கள் இருபத் தெட்டும்**
**ஆகமுப்பத்து ஐந்தினுக்கும் அப்பால் உற்ற**

**இறவின்முப்பத்து ஆறாம்தத் துவம்எப் போதும்**
**யாம்ஆக இலகலின்நாம் சுயம்என்று ஓர்வாய். 53**

இயல்பாகவே தானாய் இருக்கின்றேன், விளங்குகிறேன் என்று சொல்லப்படுவது எவ்விதம் எனில்? அஞ்ஞான காலத்திலும் நமக்கு வேறாக தோன்றிக் கொண்டு இருக்கும் தத்துவங்கள் ஈசுவரன், மாயை, பஞ்சபூதங்கள் ஆகிய ஏழுமாம். ஞானம் பெற்றபின் தான் அல்லாததாய் நீங்குகின்ற சடமான தத்துவங்கள் இருபத்தெட்டாம். (தூல சரீரதத்துவங்கள் 6, சூட்சும சரீரதத்துவங்கள் 20, அவித்தை 1, சீவன் 1 ஆக 28.) இந்த முப்பதைந்து தத்துவங்களுக்கும் அப்பாலாய் நாம் விளங்குகிறோம். நாசமில்லாத முப்பத்தாறாம் தத்துவமாய், எப்போதும் தானாகவே விளங்கிக் கொண்டு இருப்பதனால் நாம் சுயம் என்று அறிந்து கொள்வாய்.

### அகேயன்

**இதுவென்று தள்ளல்உறல் *ஏயம்அஃது இன்மைஅது**
**அகேயம்அது எங்ங னம்எனில்**
**இயன்மூர்த்த மோடுஅமூர்த் தம்அதெனப் பிரமத்**
**தினுக்குஉபய ரூபம் உண்டால்**
**இதைஅறிந்து இதுவல்ல அல்லஎன்று அறிஎன்ன**
**இசைசுருதி சொன்ன படியே**
**இயல்பிரமம் அதனுடைய சச்சிதா னந்தமாய்**
**எய்துஅமூர்த் தங்கள் உடனே**
**சுதஉலக மூர்த்தத்தை யுஞ்சுருதி ஆதியாற்**
**சோதித்து அறிந்து கொண்டு**
**சொல்லும்இது பாம்பல்ல அல்லஎன்று அறிதல்போல்**
**துகள்அபர மார்த்தம் ஆகி**
***அதம்அதுஉறும் ஏயமாம் உலகையல அலவென்று**
**அகற்றி நற்பர மார்த்தமாய்**
**அறிவான நாம்அகே யன்எனக் காணலாம்**
**ஆகையால் நாம் அகேயன். 54**

---

* ஏயம் - தள்ளப்படுவது; * அதம் - தாழ்வு, கீழ்

இது என தள்ளப்படுவது ஏயம். அப்படி தள்ள இயலாதது அகேயம். அது எப்படி என்றால்? இயல்பாக நாமரூபம் ஆக விளங்குவது மூர்த்தம் எனவும், சத்து, சித்து, ஆனந்தம் ஆக இருப்பது அமூர்த்தம் எனவும் பிரம்மத்திற்கு இரண்டு வடிவம் உண்டாம். இதைத் தெரிந்துகொண்டு நாம ரூபத்தை இதுவல்ல இது வல்ல என்று நீக்கி அமூர்த்தமாய் எஞ்சுகின்றவனே தான் எனச் சுருதி சொன்னபடி அறியவேண்டும். பிரம்மத்தின் இயல்பு சத்து, சித்து, ஆனந்தம் என்றும், அது அமூர்த்தம் எனவும் நாசமடையக்கூடியது நாம உருவமான உலகம் எனவும் சாத்திரங்களினால் ஆராய்ந்து நிச்சயம் செய்துகொள்ள வேண்டும். இது பாம்பல்ல இது பாம்பல்ல என்று நீக்கி கயிறு மாத்திரம் என்று அறிவதுபோல, பொய் என நிச்சயிக்கப்பட்டு அதமமாய் தள்ளப்படும் உலகை இதுவல்ல இதுவல்ல என்று அகற்ற வேண்டும். அப்போது உயர்வான உண்மைப் பொருளாய் அறிவு வடிவான நாம் அகேயன் என அறியலாம். தத்துவங்கள் முப்பதைந்தும் இது நான் அல்ல என்று தள்ளப்படுவன. முப்பத்தாறாம் தத்துவமாகிய நாம் தள்ளப்படாமல் எஞ்சுவதால் நாம் அகேயன்.

### அனுபாதேயன்

**அடைகின்ற பொருள்உபா தேயம்அனு பாதேயம்**
**அடையப்படாப் பொருள் அதுஎவிதம்**
**ஆமெனில் கன்மகாண் டத்தினில் சொர்க்காதி**
**ஆனந்த மேவி ரும்பித்**
**திடமதுடன் நித்தியாதி நால்வகைக் கன்மமும்**
**செய்துளோன் அப்ப லத்தைச்**
**சேருவன் பத்திகாண் டத்தினில் சிவன்ஆதி**
**தேவர் களைமந்த் ரஆதியால்**
**இடையற உபாசன ஆதிகள்புரிந் தோன்பதம்**
**அதுஎனும்முத்தி அடைவன் நித்ய**
**எழின்முத்தி இச்சையால் சவணாதி செய்துளோர்க்கு**
**இயலுபலம் அப்ப லம்போல்**
**அடையப்படும் பொருள்அலாது ஏற்கவே உற்றதாம்**
**ஆகஉறு கின்ற அதனால்**
**அவத்தையின் கரியதாய் எப்போதும் மேவும்நாம்**
**அனுபா தேய னாமே.** 55

ஒருவனால் அடையப்படும் பொருளே உபாதேயம் எனப்படும். அடையப்படாத பொருள் அனுபாதேயம் எனப்படும். அது எவ்விதமாம் என்றால்? கர்ம காண்டத்திலே கூறப்பட்ட சொர்க்கத்தை விரும்பி, உறுதியுடன் தினமும் விதித்த கர்மம், விலக்கப்பட்ட கர்மம், காம்ய கர்மம், பிராயச்சித்த கர்மம் ஆகிய நால்வகை கர்மங்களைச் செய்பவன், அந்த சொர்க்கத்தையும் ஆங்குள்ள போகங்களையும் அடைவான். பக்தி காண்டத்திலே கூறப்பட்ட சிவன், விஷ்ணு முதலிய தெய்வங்களை மந்திரம் தியானம் முதலியவற்றால் இடைவிடாது உபாசனை செய்பவன் சாலோகம், சாமீபம் முதலிய பத முத்திகளை அடைவான். உயர்வான நிரதிசய முத்தியானது மோட்ச இச்சையோடு சிரவணம், மனனம், நிதித்தியாசனம் செய்பவர்களால் அஞ்ஞானம் நீங்கி தன் உண்மை வடிவத்தை அறிவதாம். கர்ம, பக்தி காண்டங்களில் சொல்லப்பட்ட பலன்கள் போல அடையப்படும் பொருளாய் இல்லாமல் ஞான காண்டத்தில் ஏற்கனவே தானாகவே விளங்கிக் கொண்டிருக்கும் பொருளாய் இருக்கின்றது. அதனால் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்று அவத்தைகளுக்கும் சாட்சியாய் எப்போதும் விளங்குகின்ற நாம் அனுபாதேயன் ஆகும்.

**அப்பிரவிர்த்தன்**

**ஏற்றுபிர விர்த்தம்அற் றவன்அப்ர விர்த்தனாம்**
**எவிதம்எனின் வங்கம் அதனில்**
**ஏகினோர்க்கு அகல்கரை மரங்கள் ஏகுதல்அலாது**
**ஏகு கப்பலில் உற்றதான்**
**தோற்றவே ஏகாது போல்கணில் தோற்றினும்**
**துனும்மனதின் மாறி எணல்போல்**
**தொழில்அகங் கரம்உறினும் ஆன்மதிட் டியினில்ஒரு**
**தொழில்நமக்கு இன்மை யானும்**
**தூற்றுஅகங் காரம்அது ஒழிந்திருந் தாலும்நம்**
**சுயதிட்டி தனில்நி விர்த்தித்**
**தொழிலைஅஃ துஉறுதலா னும்அதின் கண்ணதாய்த்**
**தோற்றுஉபய தொழில்கு றித்தும்**
**ஆற்றும்நம் திட்டியில்ஓர் பிரவிர்த்தி யாம்தொழிலும்**
**ஆம்எமக்கு அணுகல் இலதால்**
**அவ்விருவ கைக்கும்அமர் சாட்சியா கத்தொடக்கு**
**அற்றநாம் அப்ர விர்த்தன். 56**

செய்கைகள் அற்றவன் அப்பிரவிருத்தனாம். எப்படி என்றால்? கப்பலில் பயணம் செய்பவனுக்கு கரை, மரங்கள் ஓடுவதுபோலத் தோன்றும். ஓடுகின்ற கப்பலில் பயணம் செய்கின்ற தான் போகாதது போல் தோன்றினாலும், சிந்தித்துப் பார்க்கும்போது கரை மரங்கள் முதலியன ஓடாது நிற்பது தெரியும், அதுபோல, அகங்காரம் தொழிற்பட்ட போதும், ஆன்மாவான நம்மிடத்தில் ஒரு தொழிலும் கிடையாது. அகங்காரம் ஒடுங்கியிருக்கும் போதும் ஆன்மாவான நாம் ஒடுங்குவதில்லை, அந்த அகங்காரத்தின் இடத்தே தோற்றுகின்ற பிரவிருத்தி நிவிருத்தி ஆகிய இரண்டு தொழில்களும், கப்பல் ஓடும்போது மரங்கள் ஓடுவதாக தெரிவதுபோல், அத்தியாசத்தினால் நாம் செய்வது போல் மாறி தோன்றும். நமக்கு சிறிது கூட ஒரு முயற்சியும், ஒரு செயலும் இல்லாததால், இந்த அகங்காரத்தின் பிரவிருத்தி, நிவிருத்தி ஆகிய இரண்டிற்கும் சாட்சியான பற்றற்ற நாம் அப்பிரவிருத்தனாம்.

## சிவன்

**இலகுசிவன் என்னுமது நான்காவ தாம்பொருள்**
**எவிதமெனில் ஒன்று உதிக்கில்**
**இலகல்அற்று ஒன்றுஒழிதல் உறும்அவத் தாத்திரய**
**இயலுசகம் மூன்றி னுக்கும்**
**இலகுகரி யாகியே நான்கதாம் பொருளதாய்**
**எலையில்அத் துவித சித்தாய்**
**இலகிஉறு கின்றநாம் சிவன்என்ன அனுதினமும்**
**இருதயத் துஉன்னு வாயே.** **57**

சிவன் என்பது நான்காவது எனப் பொருளாம். அது எப்படி என்றால்? மூன்று அவத்தைகளுள் ஒன்று தோன்றும்போது, மற்றொன்று இல்லாமல் ஒடுங்குகிறது. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என விளங்கிக் கொண்டிருக்கும் மூன்று அவத்தைகளுக்கும் சாட்சியாய், நான்காவது பொருளாய், எல்லையற்று, எங்கும் நிறைந்து, இரண்டற்ற அறிவு வடிவமாய் நாம் விளங்கிக் கொண்டு இருக்கிறோம். ஆதலால் நாம் மூன்று அவத்தைகளையும் அறிகின்ற, சிவன் என்னும் நான்காவது பொருள் என்று தினமும் மனதில் சிந்தித்து உணர்வாயாக.

## அமிருதன்

**ஆகின்ற மரணம்இலாது அமிர்தம் யோகா**
**அமிர்தமொடு தேவாமிர் தம்பு சித்தே**

**சாகின்றோன் அலன்என்றே யுற்ற பேரும்**
**சார்ஈசர் பிரளயத்தில் நசித்தல் போல**
**ஏகஅனந்த ஆனந்த சித்து நாம்என்று**
**இலகலுறும் மோட்சஅமிர் தத்தை உற்றோன்**
**சோகமுடன் ஒருக்காலும் நசியா தால்நாம்**
**சொல்கின்ற அமிருதன்எனத் துணிந்து கொள்ளே. 58**

மரணம் இல்லாத நிலை அமிர்தமாம். யோக அமிருதத்தையும், தேவ அமிருதத்தையும் புசித்து மரணமில்லாதவர்கள் எனப்படுகின்ற யோகிகள், தேவர்கள் முதலியோரும், மாயாப் பிரதிபிம்பரான ஈசுவரனும், பிரளயத்தில் அழிவார்கள். ஒன்றாகவும், எல்லையற்றதாகவும், ஆனந்தமாகவும், அறிவு வடிவமாகவும் இருப்பதே நாம். இப்படி எப்போதும் விளங்கிக் கொண்டு இருக்கின்ற முத்தியாகிய அமிர்தத்தை அறிந்தோன் கவலையுற்று எப்போதும் அழிவதில்லை. ஆதலால் நாம் அமிர்தன் என்று சொல்லப்படுபவன் என்று உணர்ந்துகொள்.

### நிரூபன்

**உருவம்இல் லாதவன் நிரூபனாம் எவிதம்எனில்**
**உறுபூத பௌதி கங்கட்கு**
**உருவம்உண்டு இவையைஅறி சட்சுஅருவம் என்பர்சிலர்**
**உறும்இவைஇ யக்கு மனமே**
**அருவம்என்று அறிவர்சிலர் அதன்வியா பாரத்தை**
**அறிபுத்தி அருவம் என்பர்**
**அப்புத்தி கர்த்தத்துவ போக்தத் துவங்கள்தமை**
**அறிகின்ற சீவன் அவனை**
**அருவென்பர் சீவனையும் உண்டுபணி ஆட்டியும்**
**அடக்கிவா சனை யதாக**
**அமரும்மூ லப்பகுதி அருவென்பர் அதனினுக்கு**
**அதிதமாய் இவைக ளுடைய**
**விரிவுஒடுக் காதிகட்கு அமர்சாட்சி யாகவே**
**மேவி யேஉறு கின்றநாம்**
**விளங்கவே தோற்றினுங் காணொணாத் தன்மையின்**
**மிளிர்கின்ற நிரூப னாமே. 59**

உருவம் இல்லாதவன் நிரூபனாம். எவ்விதம் எனில்? பஞ்ச பூதங்களுக்கும் அவற்றின் காரியங்களுக்கும் உருவம் உண்டு. இவைகளை அறிகின்ற விழிகளை அருவம் என்பர். விழியை இயக்கும் மனமே அருவம் என்று சிலர் சொல்லுவர். மனதின் வியாபரங்களை அறிவது புத்தியாதலின், அதுவே அருவம் என்று சிலர் சொல்லுவர். புத்தியினுடைய கர்த்தா போக்தா தன்மைகளை சீவன் அறிகின்ற படியினால, சீவனையே அருவம் என்பர். சீவனை தோற்றுவித்து வாசனையோடு கூடிய அவனை ஆட்டி அடக்குவது மூலப்பிரகிருதி ஆதலின் பிரகிருதியே அருவம் என்பர். இந்த பிரகிருதிக்கும் அப்பாலாய், விழி, மனம், புத்தி, சீவன் ஆகியவைகளின் தோற்ற ஒடுக்கங்களுக்கும் நாம் சாட்சியாய் இருக்கின்றோம். எப்போதும் சுயமாக விளங்கிக் கொண்டு இருந்தாலும் காண இயலாத தன்மையால் சுயம் பிரகாசமான நாம் நிரூபனாம்.

**சாந்தன்**

**விறகினில்உண் டாம்வன்னி விறகைச் சுட்டு**
**விஞ்சாமல் வீதலின்மெய்ச் சுருதி யாலும்**
**பிரகிருதி புருஷசையோ கத்தி னாலும்**
**பிறந்தஅகண் டாகார விருத்தி ஞானம்**
**நிறைபிரம்மத் தினின்வேறாம் பகுதி பூமா**
**நிகழ்சாத்திரம் ஆதிகளைச் சுட்டுத் தானும்**
**உறுகரியாய் உற்றநமில் இறத்த லாலே**
**உலகமில்நாம் சாந்தன்என ஒரு வாயே.** **60**

விறகிலிருந்து உண்டாகின்ற தீயானது விறகை எரித்துத் தானும் அடங்கி சாந்தமாகிறது. அதுபோல, சாத்திரங்களாலும், ஆன்மா அனான்மா விவேகத்தாலும் உண்டான அகண்டாகார விருத்தியானது சீவன், சாத்திரம், ஈசுவரன் உலகம் முதலியவற்றை பொய், மித்தை, கற்பிதம் என்று நாசமாக்கும். அந்த அகண்டாகார விருத்தி தானும் சாட்சியாகிய நம்மிடத்தில் ஒடுங்குவதால் உலகம் ஆக இல்லாத நாம் சாந்தன் என அறிவாய். (அகண்டமான பரம்பொருளைப் பொருளாக உடையதாக இருப்பதால் மனதின் விருத்தி அகண்டாகார விருத்தி எனப்படும்.)

**அபயன்**

**பயம்அற்றோன் அபயனாம் ஒன்றுக்கு ஒன்று**
**பயம்உற்ற மிருகபட்சி மனுடர் மன்னர்**

**மயலின்முனி சுரர்அசுரர் உலோக பாலர்**
**மால்அரனே முதலான பெயர்க ளாலும்**
**சுயம்சித்தாம் அகண்டநமை அறுக்க வெட்டச்**
**சுடநனைக்கப் பிடிக்கஅடைக் கப்ப டாதால்**
**இயலும்ஒரு பயம்அதுவும் அற்றே உற்ற**
**எழிலான நாம்அபயன் என்ன ஓர்வாய். 61**

பயம் அற்றவன் அபயனாம். உலகில் தனக்கு மேலானவற்றிடம் தாழ்ந்த ஒன்றிற்கு பயம் உண்டாகும். எப்படி என்றால்? பறவைகள் மிருகங்களால் பயமுறும். மிருகங்கள் மனிதர்களால் பயமுறும். மனிதர்கள் அரசரால் பயமுறுவர். அரசன் தெளிந்த முனிவரால் பயமுறுவன். முனிவர் தேவர்களால் பயமுறுவர். தேவர்கள் அசுரர்களால் பயமுறுவர். அசுரர்கள் பூமியைக் காக்கின்ற லோக பாலர்களால் பயமுறுவர். உலகை காக்கின்ற திருமாலும் உருத்திரனால் பயமுறுவர். இப்படி ஒருவருக்கொருவர் பயம் உண்டாம். இயல்பாய் அறிவே வடிவமான, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற நம்மை, மனிதன், அரசன், முனிவர், தேவர், பாலர், விஷ்ணு முதலானவர்களால் வாளினால் அறுக்கவோ, கோடாரியால் வெட்டவோ முடியாது. தீயினால் சுட முடியாது, நீரினால் நனைக்க இயலாது, கைகளால் பிடிக்க முடியாது, ஓரிடத்தும் அடைக்க முடியாது. எந்த ஒரு பயமும் சிறிதும் இல்லாததால் பயமற்றவன் என்னும் பெருமை உடைய நாம் அபயன் என்று அறிந்து கொள்.

## நித்தியானந்தன்

**ஈனவிடம் உறும்தேனின் ஓர்உர்கள் சீமைநல்**
**இராச்சியம் அதுஆள்வர் சுகமும்**
**எதிரிஅனல் வியாதிஉட் பீடைமழை சோரர்காற்று**
**இடியாதி துன்பம் உறலால்**
**ஆனந்தம் என்னல்கூ டாதுஇராச்சியம் முழுதும்**
**ஆளுதலும் நூறு வயதும்**
**அரோகதிட காத்திரமும் ஆதியாம் இலட்சணம்**
**அடைந்தவர்க்கு உற்ற மனுட**
**ஆனந்தம் உண்டுஇதனின் நூறுநூறு அதிகமாய்**
**அரிவரையில் உற்ற சுகமும்**
**அமருகா லாந்தரத்து அழிதலால் இத்தனையும்**
**அமர்மாயை என்று தள்ளி**

**ஊனமுறு வாந்திபணும் *அசனம்என வேவிட்டு**
**ஒருகாலும் மாறல் இலதாய்**
**உளஅகண் டஆனந்த மேஉருவ மானநாம்**
**ஒப்பில் நித்தியா னந்தனாம்.** 62

அற்பமான விஷயங்களால் அடைகின்ற சுகங்கள் துக்கத்தோடு கூடியவை. சிறிய ஊர்கள், பெரிய ஊர்கள் அடங்கிய தேசத்தை ஆள்பவரின் சுகமும், பகைவர், தீ, வியாதி, மனக்கவலை, மழை, திருடன், காற்று, இடி, மின்னல் முதலியவற்றால் துன்புறுவதால் ஆனந்தம் இல்லையாம். நூறு வருடங்கள் நோயில்லாமல் ஆரோக்கியத்துடன் பூமி முழுவதும் ஆளுகின்ற சக்ரவர்த்தி அனுபவிப்பது மனுட ஆனந்தம் எனப்படும். இந்த மனுட ஆனந்தத்தைவிட தேவர்களுக்கு நூறு மடங்கு ஆனந்தம் அதிகமாம். இப்படி நூறு நூறு மடங்கு அதிகமாய் விஷ்ணு வரையில் அனுபவிக்கின்ற ஆனந்தமும் பிரளய காலத்தில் அழியும். ஆதலால் மனுட ஆனந்தம் முதல் விஷ்ணு வரை அனுபவிக்கின்ற ஆனந்தம் எல்லாம் பொய் என்று நிச்சயித்து, இழிவான வாந்தி எடுத்த சோற்றைப்போலக் கருதி விட்டு விடவேண்டும். ஆதலால் எப்போதும் மாறுதல் இல்லாமல் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற ஆனந்தமே வடிவமான நாம் ஒப்பில்லாத நித்யானந்தனாம்.

## நிர்விஷயன்

**பிரிவதாம் உருநாம உலகுசற் சிற்சுகப்**
**பிரமமாய் இலக லானும்**
**பிரமத்தி னுக்குமே விடயமாய் அறியஒரு**
**பின்னசத் திஇன்மை யானும்**
**பிரமஉரு வாம்நமக்கு எக்காலும் விடயமிலை**
**பெறுவிடயம் வந்தது என்னப்**
**பிறங்கலும் புத்ராதி துக்கசுகம் அவையிலோன்**
**பெறுதல்போல் தோற்றி னாலும்**
**தரவிவே கத்தினால் பார்த்தஉட னேஅவைகள்**
**தகும்அவற்கு இலது போலச்**
**சத்துமாத் திரமாக வேகண்ட பொழுதிலே**
**சத்தையே அன்றி உலகம்**

* அசனம் - சோறு

**விரிவாக வந்ததும் போனதுவும் இலையென்று**
**விடயமுறு பற்றுஎ நாளும்**
**விமலஆன் மாவினுக்கு இல்லாத தால்இயாம்**
**மேவுநிர் விஷய னாமே.** **63**

நாம உருவமாக காணப்படும் உலகமானது சச்சிதானந்த பிரம்மாய் விளங்குகின்றது. பிரம்மத்திற்கு வேறாக அறியப்படக்கூடிய உண்மையான ஒரு பொருளும் இல்லவே இல்லை. ஆதலால் பிரம்மமே வடிவமான நமக்கு எப்போதும் அறிவதற்கு ஒரு விடயமும் இல்லை. புத்திரன் மனைவி முதலியோர் துக்க சுகங்களை அனுபவிக்கும்போது, அந்த துக்க சுகங்கள் இல்லாதவன், தான் அவற்றை அடைவது போல் தோன்றினாலும் தீவிரமான விவேகத்தால் விசாரித்துப் பாக்கும் போது அந்த துக்க சுகங்கள் அவனுக்கு இல்லாதது தெரிகிறது. அதுபோல, நாம ரூபங்களை நீக்கி சத்து மாத்திரமாக உள்ள பிரம்மத்தை அறிந்தவுடன், சத்து மாத்திரமாகவே இருப்பதே அன்றி உலகம் தோன்றுவதும் நாசமாவதும் இல்லை. விடயங்களை அடைய வேண்டும் என்கிற ஆசை எப்போதும் சுத்தமான பிரமத்திற்கு இல்லாததால் நாம் நிர்விஷயனாம்.

### பழையோன்

**முன்னும்இழி தூலதனு உதித்து நூறாய்**
**மொழிகின்ற வருடமதில் லயமா தற்கு**
**முன்னும்சூக் குமஉடலம் சிருஷ்டி தன்னின்**
**முளைத்ததுதான் பிரளயத்தில் லயமா தற்கு**
**முன்னும்விசிட் டர்கள்ஞானம் தன்னி னாலே**
**முடிகின்ற லயம்அதனை அடைத லுக்கும்**
**முன்னும்நாம் இருக்கின்ற படியி னாலே**
**முரண்அறநாம் பழையோன்என்று அகத்தில் தேர்வாய்.** **64**

தூல சரீரம் தோன்றுவதற்கு முன்னும், நூறு வருடங்களில் தூல சரீரம் அழிந்த பின்னும், சூக்கும சரீரம் சிருட்டிப்பதற்கும் முன்னும் அது பிரளயத்தில் அழிந்த பின்னும், சீவர்கள் ஞானம் பெற்றுக் காரண சரீரம் நீக்குவதற்கு முன்னும், எப்போதும் நாம் இருக்கின்ற படியினாலே சந்தேகம் இல்லாமல் நாம் பழையோன் (புராணன்) என்று மனதில் நிச்சயிப்பாய்.

### புராதனன்

**விளைதல்உறும் சமட்டியென் மேவும்உடல் தான்மூன்றும்**
**தளிர்தல்உறு புரம்இந்தச் சார்மூன்று புரத்திலும்நாம்**
**அளவுபடா வடிவான அதிட்டான மாய்இருந்து**
**விளையாடும் அதனால்நாம் விளங்குபுரா தனனாமே. 65**

தூலம், சூட்சுமம், காரணம் எனத் தோன்றுகின்ற எல்லா உடல்களும் நாம் மகிழ்வோடு பொருந்தியிருக்கின்ற இடமாகும். இப்படி மூன்று சரீரங்களிலும் சார்ந்திருந்தாலும் நாம் எல்லையில்லா வியாபக வடிவானவன். இவைகளுக்கு காரணமாய் இருந்து கொண்டு முப்புரங்களிலும் விளையாடுவதனால் நாம் சுயமாகவே விளங்குகின்ற புராதனன் ஆம்.

### சூனியன்

**சகலமுமே சிற்சடங்கள் ஆகத் தங்கும்**
**சடங்கள்எலாம் சத்துஅன்றி எப்போ துந்தான்**
**மிகவும்அசத்து ஆனபடி யாலும் சித்து**
**மேவும்இலட் சணமும்இலட் சியத்தில் இன்றிப்**
**புகலும்இலட் சியமும்இலட் சணத்தில் இன்றிப்**
**போகின்ற படியாலும் அதற்குஅப் பாலே**
**பகரும்ஒரு வஸ்தும்இல தாலும் நாமே**
**பழமறைசொல் சூனியன்என்று அறிந்து கொள்ளே. 66**

நாம ரூபமான உலகில் உள்ள எல்லாம் சேதனமாகவும் அசேதனமாகவும் இருக்கின்றன. அவற்றுள் அசேதனமான, சடப்பொருள்கள் எல்லாம் சத்துத்தன்மை இல்லாவிடில் எப்போதும் ஒரு சிறிதும் இல்லாத பொருள் ஆகிவிடும். சேதனத்தின் இலட்சணமாகிய சுயமாக விளங்கும் தன்மை, அதற்கு உதாரணமாக சொல்லப்பட்ட பொருளில் இன்றாம். அப்படி உதாரணமாக சொல்லப்பட்ட பொருள்களும் சித்தின் இடத்தில் இன்றாம். இப்படி சித்துக்கு வேறாக ஒரு பொருளும் இல்லாததால், நாமே தொன்மையான வேதம் கூறுகின்ற சூனியன் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

### மகா சூனியன்

**அவ்விதமாம் சூனியமும் அறிவில் சூன்யம்**
**ஆம்எனவே அபாவமாய் அறிகை யாலே**

**அவ்விதமாய் அதையறியும் ஞானந் தானும்**
**அமர்ஞானஅ பாவஅனு பவத்தி னில்தான்**
**அவ்விதமே இலதால்அவ் வறிவி னோடே**
**அமருசூ னியமும்போய் அயல்ஒன் றுந்தான்**
**செவ்விபெற இல்லாத படியி னால்நாம்**
**செறியும்மகா சூனியன்என்று அறிய வேண்டும். 67**

முன் பாடலில் சொல்லப்பட்ட சூனியமும், சடமான சூனியம் என்று அபாவமாய் அறியப்படுகிறது. அவ்விதமாய் அதை அறிகின்ற ஞானமும், சூனியத்தை அறிகின்ற அனுபவம் இருந்தபோதும் தான் சூனியமாய் இருப்பதில்லை. இப்படி அறிவே வடிவான நம்மிடத்தில் அறியப்படும் பொருளாக உள்ள சூனியமும் நீங்கிவிட்டால், நமக்கு வேறாக நிலையான பொருள் ஒன்றும் இல்லை. ஆதலால் நாம் மிகவும் மகா சூனியன் என்று அறிந்துகொள்ள வேண்டும்.

### நிவிர்த்தன்

**ஆர்பஞ்ச பூதப்ர பஞ்சவிட யங்கள்நாம்**
**அன்றுஎன்று நீங்க லாலே**
**ஐந்துவிட யஅவ்விகா ரங்களும் தூலதனு**
**அன்றுநாம் ஆத லாலே**
**சார்சனனம் மரணம்மூப்பு எவ்வன்ன வாலிபம்**
**சரைமுதல் விகாரம் அவையும்**
**தகுசூக்க தனுவும்அகம் அலதால் மறப்பாதி**
**சங்கற்பம் ஆதி யாகச்**
**சேர்விகா ரங்களும் அவித்தையோ டுஉறுகின்ற**
**சீவன்அகம் அன்ற தாலே**
**செறியும்அறிவு அறியாமை முதல்விகா ரங்களும்**
**திகழ்மாயை உற்ற ஈசன்**
**நேர்அகம் அலாததால் சர்வக்ஞன் ஆதியொடு**
**நிகழ்ஐந்து தொழில்கள் ஆன**
**நிரைவிகா ரங்களும் நமக்குஇல்லை ஆதலின்**
**நிவிர்த்தன்நாம் என்ன அறிவாய். 68**

பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களின் குணமான சத்தம், பரிசம் முதலிய விடயங்கள் நாம் அல்ல என்று நீக்குவதால், அந்த ஐந்து விடயங்களின் விகாரங்கள் நமக்கில்லை. நாம் தூல சரீரத்திற்கும் வேறானபடியால், அவற்றின் விகாரங்களான பிறப்பு, இறப்பு, இளமை, வாலிபம், முதுமை, நரை, திரை முதலியன ஒரு சிறிதும் இல்லை. சூக்கும சரீரமும் நாமல்ல ஆதலால், மறத்தல் நினைத்தல் முதலிய விகாரங்களும் கிடையாதாம். அவித்தையில் பிரதிபிம்பமான சீவன் நாமல்ல ஆதலால், எனக்குச் சிறிதும் அறிவு அறியாமையாதி விகாரங்கள் இலவாம். மாயாப் பிரதிபிம்பனான ஈசுவரனும் நாமல்லாமையின், சர்வஞ்ஞன், சர்வேசுவரன், சர்வகாரணன் முதலிய இலட்சணங்களும், படைத்தல், காத்தல், முதலிய ஐந்து தொழில்களும் கிடையாது. ஆதலால் நாம் நிவிர்த்தன் என்று அறிந்துகொள்.

**அகாமன்**

**மயிர்நகம் தோல்நீர்இ ரத்தமொடு கோழைசீ**
**மலச லம்தசை பீளையும்**
**வழும்புஅஸ்தி சுக்கிலம் நரம்புஅழுக் காம்வேர்வை**
**வனமில்கு றும்பி ஆதி**
**செயிர்உற்ற இவைகளைக் கேட்கினும் தொடுகினும்**
**சீயென்ன அருவ ருப்புத்**
**தீண்டிடில் தானமே செய்யவேண் டிடுதலால்**
**சேர்கணில் கண்ட உடனே**
**நயம்இலா அருவருப் புஉண்ணிஓக் காளத்தை**
**நண்ணலால் அருவ ருப்பு**
**நாற்றமும் துர்க்கெந்தம் ஆதலால் ஆக்ராணம்**
**நண்ணலில் அருவ ருப்பு**
**வியமில்இவை உறும்வனிதை தனைமேவி னால்நிந்தை**
**வியாதிதுன் புறுத லானும்**
**மேவும்இத் தோஷம்எல் லாம்அறிந்து அதில்இச்சை**
**விடுதலின் அகாமன் நாமே.** **69**

மயிர் நகம் தோல் சிறுநீர் இரத்தம் இவைகளோடு கோழை மலம் மாமிசம் கண்ணில் சேர்கின்ற பீளை கொழுப்பு எலும்பு சுக்கிலம் நரம்பு முதலியவை அசுத்தமாம். மற்றும் வேர்வை காதில் உள்ள குறும்பி முதலிய ஈனமான இவைகளை கேட்ட போதிலும் தொட்ட

போதிலும் சீயென்று அருவருப்பு உண்டாகின்றது. மேலும் இவைகளைத் தொடுவதால் ஸ்நானம் செய்து தூய்மை செய்ய வேண்டியிருக்கிறது. கண்ணால் கண்ட உடனே இதமாய் இல்லாமல் வெறுப்பு உணர்வு தோன்றுகிறது. நினைத்தால் வாந்தி செய்யத் தோன்றுகிறது. இவைகள் தீய வாசனை உடையதால் மூக்கால் முகரும் போது வெறுப்பு உண்டாகிறது. இவ்வாறான அசுத்தங்களை உடைய பெருமையில்லாத மகளிரைப் பொருந்தினால் நிந்தை வியாதி முதலிய துன்பங்கள் உண்டாகும். மகளிரைச் சேர்வதால் உண்டாகும் இந்த குற்றங்களை எல்லாம் அறிந்து அதில் நிராசையுற்று உள்ள நாம் அகாமன் ஆகும்.

### அலோபன்

**தேகியென்று கேட்டுவந்த பேர்கள்தமக்கு**
**இல்லையெனாது எந்தநாளும்**
**சோகமின்றிக் கொடுப்பவனே ஈகைஉடை**
**யோன் என்னச் சொல்வர் ஞானி**
**தாகமின்றித் தனதிடத்துஉள் ளவைகளையும்**
**தன்னையுமே தனையுற் றோர்கட்கு**
**ஈகையினால் நாம்மிகவும் அலோபன்என**
**அனுதினமும் எண்ணு வாயே.** **70**

தேகத்திற்காகக் கொடுங்கள் என்று தன்னிடம் யாசித்து வந்தவர்களுக்கு இல்லை என்னும் துன்பம் தரக்கூடிய சொல்லைக் கூறாமல், தன்னால் முடிந்ததை எப்போதும் வருத்தம் இல்லாமல் சிரத்தையுடன் கொடுப்பவனே வள்ளல் என்று பெரியோர் சொல்லுவார்கள். ஞானி ஆசையின்றி தன்னிடத்து உள்ள பொருள்களையும் மட்டுமன்றி, தான் பெற்ற ஆத்ம ஞானத்தையும் தன்னை அடைந்தவர்க்குக் கொடுப்பதால், நாம் மிகவும் அலோபன் என்று எப்போதும் சிந்திப்பாயாக.

### உன்னதன்

**அதிகமதாம் சீவனினும் மூல தேகம்**
**அதின்அதிகம் சூக்கஉடல் தூல தேகம்**
**அதின்அதிகம் அதின்அதிகம் பஞ்ச பூதம்**
**அதின்அதிகம் மாயைஅதின் அதிகம் ஈசன்**
**அதின்அதிகம் பிரமம்இந்தப் பிரம மேநாம்**
**ஆனதனால் நாம்அவைகள் அனைத்தி னுந்தான்**

**அதிகம்நமி லும்அதிகம் இலாத தாலே**
**அமர்நாமே உன்னதன்என்று அறிந்து கொள்ளே. 71**

சீவன் அதிகமாம். ஆபாசன் ஆகிய சீவனைவிட காரண சரீரம் அதிகமாம். காரண சரீரத்தை விட அதிகமாம் சூட்சும சரீரம். சூட்சும சரீரத்தினும் அதிகம் தூல தேகமாம். தூல தேகத்தினும் அதிகம் பஞ்ச பூதங்களாம். பஞ்ச பூதங்களினும் அதிகம் மாயையாம். மாயையைட அதிகம் ஈசுவரனாம். ஈசுவரைனவிட அதிகம் பிரம்மமாம். இந்தப் பிரம்மே நாம் ஆனதனால், நாம், சீவன், மூன்று சரீரங்கள், பஞ்ச பூதங்கள், மாயை, ஈசுவரன் ஆகிய இவைகளைவிட அதிகமாம். பிரம்மம் ஆகிய நம்மைவிட அதிகமானது யாதொன்றும் இல்லாததால், எல்லாவற்றிலும் மேன்மையாகப் பொருந்தியுள்ள நாமே உன்னதன் என்று தெரிந்துகொள்வாய்.

## அக்குரோதன்

**கன்மமொடு கர்த்தாவி னிடம் அதாயும்**
**கருதுபஞ்சு பூதங்க ளிடம் அதாயும்**
**தொன்மைசுக துக்கம்அவை வரினும் சுற்றம்**
**சோரருடன் மிகும்அரசர் சனங்கள் தேகம்**
**வன்மைபசு புண்மிருக செந்து பீடை**
**வகைவகையாய் அநேகவிதம் வந்த போதும்**
**மின்மனதில் தாக்கினும்நம் மிடத்தில் தாக்கா**
**விதம்அதனால் அக்குரோதன் நாம்என்று ஓர்வாய். 72**

செய்கின்ற தொழில்களினால் அதைச் செய்பவனுக்கு வருத்தம் உண்டாகும். பஞ்ச பூதங்களினாலும் வருத்தம் உண்டாகும். இதனால் சுக துக்கங்கள் வந்து கொண்டே இருக்கும். சுற்றத்தார், திருடர்கள், வலிமைமிக்க அரசன், மக்கள், பசு, கொடுமையான மிருகங்கள் மற்றும் ஊர்வனவாகிய ஜந்துக்கள் மூலம் பலவிதமாய் துன்பங்கள் வந்து கொண்டே இருக்கும். இப்படி மனதில் மின்னலைப்போல துன்பங்கள் தோன்றித் தாக்கினாலும், நம்மிடத்தில் அவைகள் துன்பங்களை உண்டு பண்ணுவதில்லை. நமக்கு துன்பங்கள் ஒரு சிறிதும் இன்மையால் நாம் அக்குரோதன் என்று அறிந்து கொள்.

**நிதித்தியாசன யுத்தி முற்றிற்று**

## சமாதி யுத்தி

### நித்தியன்

**பிரிவுறும்எத் தேசத்தும் எக்கா லத்தும்**
**பெருவானம் ஒருபடித்தாய் உறல்போல் சுத்த**
**பரியந்தம் உளஅகில பிரபஞ் சத்தில்**
**பஞ்சவித கோசம்உள விடங்கள் எல்லாம்**
**விரிவுறும்அக் கோசத்தைக் காண்பா னாய்யாம்**
**மேவியே எப்போதும் இருத்த லாலே**
***இரிதலில்நாம் நித்தியன்என்று எக்கா லத்தும்**
**இதயத்தில் அவ்விதமாய் எண்ணு வாயே. 73**

பிரிந்துள்ள எந்த தேசத்திலும், சென்ற காலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகிய எக்காலங்களிலும், வியாபகமான ஆகாயம் ஒரே படித்தாய் இருக்கிறது. அதுபோல ஈசுவர, சீவ, செகத்துக்களாகிய முப்பத்தைந்து தத்துவங்களால் ஆகிய எல்லா உலகங்களிலும் இருக்கின்ற ஐந்துவித கோசங்களின் தோற்ற ஒடுக்கங்கள் எல்லாவற்றையும் நாம் அறிகின்றவனாகும். ஆதலால் அழிவில்லாத நாம் நித்தியன் என்று உணர்வாயாக.

### சர்வகதன்

**திதசாட்சி தனில்ஏக தேசகற் பிதமாய்ச்**
**செறிமாயை ஈசர் இவரில்**
**திகழ்ஏக தேசகற் பிதமாம்வி ராட்டாதி**
**சேர்கின்ற ஐந்த வத்தை**
**இதில்ஏக தேசகற் பிதம்ஐந்து பூதங்கள்**
**இதில்ஏக தேசம் உலகம்**
**இதில்ஏக தேசகற் பிதமதாம் தேசங்கள்**
**இதில்ஏக தேசம் ஊர்கள்**

---

* *இழிதல் = அழிதல்*

**இதில்ஏக தேசமாம் கிரகங்கள் இக்கிரகம்**
**இதில்ஏக தேசம் உடல்கள்**
**இதில்ஏக தேசமாம் இந்திரியம் இவிதமாய்**
**எணும்ஒன்றோடு ஒன்று கூடாச்**
**சுதஉலகம் முழுதினையும் அறிகின்ற அறிவதே**
**சொரூபமாய் எங்கும் நிறைவாய்ச்**
**சூழ்ந்துஉறைத லால்இயாம் சர்வகதன் நாம்எனத்**
**துணிவாக எண்ணு வாயே. 74**

எப்போதும் சாட்சியாக இருக்கும் எம்மிடத்தில் ஏக தேசத்தில் கற்பித மாயையில் பிரதிபிம்பனானவன் ஈசுவரனாம். ஈசுவரன்பால் ஏகதேச கற்பிதம் விராட்டு, இரண்யகர்ப்பம், அவ்வியாகிருதம் ஆகிய சரீரங்களும் அதனோடு கூடி நிகழ்கின்ற அவத்தைகள் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ஐந்துமாம். இந்த ஈசுவரனிடத்தில் ஏக தேச கற்பிதம் ஐந்து பூதங்களாம். இந்த ஐந்து பூதங்களில் உலகங்கள் கற்பிக்கப்பட்டவைகளாம். உலகங்களில் தேசங்கள் கற்பிக்கப் பட்டவைகளாகும். தேசங்களில் ஓரிடங்களில் ஊர்களும், ஊர்களில் ஓரிடங்களில் வீடுகளும் கற்பிக்கப்பட்டனவாம். இந்த வீடுகளில் ஓரிடத்தில உடல்களும், உடலில் ஓரிடத்தில இந்திரியங்களும் கற்பிக்கப்பட்டனவாம். இவ்விதமாய் ஒன்றோடு ஒன்று முழுமையாகப் பொருந்தாமல் இருக்கின்ற நிலையில்லாத உலகம் முழுவதையும் அறிகின்ற அறிவு வடிவமாய் எங்கும் நீக்கமற நிறைந்து யாவற்றையும் சூழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆதலால் நாம் சர்வகதன் என உறுதியாக உணர்வாயாக.

### சர்வாதாரன்

**எவம்அவித்தை விசிட்டனுக்குஆ தாரம்சூக்கம்**
**இதற்குஆதா ரம்தூல உடல்அநேக**
**விவிதஉடற்கு ஆதாரம் விராட்டே ஆதி**
**மிளிர்சகங்கள் அவைக்குஇடந்தான் மாயை ஈசன்**
**அவர்தமக்கு ஆதார மாகச் சச்சி**
**தானந்த மாய்இருக்கும் நம்மி டத்தில்**
**கவிழ்தல்உறும் இவைகள்எலாம் ஏக தேச**
**கற்பிதம் ஆதலில்நாமே சர்வா தாரன். 75**

அவித்தையில் பிரதிபிம்பனான சீவனுக்கு ஆதாரம் சூட்சும சரீரமாம். சூட்சும சரீரத்திற்கு ஆதாரம் தூல சரீரமாம். இவ்வித அநேக சரீரங்களுக்கு, விராட்டு, இரண்யகர்ப்பம், அவ்வியாகிருதம் எனப்படும் ஈசுவரனின் சரீரத்திரயங்கள் ஆதாரமாம். விளங்கிக் கொண்டிருக்கும் சகங்களுக்கு ஆதாரம் மாயையும், மாயாப் பிரதிபிம்பனான ஈசுவரனுமாம். அவைகளுக்கும் ஆதாரமாக இருப்பது சச்சிதானந்தமாய் இருக்கும் நாமேயாகும். தோன்றி நாசமாகக் கூடிய இவைகள் எல்லாம் நம்மிடத்தில் ஏக தேசத்தில் கற்பிக்கப்பட்டவைகளாம். ஆதலால் நாமே சர்வாதாரன் ஆகும்.

### நிராதாரன்

**ஆதாரம் என்று முன்சொல் அவிதம்ஈ சுரன்அந் தத்துக்கு**
**ஆதாரம் ஆக உற்ற அழிவறும் எமக்கு வேறோர்**
**ஆதாரம் இல்லா தாலும் அலைதலில் யாம்எ மக்கே**
**ஆதாரம் ஆன தாலும் அகம்நிரா தாரன் நாமே. 76**

அவித்தை சீவன் மாயை ஈசுவரன் சரீரத்திரயங்கள் ஆகிய யாவற்றிற்கும் நாமே ஆதாரம் என்று முன் பாடலில் விளக்கப்பட்டது. பிருதிவி முதல் ஈசுவரன் வரைக்கும் சொல்லப்படுகின்ற முப்பத்தைந்து தத்துவங்களுக்கும் ஆதாரமாக இருக்கின்ற அழிவில்லாத நமக்கு வேறோர் ஆதாரம் இல்லை. எங்கும் நீக்கமற நிறைந்து அசைவில்லாதிருக்கும் நாமே நமக்கு ஆதாரமாம். ஆதலால் நான் நிராதாரன் ஆகும்.

### ஆதி

**இயல்உடல்க ளுக்குஆதி பூதம்அது இவைக்குஆதி**
**எண்ணும்விட் சேப சத்தி**
**இதுதனக்கு ஆதாரம் மாயையோடு அவித்தைகள்**
**இவைக்குஎலாம் ஆதி வஸ்தாய்ச்**
**சுயசித்த தாகவே உறுகின்ற தாலும்ஒரு**
**சூக்கஉடல் உற்ற போதே**
**தோற்றிஅழி பல்கோடி தூலதனு ஒருமூல**
**துகள்உடல் உற்ற பொழுதின்**
**அயசிருஷ்டியில் உதித்து அழிகோடி சூக்கதனு**
**நவில்கின்ற சீவ னுக்கும்**

**நாடும்உற் பத்திஇல் லாததால் ஆதியென**
**நண்ணியே சீவன் முத்தி**
**அயல்இலாது உற்றஉடன் ஏகின்ற தால்அந்தம்**
**ஆகின்ற சீவ னுக்கும்**
**அனியமாய் இத்தனைக் கும்முதற் பொருள்ஆன**
**தாலும்நாம் ஆதி யாமே. 77**

விவரிக்கப்பட்ட சரீரங்களுக்குக் காரணம் ஐந்து பூதங்களாம். அந்த பூதங்களுக்கு மூலமாக சொல்லப்படுவது விட்சேப சத்தியாகும். இந்த விட்சேப சத்திக்கு ஆதாரமாக இருப்பது சத்துவகுண மாயையும், இரஜோ குண அவித்தைகளுமாம். இவைகளுக்கு எல்லாம் காரணமான நாம் இயல்பாகவே அறிவு வடிவமாய் இருக்கிறோம். ஒரு சூட்சும சரீரம் உள்ள போதே பல கோடி தூல சரீரங்கள் தோன்றியழியும். ஒரு குற்றம் பொருந்திய காரண சரீரம் உள்ள போதே சிருஷ்டியில் பல கோடி சூட்சும சரீரங்கள் தோன்றி அழியும். ஆபாசனாக சொல்லலப்படுகின்ற சீவனுக்கு கருதுகின்ற வடிவம் கிடையாது. ஆதலால் ஆபாசனே முதற்பொருள் என்று அறிந்த உடனேயே தனக்கு அன்னியமில்லாத சீவன் முத்தி நிலை சித்திக்கும். ஞானத்தால் அஞ்ஞானம் நாசமானபின் அழிகின்ற சீவனுக்கும் வேறாய் இத்தனைக்கும் நாமே முதற்பொருள் ஆனதால் நாம் ஆதியாகும்.

## அநாதி

**இப்படியே எவைகளுக்கும் ஆதி யான**
**எமக்குஆதி இலதாலும் அநாதி என்று**
**செப்புகன்மம் அஞ்ஞானம் வேதம்ஈசன்**
**சீவன்எனும் உபாதிசித்தாய் உறும்ச கத்துக்கு**
**அப்பில்நிரு பாதிசித்தாம் பிரமம் ஆறில்**
**கற்பிதமாம் அநாதிஐந்தி னுக்கும் மூல**
**தப்பறுசித் தினுக்குஆதி இலதால் அந்தச்**
**சைதன்யம் ஆனநாம் அநாதி யாமே. 78**

(முன்பாட்டில் விளக்கியபடி) எல்லாவற்றிற்கும் முதற்பொருளான எமக்கு முதற்காரணம் இல்லை. கருமம், அஞ்ஞானம், வேதம், ஈசுவரன், சீவன் என்னும் ஐந்து அநாதிகளாக சொல்லப்படுவது பிரபஞ்சம். தோன்றி அழியாது உபாதிகளற்று இருப்பது அறிவு வடிவமான பிரம்மமாம். பிரம்மம், கருமம், அஞ்ஞானம், வேதம், ஈசுவரன், சீவன் ஆகியவை ஆறு அநாதிகள் எனப்படும். இவற்றில் கருமம், அஞ்ஞானம், வேதம், ஈசுவரன்,

சீவன் அகிய ஐந்தும் கற்பித அநாதிகளாம். இவ்வைந்திற்கும் காரணமான அழிவில்லாத அறிவே வடிவமான எமக்கு முதற்காரணம் இல்லை. ஆதலால் அறிவு வடிவமாய் இருக்கின்ற நாம் அநாதியாம்.

(பிரம்மம் எல்லாவற்றிற்கும் காரணம் ஆனதால் வாஸ்தவ அநாதி. மற்ற கருமம், அஞ்ஞானம், வேதம், ஈசுவரன், சீவன் ஆகியவை ஞானம் பெற்றபின் நாசமாவதால் கற்பித அநாதிகளாம்.)

**விபு**

**இதமறுவி சிட்டனினும் விபுசூக்க உடல்இதனில்**
**இழிதூல உடலம் விபுவாம்**
**இதுதனினும் விரிவுபார் இதனினும் விரிவுநீர்**
**இதுதனினும் விரிவு கனலாம்**
**இதனினும் காற்றுவிரிவு இதனினுங் ககனம்விரிவு**
**இதுதனின் இரண்ய கர்ப்பம்**
**எய்தும்விரிவு இதனின்அவ் வியாகிருதம் விரிவாகும்**
**இதனின்அவ் வியத்தம் விபுவாம்**
**இதனினும் சுத்தம்விரிவு இவைகள்தம் மாலும்மட்**
**டிடவொணா தேவி ரிந்த**
**எழின்மாயை உறுஈசர் அவராலும் மட்டிடவும்**
**இயலாது அனந்த விரிவாய்**
**இதமதுறும் அத்திபா திப்பிரிய மாம்நமிலும்**
**எய்துமற் றொன்று பெரிதாய்**
**எம்மைமட் டுக்கட்ட வொன்றும்இல் லாததால்**
**என்றும்நாம் விபுவ தாமே.** **79**

பந்தப்பட்டுள்ள ஆபாசனைவிட விரிவு உடையது சூட்சும சரீரம். சூட்சும சரீரத்தைவிட இழிவான தூல சரீரம் விரிவு உடையதாம். தூல சரீரத்தை விட விரிவாய் இருப்பது பிருதிவி. பிருதிவியைவிட விரிவாய் இருப்பது நீராம். நீரினும் விரிவாய் இருப்பது நெருப்பாம். நெருப்பைவிட காற்று விரிவு உடையது. காற்றைவிட ஆகாயம் விரிவாம். ஆகாயத்தை விட ஈசுவர தூல சரீரமான விராட்டு விரிவு உடையதாம். விராட்டைவிட ஈசுவர சூட்சும சரீரமான இரண்யகர்ப்பம் விரிவாகும். இரண்ய கர்ப்பத்தைவிட ஈசுவர காரண சரீரமான அவ்வியாகிருதம் விரிவாகும். அவ்வியாகிருதத்தைவிட மூலப்

பிரகிருதியான அவ்வியத்தம் விரிவாகும். அதைவிட மாயை விரிவு உடையது. இவைகளால் அளவிட முடியாத மாயாப் பிரதிபிம்பனான ஈசுவரன் இவைகளைக் காட்டிலும் விரிவாம். ஈசவரனாலும் அளவிட இயலாமல் எல்லையில்லாத விரிவாய் இருப்பது எந்தவித குற்றமும் இல்லாத சச்சிதானந்தமாம். நம்மைவிட பெரிதாய், நம்மை அளவுபடுத்தி காட்டுவதற்கு மற்றொன்றும் இல்லாததால் எப்போதும் நாம் விபுவே ஆவோம்.

**மகத்து**

**அவதாவ ரத்தின்அறி வான்மகத் துஆனமிரு**
**காதிஅதின் நீச ராதி**
**அவர்களினும் நான்குவன் னத்தர்அவ ரிற்கன்மி**
**அவரினில் தீக்ஷி தர்களாம்**
**அவரினில் உபாசகர்கள் இவரில்ரிஷி அவரில்பிதிர்**
**அவர்தமிலும் உலக பாலர்**
**அவரினில் பூதபதி அவரின்வை சுவானரன்**
**ஆதிஅவ ரில்பு ருஷராம்**
**அவரினிற் குமரர்அவ ரியாவரினு மேமகத்து**
**ஆகும்நற் றேவி தேவன்**
**அவர்கள்இரு வர்க்கும்பி ராணபூ தமதாகி**
**அவர்களால் பத்தி பண்ண**
**அவமறும கத்துவம்அ துறும்எமக்கு அதிகசமன்**
**ஆம்வஸ்து இலாமல் நாமே**
**அமர்கின்ற யாவையினும் அதிசயித் தவன்ஆத**
**லான்மகத்து ஆகும் நாமே.** **80**

ஓரறிவு உடைய தாவரத்தைக் காட்டிலும், முறையே இரண்டு மூன்று நான்கு ஐந்து அறிவுகளை உடைய மிருகங்கள் மேலானது. மிருகங்களைக் காட்டிலும் கீழ்மக்கள் மேன்மையானவர். கீழ்மக்களை விட சூத்திரர், வைசியர், க்ஷத்ரியர், பிராமணர் மேன்மை உடையவர்கள். அவர்களிலும் தம்தம் வருணத்திற்குரிய கருமங்களை சிறப்பாகச் செய்கின்றவர்கள் உயர்ந்தவர்களாம். அவர்களைவிட குருமார்கள் மேன்மை உடையவர். அவர்களைவிட பத்தி மார்க்கத்தில் ஈசுவரனை வழிபடுபவர்கள் உயர்ந்தவர்கள். உபாசகர்களைவிட தவம் செய்கின்ற ரிஷிகள் மேலானவர்கள். ரிஷிகளைவிட பிதிர் தேவதைகள் மேலானவர்கள். பிதிர்களைக் காட்டிலும் உலகத்தைக் காக்கின்ற இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன் ஈசானன் ஆகிய அட்டதிக்குப்

பாலகர்கள் பெரியவர்கள். உலக பாலர்களை விட ஐந்து பூதங்களின் அதி தெய்வங்கள் மேலானவர்கள். அவர்களைவிட ஈசுவர தூல சரீர உபகித சைத்தன்னியமான சூத்திராத்மா மேலானவர்கள். வைசுவானாரன், சூத்திராத்மாவைவிட ஈசுவர காரண சரீர உபகித சைத்தன்னியமான அந்தர்யாமி எனப்படும் புருஷன் மேலானவர். அவரினும் மேன்மையானவர் குமரர் எனப்படும் முருகப் பெருமானாம். மேலே சொல்லப்பட்ட இவர்களைவிட மேன்மையானவர்கள் பார்வதியும் பரமசிவனுமாம். பார்வதி பரமசிவன் ஆகிய இருவருக்கும் உயிராக இருப்பதனால், குற்றமில்லாத மேன்மையைப் பொருந்தியுள்ள நாமே அவர்களால் ப்க்தியுடன் பூசிக்கப்படுபவனாம். எமக்கு அதிக மாகவோ ஒப்பாகவோ மேன்மை உடைய பொருள் இல்லவே இல்லை. நாம் தான் எல்லாவற்றிலும் அதிசயிக்கத்தக்கவனாக பொருந்தி இருப்பவன். ஆதலால் நாமே மகத்து ஆகும்.

### நிரஞ்சனன்

**பகர்புனலின் முழுகினவன் உடலில் அந்நீர்**
**பற்றல்எனப் பற்றியிடக் காணா மல்தான்**
**சகலசகத்து உட்புறம்பும் நிறைந்து நின்ற**
**தம்மிடத்தி லேஅழுந்தி இருக்கா நின்ற**
**புகல்அவத்தை மூன்றினுமே காணல் உற்ற**
**பொருவில்சுத்த பரியந்த சகத்தி னோடே**
**இகலுறுபற்று உற்றுவெளி போல்தொ டக்கற்று**
**இருக்கும்நாம் நிரஞ்சனன்என்று எண்ணு வாயே. 81**

நீரில் மூழ்கினவன் உடலில் அந்த நீர் தோய்ந்து பற்றுவதுபோல, நமது உண்மை வடிவம் எதிலும் பற்றித் தோயாததாம். நாம் எல்லா உலகங்களிலும் உள்ளும் புறம்பும் நிறைந்து இருக்கின்றோம். அப்படி இருந்தபோதிலும் நம்மிடத்திலே தோன்றுகின்ற மூன்று அவத்தைகளிலும் ஒப்பில்லாத பிரம்மம் ஈறாக காணப்படுகின்ற உலகங்களில் எல்லாம் இழிவான பற்றில்லாமலும், ஆகாயம் போல் எதிலும் பற்றாமலும் இருக்கின்றோம். ஆதலால் நாம் நிரஞ்சனன் என்று உணர்வாயாக.

### காரணன்

**அவிரும்மூ வகைஉடலி னுக்கும்மூ லங்கன்மம்**
**ஐம்பூதம் அவைகண் மூலம்**

**அமர்சூக்க பூதபௌ திகம்அவைகண் மூலம்**
**அதுஅவித்தைஉறு சீவ னோடு**
**நவமாயை உறுஈசன் அவர்களுக்கு அதிகமாய்**
**நவையில்சை தன்யம் நாமே**
**நண்ணுகா ரணம்ஆன தாலும்நற் சச்சிதா**
**னந்தமாம் நம்மை விட்டுப்**
**பவமான காரியம தாம்உலகி னுக்குஅயல்**
**படிவம்இல் லாமை யானும்**
**பகருகா ரணஉருவ மாகின்ற நம்முடைய**
**படிவமே பல்வ கையதாம்**
**நவையான காரியச கத்தினுக்கு உருவமாய்**
**நண்ணுற்ற தாலும் மிகவும்**
**நாடுற்ற சகலத்தி னுக்கும்அனு தினமும்நாம்**
**நவிலு காரணன் ஆகுமே. 82**

தூலம் சூட்சுமம் காரணம் ஆகிய மூன்று சரீரங்களுக்கும் கருமமும் ஐந்து பூதங்களும் காரணமாம். அவைகளுக்குக் காரணம் சூட்சுமமான ஐந்து பூதங்களாம். அவைகளுக்குக் காரணம் அவித்தையும் அவித்தியாப் பிரதிபிம்பனான சீவனும், மாயையும் மாயாப்பிரதிபிம்பனான ஈசுவரனுமாம். அவித்தை, மாயை, சீவன், ஈசுவரன் ஆகியவற்றிற்குக் காரணம், மேன்மையான குற்றமில்லாத அறிவு வடிவமான நாமேயாகும். மேன்மையான சச்சிதானந்தமான நம்மைவிட்டு தோற்றிக் கொண்டிருக்கும் இந்த உலகினுக்கு வேறொரு காரணமும் இல்லை. எல்லாவற்றிற்கும் காரணமாய் சொல்லப்படுகின்ற நம்முடைய வடிவமே, அநேக விதமாய் தோன்றுகின்ற குற்றம் பொருந்திய காரியமான உலகத்திற்குக் காரணமாய் பொருந்தியிருக்கின்றது. ஆதலால் அறியப்படுகின்ற எல்லாவற்றிற்கும் எப்போதும் நாம் காரணன் என சொல்லப்படுபவனாகும்.

(நாமரூபங்கள் நமக்கு வேறாகத் தோன்றினாலும் சச்சிதானந்தமான நாமே அவைகள் தோன்றுவதற்குக் காரணமாம்.)

## அகாரணன்

**இப்படிச்சக லத்தினுக்கும் இலங்குகாரண மாய்உறும்**
**தப்பில்எற்குஒரு காரணம்இல தாலும் மெய்யுணர்வு இன்பமாய்**

**ஒப்பில்நாம்சக லத்தின்மூல உருவம்ஆயின தாலுமே**
**எய்ப்பிலாஅக மேஅகாரணன் என்னவேநிதம் எண்ணுவாய். 83**

மேலே விளக்கியபடி எல்லாவற்றிற்கும் காரணமாயிருக்கின்ற குற்றமில்லாத எனக்கு ஒரு பொருளும் காரணமாக இல்லை. சச்சிதானந்த வடிவமான ஒப்பில்லாத நாமே எல்லாவற்றிற்கும் மூலகாரணமாய் இருக்கின்றோம். ஆதலால் நீக்கமில்லாது நிறைந்திருக்கின்ற நாமே அகாரணன் என்று எப்போதும் சிந்திப்பாயாக.

**சாட்சி**

**அகிலசக கிரியைக்கும் ஆதித்த சனி தானம்**
**ஆனதே மூல மாக**
**அமர்தல்போல் சர்வஇந் தியசகத் தொழில்களும்**
**அசைவில்சை தன்னி யத்தின்**
**விகலம்இல் லாததோர் சன்னிதா னங்கொண்டு**
**விதம்விதம தாக மிகவும்**
**விரிவாய் நடக்கினும் இலகுகரி யாகவே**
**வேவும்நாம் நாம்ஆ கவும்**
**திகழுபிர விர்த்தியும் நிவிர்த்தியுஞ் செய்யாது**
**சேர்கின்ற ஒன்றி னாலும்**
**செய்வித்தல் இல்லாது மத்யஸ்தன் ஆகவே**
**தினம்இவையை நாடி நின்று**
**துகள்இலாக் கனலிபோல் சகலவித தொழிலையும்**
**தோற்றுவிக் கின்ற அதுவே**
**சொரூபமாம் நாம்சர்வ சாட்சிஎன்று அனுதினம்**
**தூய்மனதின் எண்ணு வாயே. 84**

எல்லா உலக காரியங்களுக்கும் சூரியனின் சன்னிதானமே காரணமாய் அமைந்து இருக்கின்றது. அதுபோல இந்திரியங்களின் மூலமாக நிகழ்கின்ற எல்லாத் தொழில்களும் அசைவில்லாத அறிவே வடிவமான நமது சன்னிதியில் நடக்கின்றன. இப்படி இந்திரியங்கள் விரிவாய் விதம் விதமாக எத்தனை தொழில்கள் செய்தாலும் நாம் சாட்சியாகவே பொருந்தி இருக்கின்றோம். சாட்சியாகவே இருந்து கொண்டு இந்திரியங்களை பிரவிருத்தியும் நிவிர்த்தியும் செய்யாமலும், இந்திரியங்களையும்

விஷயங்ளையும் கூட்டி செய்வித்தலும் இல்லாது இருக்கின்றோம். இப்படி பட்சபாதமின்றி நடுநிலையாகவே தினம் இந்திரியங்களின் தொழில்களை அறிந்துகொண்டு குற்றமில்லாத சூரியனைப்போல விளங்குகிறோம். இந்திரியங்களின் எல்லாவித தொழில்களும் நிகழ காரணமாய் இருக்கின்ற, அறிவே வடிவமான நாம் சர்வ சாட்சி என்று, எப்போதும் சத்துவ குணமான மனதில் சிந்திப்பாயாக.

**ஸ்தாணு**

**அலையினும் மனதுபொறி அலையாத தூலஉடல்**
**அவைகோடி அலையி னும்தான்**
**அலைவில்பூ தங்கள்அவை அசையினும் அசையாமல்**
**அமரினும் அசைதல் போல**
**அலைசூரி யாதிமண் டலம்இதனில் அலைவைசு**
**வானரன் ஆதி இவிதம்**
**அலைசுத்த வரைஉலகுஓர் தனுவாக நாம்என்ன**
**அபிமானம் உற்று அறிவினில்**
**அலைதல்உறும் ஈசன்அவ ரினும்வேற தாகவே**
**அறிவதனின் மறுசி ருஷ்டி**
**ஆக்கிஅலை குமரர்ஆ தியர்இத்த னைக்குமே**
**அமருதா னாக இலகி**
**அலகில்இத் தனைசலனம் அதனோடு கூடியும்**
**அசையாமல் இந்த யாவின்**
**அலைவினுக் குங்கரிய தாகநிறை சைதன்யம்**
**ஆனநாம் தாணு வாமே.** **85**

விடயங்களில் சென்று மனதும் பொறிகளும் அலைந்தாலும் தூல சரீரம் அலையாது. பல கோடி தூல சரீரங்கள் அலைந்தாலும் ஐந்து பூதங்களும் அசையாவாம். ஐந்து பூதங்களும் ஒருகால் அசையும். பூதங்கள் அசையாமல் இருந்தாலும் சூரிய சந்திர நட்சத்திர மண்டலாதிகள் அசையும். இவற்றில் வைசுவானரன், சூத்திராத்மரி, அந்தரியாமி முதலியோரும் அலைவர். பிரம்ம பரியந்தம் உள்ள எல்லா உலகங்களும் தனது சரீரமாக விளங்க, அதில் நான் என்று அபிமானம் கொண்டுள்ள ஈசவரனும் அறிவு சொரூபத்தில் அசைவார். அந்த ஈசுவரனிலும் வேறாகக் கருதப்படும் குமரர் பிரம்மா முதலியோர் பிரளயத்தில் அழிந்து அடுத்த சிருஷ்டியில் தோன்றி அலைவர். இப்படி அலைகின்ற

எல்லாவற்றிலும் பொருந்தியிருந்தாலும் தானாகவே இருந்துகொண்டும், அளவில்லாத இத்தனை சலனங்களோடும் கூடியிருக்கிறோம். இப்படி நாம் அசையாமல், அலைகின்ற இவைகள் யாவற்றிற்கும் சாட்சியாக, எங்கும் நிறைந்து அறிவு வடிவமாய் விளங்குகின்ற நாம் தாணுவாம்.

### பரிபூரணம்

**அப்பினால் கடம் அதை பூரித்தல் போலவே**
**அனமயம் பிராணன் அதனால்**
**அதுமனோ கோசத்தி னால்அதுவி ஞானமயம்**
**ஆம்கோச மதனால் அதும்**
**செப்பும்ஆ னந்தமயம் அதனினால் பூரித்தல்**
**சேர்ந்துநல் சீவன் அதனால்**
**சேர்பூரி தம்பஞ்ச கோசங்கள் அவையினால்**
**திகழ்பஞ்ச பூதம் நிறைவாம்**
***தப்பல்இல் அவையினால் பூரித்தல் உறுசகம்**
**சகம்அதினும் எங்கும் நிறைவாய்ச்**
**சார்கின்ற மாயாவி சிட்டரும்ந மால்மிகத்**
**தாழ்வில்பூ ரித்தல் உற்றுத்**
***துப்புடைய நம்மினும் வேறுபரி பூரணம்**
**தோன்றுதல்இ லாத அதனால்**
**சொல்லுபரி பூரணம் நாம்என்ன வேநிதம்**
**சுகமுடன் அறிந்து கொள்ளே.** **86**

நீரினால் பூரிக்கப்பட்ட குடம் போல அன்னமயகோசம் பிராணமய கோசத்தால் பூரிக்கப்பட்டுள்ளது. பிராணமய கோசம் மனோமயகோசத்தால் பூரிக்கப்பட்டுள்ளது. மனோமய கோசம் விஞ்ஞானமய கோசத்தால் பூரிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானமய கோசம் ஆனந்த மய கோசத்தால பூரிக்கப்பட்டுளது. அன்றியும் இவையாவும் சீவனால் பூரிக்கப்பட்டன. இங்ஙனம் பூரிக்கப்பட்டனவாகிய ஐந்து கோசங்கள் ஐந்து பூதங்களால் பூரிக்கப்பட்டுள்ளன. குற்றமில்லாத ஐந்து பூதங்கள் உலகால் பூரிக்கப்பட்டுள்ளது. இவ்வுலகு எங்கும் நிறைந்துள்ள மாயாவிசிட்ட ஈசவரனால் பூரிக்கப்பட்டுள்ளது. ஈசுவரனும்

* தப்பல் = குற்றம் ; * துப்பு = அறிவு

உயர்ந்த நம்மால் பூரிக்கப்பட்டுள்ளான். அறிவே வடிவான நம்மைப் பூரிப்பதற்கு வேறு ஒன்று பரிபூரணமாக இல்லாததால், பரிபூரணம் என்று சொல்லப்படுவது நாம் என்று நாள்தோறும் இன்பமாக அறிந்து கொள்வாயாக.

### அனந்தன்

**உடல்பொறிகள் தமின்மிகவும் விரிவ தான**
**உட்கரணஆ திகட்கும்அந்த மேஉடைத்தாய்**
**அடரும்அந்தக் கரணஆதி யாலும் எட்டி**
**அறியவொணா விரிபஞ்ச பூதங் கட்கும்**
**திடமாயா விசிட்டருக்கும் கால பேதம்**
**தேசபே தங்களினால் அந்தம் தன்னை**
**இடமாகக் காண்கினுமே அந்த மின்றி**
**இயல்சாட்சி ஆனநாம் அனந்த னாமே. 87**

சரீரம், இந்திரியம் இவைகளைக் காட்டிலும் மிகவும் வியாபகமான அந்தக்கரணமான மனம், புத்தி, அகங்காரம், சித்தம் யாவும் அழிவு உடையனவாய் இருக்கின்றன. இந்திரியம், அந்தக்கரணங்களால் அறிய இயலாது வியாபகமாய் உள்ளவை ஐந்து பூதங்களும், பூதங்களைவிட வியாபகமான மாயா விசிட்ட ஈசுவரனுமாம். இவைகளும் ஒரேபடித்தாய் இல்லாமல் அந்தத்தை உடையதாய்க் காணப்படுகின்றன. நாம் இவையாவற்றையும்விட வியாபகமாயிருத்தலின் தேசத்தாலும், நித்தியாமாய் இருத்தலால் காலத்தாலும், எல்லா வடிவமாயும் இருத்தலால் பொருள்களாலும், அந்தமின்றி இருக்கின்றோம். இப்படி அந்தமின்றி இயல்பாகவே சாட்சியாய் விளங்குகின்ற நாம் அனந்தனாம்.

### சர்வசமன்

**அகிலஉன் னதகுத்தம் அதின்ஒன்றி னுக்குஒன்று**
**அதாம்பத்தில் ஒன்று குறைவாய்**
**அல்கியே சத்தியும் பினமாம்ம கத்துமுதல்**
**ஆக்கிடினை அந்தம் உலகோடு**
**இகல்தேவ பாகமும் மனுடபா கமும்என்ன**
**எய்துபூ தங்கள் உடனே**
**இழிஅதன் மமத்திமஉத் தமமான பிரமன்முதல்**
**எய்துதம் பாந்த உடல்கள்**

**சுகஞானி யோகியொடு உபாசகன் கன்மியாய்த்**
**தோற்றல்உறு சீவர் ஆதி**
**சொல்ஈசன் ஈறதாய் தாரதன் மியமொடு**
**துலங்குவத் தியாவி னும்தான்**
**இகலில்சத்து ஆகார மாய்த்தார தன்மியம்அது**
**எய்தாமல் எப்பொ ழுதுமே**
**இருக்கின்ற சைதன்யம் ஆனநா மேஎன்றும்**
**இயல்சர் வசமன் ஆகுமே. 88**

அழிவில்லாது உயர்வானது சுத்த பிரம்மமாம். அதனில் ஒன்றினுக்கு ஒன்று முறையே பத்துப் பத்து பங்கு குறைவாகவே பிரகிருதி முதல் உலகம் வரை முறையாக படைக்கப்பட்டுள்ளன. இவைகளும் மாறுபாடுடைய தேவர்கள் என்றும் மனிதர்கள் என்றும் மற்றும் தோன்றுகின்ற ஆகாசாதி பூதங்கள் என முறைப்படியாக வரும். பிரம்மா முதல் தாவரம் ஈறாக யாவும் உத்தமம் எனவும், மத்திமம் எனவும் அதமம் எனவும் மூன்று வகையாகத் தாரதம்மியமாகவே கூறப்படும். சுகமான ஞானி எனவும், யோகி எனவும், உபாசகன் எனவும், கன்மி எனச் சொல்லப்படும் சீவர்கள் முதல் ஈசுவரன் வரைக்கும் அனந்த தாரதம்மியங்கள் உளவாம். இப்படி தாரதம்மியமாய் விளங்குகின்ற யாவற்றிலும் நாம் வேறுபாடில்லாமல் இருப்பே வடிவமாய் பொருந்தி இருக்கின்றோம். தாரதம்மியம் இல்லாமல் எப்போதும் இருக்கின்ற அறிவே வடிவமான நாமே என்றும் சர்வ சமன் ஆகும்.

## சர்வ அதிட்டானன்

**அதிட்டானம் சூக்கஉடல் விசிட்ட னுக்கும்**
**அமர்தூல தனுக்கள்அவைக் கும்பூ தங்கள்**
**அதிட்டானம் அவைக்கும் அதிட் டானம் மாயை**
**அமர்ஈச னும்கிளிஞ்சில் வெள்ளி போல**
**உதித்தல்உறு வாக்குமாத் திரம்அல் லாமல்**
**உளஅதிட்டா னம்தவிர ஒன்றிஇல் லென்றே**
**மதித்திடநிர் ணயம்பிறந்த அதனால் சித்தாய்**
**வயங்கிடுநாம் சர்வஅதிட் டானம்ஆமே. 89**

ஆபாசனான சீவனுக்கு அதிட்டானம் சூட்சும சரீரமாம். சூட்சும சரீரத்திற்கு அதிட்டானம் தூல சரீரமாம். தூல சரீரத்திற்கு அதிட்டானம் ஐந்து பூதங்களாம். ஐம்

பூதங்களுக்கும் அதிட்டானம் மாயையும் மாயாப் பிரதிபிம்பனான ஈசுவரனுமாம். கிளிஞ்சல் வெள்ளிபோல சீவன், சரீரங்கள், ஐந்து பூதங்கள், மாயை, ஈசுவரன் எனத் தோன்றுகின்ற யாவும் வாக்கு மாத்திரமே அல்லாமல் உண்மையல்ல. அதிட்டான மாகிய (பிரம்மமாகிய) நம்மைத்தவிர உள்ளது ஒன்றும் இல்லை யென்று சிந்தித்து நிச்சயம் செய்த உடன் அறிவு வடிவமாய் விளங்கும் நாம் சர்வ அதிட்டானம் ஆகும்.

**அகண்டன்**

**நவைகாலம் ஆதியால் கண்டிதம் உறாதஅறி**
**வானநா மேஅ கண்டன்**
**நவிலுமற் றொருயுத்தி உலகர்நிர் ணயம்அருகர்**
**நணுபுத்தர் ஆக மத்தும்**
**அவைதேவர் ஆகமத்து அவைபிரமன் அரிஈசர்**
**ஆகமத்து அவைபு ராணத்து**
**அவைபார தத்துஅவையும் நீதிசா ரத்துஅவையும்**
**அறைகின்ற கன்ம காண்டத்து**
**அவைஉபா சனகாண்டம் அவையாவும் உபநிடதம்**
**அவைக ளால்கண் டித்தலாம்**
**அவைநிர்ண யம்செய்அறி எவைஒன்று கண்டிக்க**
**ஆகா ததாலும் ஆக**
***எவமில்உப நிடதத்தில் அதிதபிர மாணம் வேறு**
**இல்லாத படியி னாலும்**
**இயாவுபிர மாணத்தி னுக்கும்அவை முடியாத**
**லாலும்யா மேஅ கண்டன்.** **90**

இகழ்வான சென்றகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் கண்டிக்கப்படாத அறிவு வடிவமான நாமே அகண்டன். இதற்கு கூறப்படும் மற்றொரு யுத்தியாவது; நாத்திகர்கள் தேகமே ஆத்மா போகமே மோட்சம் என்பர். அது சமணர் ஆகமத்தால் கண்டிக்கப்படுவது போல அதுவும் பௌத்தர் ஆகமத்தால் கண்டிக்கப்படும். பௌத்தர் ஆகமமும் தேவர் ஆகமத்தால் கண்டிக்கப்படும். தேவர் ஆகமமும் பிரம ஆகமத்தால் கண்டிக்கப்படும். அதுவும் வைணவ ஆகமத்தால் கண்டிக்கப்படும். அதுவும்

---

*எவம் (எவ்வம்) - குற்றம்*

சைவ ஆகமத்தால் கண்டிக்கப்படும். சைவ ஆகமமும் புராணங்களால் கண்டிக்கப்படும். அதுவும் மகாபாரதத்தால் கண்டிக்கப்படும். பாரதமும் நீதி சாத்திரத்தால் கண்டிக்கப்படும். அதுவும் கரும காண்டத்தால் கண்டிக்கப்படும். அதுவும் உபாசனா காண்டத்தால் கண்டிக்கப்படும். அவைகள் யாவும் உபநிடதங்களால் கண்டிக்கப்படும். உபநிடதங்கள் நிச்சயம் செய்து அறியப்படுகின்ற நம்மை (பிரம்மத்தை) எந்த ஒரு பிரமாணமும் கண்டிக்க இயலாததாம். குற்றமில்லாத உபநிடதங்களைவிட மேலான பிரமாணம் வேறு இல்லவே இல்லையாம். வேதாந்தமானது எல்லா பிரமாணங்களுக்கும் முடிவாக இருப்பதால் அவற்றால் சொல்லப்படும் யாம் அகண்டன்.

## அபரிச்சின்னன்

ஒருவருக்கு ஒருவர்கள் பரிசின்ன மாய்ப்பிரிவொடு
ஒளிர்சீவர் ஒன்றி னுக்குஒன்று
உறுபரிச் சின்னமாய் நால்ஐந்து தத்துவத்து
உடன்மிகத் தோற்று சூக்க
சரீரங்க ளாம்இவைக ளைக்குறித்து அபரிச்
சின்னமாய்த் தனக்குள் ஆறு
தத்வம்ஆ கப்பரிச் சின்னமாம் தூலத்
தனுக்கள்இவை யைக்கு றித்துப்
பரிச்சின்னம் இன்றிஒளிர் பூதங்கள் இவைகளைப்
பற்றி அபரிச் சின்னமாய்ப்
பனுமாயை உறுவீச னும்சாட்சி ஆகவே
பகருநம் மைக்கு றித்துப்
பரிச்சின்னம் ஆனஅத னாலுமே நம்மிலும்
பரிச்சின்னம் அற்றது ஒன்று
பன்னஇல தாலும்அப ரிச்சின்னன் நாம்எனப்
பரிவினொடும் அறிகு வாயே. 91

சீவர்கள் ஒருவருக்கு ஒருவர் பரிச்சின்னர்களாய் பிரிவு படுகிறார்கள். இருபது தத்துவங்களோடு கூடிய சூட்சும சரீரங்களும் ஒன்றுக்கு ஒன்று பரிச்சின்னமாய் தனித்தனியே இருக்கின்றன. சூட்சும சரீரங்களைக்குறித்து தூல சரீரங்கள் அபரிச்சின்னமாம். ஆறு தத்துவங்களால் ஆன தூல சரீரமும் பரிச் சின்னமாம். இந்தத் தூல சரீரங்களைக்குறித்து பரிச்சின்னமின்றி விளங்குவது பூதங்களாம். பூதங்களினும்

அபரிச் சின்னம் மாயையாம். மாயாப் பிரதிபிம்பனான ஈசுவரனும் சாட்சியான நம்மைக் குறித்துப் பரிச்சின்னம் ஆவர். நம்மிலும் பரிச்சின்னம் இல்லாதது என சொல்ல ஒன்றும் இல்லையாம். ஆதலால் நாம் அபரிச்சின்னன் என்று பிரியத்தோடு அறிந்து கொள்வாயாக.

### அநாவிருதன்

**தாபம்உறும் விசிட்டனைஆ பரித்தல் சூக்க**
**சரீரம்இதை ஆபரித்தல் தூல தேகம்**
**சோபம்உறும் தூலதனுக் களையும் மற்றும்**
**சொல்பூதம் அவைகளையும் ஒன்றை ஒன்று**
**ஆபரித்த விராட்டுஆதிப் பிரபஞ் சங்கள்**
**அவைகளையும் ஆபரித்த ஈச னாலும்**
**ஆபரிக்காது அவரையுமே ஆப ரித்த**
**அறிவாம்நாம் அநாவிருதன் ஆகுந் தானே. 92**

முத்தாபங்களை அடைகின்ற சீவனை மறைப்பது சூட்சும சரீரமாம். சூட்சும சரீரத்தை மறைத்திருப்பது தூல சரீரமாம். விகாரமடைகின்ற தூல சரீரங்களை மறைப்பது பூதங்களாம். பூதங்களும் ஒன்றையொன்று பரஸ்பரம் மறைக்கும். அந்த பூதங்களும் ஈசுவரனால் மறைபடும். ஈசவரனும், இரண்ய கர்ப்பம் அவ்வியாகிருதம் ஆகிய சரீரத்திரயங்களால் மறைபடுவர். எல்லா உலகங்களையும் மறைக்கின்ற ஈசவரனாலும் நம்மை மறைக்க இயலாதாம். அந்த ஈசவரனையும் மறைத்துக் கொண்டிருக்கின்ற அறிவு வடிவமான நாம் அநாவிருதன் ஆகும்.

### சர்வகாரணன்

**சாட்சியாய் அவத்தை மூன்றில்**
**கண்டிடும் சகங்கள் இயாவும்**
**சாட்சியின் இடத்து உதித்துச்**
**சாட்சியின் இடத்து இருந்து**
**சாட்சி மாத் திரம்அ தாகத்**
**தான்அழி கின்ற தாலே**
**சாட்சியா கின்ற நாமே**
**சர்வகா ரணன்என்று ஓர்வாய். 93**

சாட்சியாய் இருந்து சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்று அவத்தைகளிலும் அறிகின்ற உலகங்கள் எல்லாம், சாட்சியாகிய நம்மிடத்திலேயே தோன்றி, இருந்து, அழிந்து சாட்சி மாத்திரமாக எஞ்சியிருக்கின்றது. ஆதால் சாட்சியாய் இருக்கின்ற நாமே சர்வ காரணன் என்று அறிந்து கொள்வாய்.

## பிரமம்

**காலம்மூன் றினுமே எங்கும்**
**ககனம்போல் ஒருப டித்தாய்க்**
**கோலமாய் நிறைந்த நாமே**
**கூறும்நித் தியசுத் தஆதி**
**சீலமாம் இலட்ச ணத்தைச்**
**சேர்ந்துஉறை கின்ற தாலே**
**சாலநாம் பிரமம் என்றே**
**சந்ததம் சிந்தை செய்வாய்.** 94

மூன்று காலங்களிலும், எல்லா இடங்களிலும் ஆகாயம் போல ஒரே தன்மையாய் பூரணமாய் நாம் நிறைந்து இருக்கின்றோம். சாத்திரங்களால் கூறப்படுகின்ற நித்தியன், சுத்தன், சத்து, சித்து, அனந்தம் முதலிய சிறப்பான இலட்சணங்களைப் பொருந்தியிருக்கின்றோம். ஆதலால் நாம் பிரம்மமே என்று எப்போதும் இடைவிடாது சிந்திப்பாயாக.

## ஒருவனே உள்ளபொருள்

**பனுகனவி னில்கண்ட சீவன்ஈச் வரசகம்**
**பனுநன்மை தீமை கேள்விப்**
**படும்வேத ஆகமபு ராணசாஸ் திரம்ஆதி**
**பல்விகற் பங்க ளும்தாம்**
**மனகனவ தைக்காணும் அறிவைவிட இன்மையின்**
**அவத்தைமூன் றுஅதனி னுங்காண்**
**அகிலசக மும்அறியும் அறிவைவிட இல்லாது**
**அவத்தைஒன் று ஒன்றில் இலகும்**
**இனசகம் அந்தந்த அவத்தையைக் கண்டகரி**
**ஆகவே இற்ற படியால்**

**எண்ணவே வேறொன்றும் மூன்றுகா லத்தினும்**
**எய்தவந் ததுவும் இல்லை**
**உனமிகப் போனதும்இல் எனும்அனுப வத்தினால்**
**ஒன்றுமற் றில்லை உறுநாம்**
**ஒருவனே உள்ளபொருள் என்னவே அனுதினமும்**
**உளம்அதனில் எண்ணு வாயே. 95**

கனவினில் காணப்படுகின்ற சீவன், ஈசுவரன், உலகம் உண்டாகின்ற நன்மை தீமைகள், கேட்கின்ற வேதம், ஆகமம், புராணம், சாத்திரம் முதலானவை பலவகை பேதங்களோடு கூடியதாம். இவையாவும் கனவு அதனைக் காண்கின்ற அறிவை விட வேறாக இல்லை. ஆதலால் மூன்று அவத்தைகளிலும் காண்கின்ற எல்லா உலகங்களும் அறிகின்ற அறிவே வடிவமான நம்மை விட வேறாக இல்லை. அவத்தை ஒவ்வொன்றிலும் விளங்குகின்ற உலகமும், அந்தந்த அவத்தையைக் காண்கின்ற சாட்சி மாத்திரமாகவே எஞ்சுகின்றது. ஆதால் மூன்று காலத்திலும் நம்மிடத்தில் வேறொன்றும் உற்பத்தியானதும் இல்லை, நாசமானதும் இல்லை. இந்த அனுபவத்தினால் பொருள் ஒன்றேயன்றி மற்றில்லை. சாட்சியாய் இருக்கின்ற நாம் ஒருவனே உள்ள பொருள் என்றே நாள்தோறும் மனதில் எண்ணுவாயாக.

### சர்வாத்மா

**வயல்குளம் தேசம்ஊர் ஆதிவஸ்து அவைகட்கும்**
**மண்ணதே உருவ மாம்போல்**
**மருஉலகி னுக்குஉருவம் நம்சச்சி தானந்தம்**
**ஆய்இலக லாலும் இன்ப**
**மயநம்மை விடஉலகம் அற்பம்இல தால்சர்வம்**
**ஆம்உலக மாக உறுநாம்**
**மாசர்வ ஆன்மாபின் னொருயுத்தி நான்என்ன**
**மருஉரைக்கு ஊன்று கோலாய்**
**அயல்இல்கரி உருவேந மக்குஉற் றல்போல்பறவை**
**அறைமிருகம் நரர்கள் முனிகள்**
**அமரர்உல கதிபர்பூ தஅதிபதி வைகுவா**
**னரன்ஆதி சீவ ருக்கும்**

**நயஈச ருக்கும்நான் எனும்உரைக்கு ஊன்றுகோல்**
**ஆக்கரிய தான நாமே**
**நண்ணியிடும் அங்கங்கு சித்திக்கை யால்மிகவும்**
**நவிலுசர் வாத்மன் நாமே.** **96**

வயல், குளம், தேசம், ஊர் முதலிய யாவும் மண்ணைத்தவிர வேறாக இல்லை. அதுபோல சச்சிதானந்தமான நாமே எல்லா உலகினுக்கும் உருவமாக விளங்குகின்றோம். ஆனந்தமயமான நமக்கு அன்னியமாக இந்த உலகம் ஒரு சிறிதும் இல்லை. ஆதலால் எல்லா உலகமாகவும் விளங்குகின்ற நாம் சர்வான்மாவாம். வேறொரு யுத்தியும் உண்டு. நான் நான் என்று மயங்குகின்ற எண்ணத்திற்கு ஆதாரமாய், அயலாக இல்லாத சாட்சி வடிவமே நமக்குப் பொருந்தியிருக்கின்றது. அதுபோல பறவைகள், மிருகங்கள், மனிதர்கள், முனிவர்கள், தேவர்கள், அட்டத்திக்கு பாலகர்கள், பூதங்களுக்கு அதி தெய்வங்கள், வைசுவானரன் முதலிய சீவர்களுக்கும் மற்றும் ஈசுவரனுக்கும் நான் என்னும் எண்ணத்திற்கு ஆதாரமாய் சாட்சியான நாமே விளங்குகின்றோம். அங்கங்கு சாட்சியாய் திகழ்கின்றதால் சர்வாத்மா என்று நாம் சொல்லப்படுகிறோம்.

### சர்வாகாரன்

**கனவதனில் காணல்உறும் சகங்கள் இயாவும்**
**கண்டதனது ஆகார மான தேபோல்**
**உனும்அவத்தாத் திரயசகம் இயாவி னுக்கும்**
**உறுகின்ற நமதுசத்துஆ கார மேதான்**
**வினவியிடும் ஆகாரம் ஆன தாலும்**
**விளங்குசத்து ஆகாரம்அதை விட்டு நாடில்**
**சனனம்உறு சகம்அதுவே இல்லா தாலும்**
**சாரும்நா மேசர்வா கார னாமே.** **97**

கனவில் காணப்படும் உலகங்கள் எல்லாம், கனவைக் கண்டவனது வடிவம் மாத்திரமாகவே ஆகின்றது. அதுபோல மூன்று அவத்தைகளிலும் காணப்படும் உலகங்கள் எல்லாவற்றிலும் நமது இருப்புத் தன்மைதான் வடிவமாக இருக்கின்றது. எப்போதும் இருப்புத் தன்மையோடு விளங்கிக்கொண்டிருக்கும் நமது வடிவத்தை அல்லாமல் தோன்றி விளங்குகின்ற உலகம் வேறாக இல்லை. அதலால் எல்லாவற்றிலும் இருப்பு வடிவமாய் பொருந்தியிருக்கின்ற நாமே சர்வாகாரன் ஆகும்.

## அனேகரூபன்

**பயில்சர்ப்பம் என்னவே தோற்றின்அது தானும்அப்**
**பழுதைதனை அன்றி இலதின்**
**பகர்வன்ன ஆச்சிரம மொடுசொர்க்க நரகாதி**
**பல்தேசம் ஊர்கள் காலம்**
***இயல்சாஸ்தி ரம்சீவன் ஈசுவர பேதங்கள்**
**என்னும்ஐ யேழு அதாக**
**எணுதத்து வங்களும் சச்சிதா னந்தமாய்**
**இலகுநம் வடிவ தாலும்**
**அயல்ஒன்றி னுடையஉருவு அலதாலும் ஒருகூத்தன்**
**அளவில்வே ஷங்கள் தம்மை**
**அமர்தல்போ லும்பூமி ஒன்றுமே பல்விகற்**
**பங்களாய் ஆதல் போலும்**
**சுயசத்த தாய்இருக் கின்றதான் ஒருவனே**
**சுழலுசீவ ஈச சகமாத்**
**தோற்றுபே தங்களாய் உறுதலால் நாம்மிகச்**
**சொல்லிடும் அனேக ரூபன். 98**

பாம்பு என்று தோன்றினாலும் அந்தப் பாம்பு பழுதைக்கு வேறாக இல்லை. அதுபோல வருண ஆச்சிரமங்களும் சொர்க்க நரகங்களும், தேசங்கள், ஊர்கள், பருவ காலங்கள், வேத ஆகம சாத்திரங்கள், சீவன், ஈசுவரன் ஆகிய பேதங்கள் யாவும் மற்றும் சொல்லப்படுகின்ற முப்பத்தைந்து தத்துவங்களும் சச்சிதானந்தமாய் விளங்குகின்ற நம் வடிவமே ஆகும். அவையாவும் வேறு ஒன்றினுடைய வடிவம் ஆகாதலாலும், ஒரு நடிகனே அளவில்லாத வேடங்களில் நடிப்பது போலும், பூமி ஒன்றே பலவேறு வடிவங்களாதல் போலும், ஏகமாயும் சத்தாயும் இருக்கின்ற நாம் ஒருவனே சீவன் ஈசுவரன் உலகம் முதலிய பேதங்களோடு விளங்கிக் கொண்டு இருக்கிறோம். ஆதலான் நாம் அனேக ரூபன் என சொல்லப்படுபவனாகும்.

* இயல் - ஆகமம்

### ஏக ரூபன்

**பலசட்டி நீரின்மதி பலவிதம் தோற்றினும்**
**பயிலுமதி ஒன்று அலாது**
**பகர்இரண்டு அல்லாது போலவும் அவன்அவன்**
**பார்வையில் தோற்று கனலி**
**பலவன்றி ஒன்றுஆதல் போலும்ப டிகமண்ட**
**பத்தம்பம் இலகு ஞாளி**
**பலவன்றி ஒன்றுஆதல் போலவும் கனவினில்**
**பலவிதம் சகம் இலகினும்**
**பலவன்றி ஒருவனே ஆதல்போ லும்சீவ**
**பரசகத்து என்று மிகவும்**
**பலவிதம்அ தாய்இலகி னும்சச்சி தானந்த**
**பகர்இலட் சணம்அ தாயே**
**பலவான சகலத்தை யும்கண்ட படியினால்**
**பனுச கத்துஆ காரமே**
**பலரூப மாய்இலகி னும்சற்சித்து இன்பமாய்ப்**
**பகரும்நாம் ஏக ரூபன்.** **99**

ஒரே சந்திரன் பல சட்டிகளில் உள்ள நீரில் அநேக சல சந்திரர்களாகத் தோற்றினாலும் இரண்டாவது சந்திரன் இல்லை. ஒரே சூரியன் எல்லோராலும் பார்க்கப்பட்டாலும் பல சூரியர்கள் ஆவதில்லை. கண்ணாடி மண்டபத்தில் நாய் பலவாக விளங்கினாலும். நாய் பலவன்றி ஒன்றே இருக்கின்றது. கனவில் பலவகையான உலகங்கள் விளங்கினாலும், கனவு காண்பவன் ஒருவனேயன்றி, அநேகர் அல்ல. அங்ஙனம் ஈசுவரன் சீவன் உலகமென்று பலவிதமாய் விளங்கினாலும், சச்சிதானந்தமாய் சொல்லப்படுகின்ற இலட்சணமாய் உள்ள தான் மட்டுமே இருக்கின்றது. ஈசுவரன் சீவன் உலகம் என பல வடிவங்களாய் விளங்கினாலும் சகலத்தையும் அறிகின்ற நாம் சச்சிதானந்தமாய் சொல்லப்படும் ஏகரூபன்.

### பரமார்த்தன்

**கனவுஅபர மார்த்தமாம் நனவுபர மார்த்தமாம்**
**காண்நனவில் அபர மார்த்தம்**

**கார்மின்னல் மற்றுஅவைகள் நிலைஇவையின் நாள்அடிமை**
**காயமனை மதலை வீடு**
**தனமுதல்இவ் வுலகவஸ்து அபரமார்த் தம்சுரர்கள்**
**சார்உலகம் ஆதி நிலையாய்த்**
**தங்கும்இதில் அயன்உலகம் நிலைஎன்ன இவ்விதம்**
**தாரதன் மியங்கள் ஆகப்**
**பனுஈச சீவசகம் முழுதும்நன்கு உணரினே**
**பரமார்த்தம் அல்ல தாலும்**
**பகர்இவைக் குச்சர்ப்பம் ஆதிக்கு ரச்வாதி**
**பரமார்த்த உருவா தல்போல்**
**அனகநாம் பரமார்த்த உருவதா லும்எமக்கு**
**அழிவு வந்துஒரு வஸ்துவும்**
**ஆகுபர மார்த்தமாய் உற்றிடா தாலும்நாம்**
**அழிவில்பர மார்த்தன் ஆமே.** **100**

சொப்பனம் உண்மையல்ல, சாக்கிரம் உண்மையாம். சாக்கிரத்திலும் மின்னல்மேகம் முதலியன உண்மையல்ல, மற்றவை உண்மையாம். இவற்றுள்ளும், ஆயுள், ஆள், சரீரம், நிலம், பிள்ளை, வீடு, செல்வம் முதலிய இவ்வுலகப் பொருள்கள் உண்மையல்லவாம். தேவர்கள் சார்ந்துள்ள சொர்க்கலோகத்தை விட பிரம்ம லோகம் உண்மையென்றும், இவ்விதம் ஏற்றதாழ்வு உடையவைகளாய் ஈசுவரன், சீவன், உலகம் முதலியவை இருக்கின்றன. ஈசுவரன், சீவன், உலகமென்று கூறப்படும் இவற்றை முழுமையாக ஆராய்ந்து பார்க்கும்போது உண்மையல்லவாம். பாம்பு முதலியவற்றிற்கு கயிறு முதலியவை இல்லாமல் தோற்றம் இல்லாததே போல இவைகளும் உண்மையல்லவாம். எப்போதும் உண்மையாய் இருக்கின்ற எமக்கு ஒரு காலத்தும் அழிவும் ஏற்படுவதில்லை. என்னை விடுத்து வேறொரு பொருள் உண்மையாக எப்போதும் கிடையாதாம். ஆதலால் நாம் அழிவில்லாத பரமார்த்தன் ஆகும்.

## வஸ்து

***புரிவஸ்து என்னல்பொருள் மற்றுஅதன் எனில் உலகம்**
**இயாதெனில் பிரியின் அரவம்**

---

* புரி (புரிவு) = தெளிவு

**போல்உலகு பொய்யதாற் பொருளல்ல எனில்அரவு**
**போல்உறும் புரியின் அரவப்**
**பிரமைவர லாம்உலகு போல்இரா நிரவயவ**
**பிரமத்தில் உலகு தானும்**
**பிரமைஎன் பதுதகாது என்றிடில் தான்சிவப்**
**பிற்குஉவமை யற்ற படிகத்து**
**உரைஇரத் தப்படிகம் என்பிரமை போல்கசப்**
**புக்குஉவமை யில்கு ளத்தை**
**உறு*குளம் கைக்குதுஎன் றிடுபிரமை போலவும்**
**உலகமே போல் இராத**
**பிரமத்தில் உலகம் ஆரோபமாம் இவ்விதம்**
**பிரமையாம் உலகி னுக்குப்**
**பிறங்குஅதிட் டானபொருள் தனையன்றி இலையதால்**
**பேசல்உறும் வஸ்து நாமே. 101**

தெளிவாக விளங்குவது தான் பொருளாகும். மற்றவையெல்லாம் பொருள் அல்லவாகும். இப்படிச்சொல்வதால் உலகம் யாது என்ற சந்தேகம் தோன்றும். கயிற்றில் பாம்பு தோற்றுவதுபோல் உலகம் பொய் ஆனதால் பொருளல்ல. இந்த விளக்கத்தின்படி பாம்புபோல் இருக்கின்ற கயிற்றில் மயக்கத்தால் பாம்பின் தோற்றம் உண்டாகலாம். உலகம்போல் வடிவமில்லாத பிரம்மத்தில் மயக்கத்தால் உலகம் தோன்றும் என்பது பொருந்தாது என்று சந்தேகம் உண்டாகலாம். சிவப்பிற்கு உவமானம் இல்லாத வெண்பளிங்கினை இரத்தம் போல சிவப்பான படிகம் என்று மயக்கத்தால் சொல்வதைப் போலவும், கசப்பு சுவைக்கு உவமையில்லாத வெல்லத்தை, நோயுற்றவன் வெல்லம் கசக்கின்றது என்று மயக்கத்தால் சொல்வதைப் போலவும், உலகமே போல் இல்லாத பிரம்மத்தில் உலகம் கற்பிதமாம். இவ்விதம் மயக்கத்தினால் தோன்றக் கூடிய இந்த உலகமானது அதிட்டானமாய் விளங்குகின்ற நம்மையன்றி வேறு இல்லை. ஆதலால் வஸ்து என்று சொல்லப்படுவது நாமே.

## நிட்பிரபஞ்சன்

**பிரபஞ்சம் இன்மைநிட் பிரபஞ்சம் வாதிகள்**
**போதமாம் சங்கை உலகைப்**

* குளம் = வெல்லம்

**பெயர்த்துஅறிவை உறுவெனச் சுருதிசொல லால்உலகு**
**பேர்த்துவிட வேண்டும் என்னில்**
**திரமில்சகம் உளதாயின் ஒருவர்எத் தனம்அதால்**
**தீராது சங்கை சுகர்நல்**
**தெட்சணா மூர்த்திமுதல் முத்தரா லேசகம்**
**தீர்ந்தஅவ் விதமும் உமக்குத்**
**தருசகமில் ஞானம்இலை யெனில்அவர்க ளால்இறந்து**
**அற்றதேல் உலகு தானும்**
**தயங்கலுடன் இப்போது உறக்கணக் கிலைஇலாச்**
**சகம்அதனை இல்லை என்றே**
**சுருதியும் அழித்திடச் சொன்னதால் சொப்பனத்**
**துகள்உலகின் உலகு இலென்றே**
**துணிவுடன் அழித்தல்உல கில்ஞானம் ஆதலால்**
**துகளில்நாம் நிட்பிர பஞ்சன்.** **102**

உலகம் இன்மையே நிஷ்பிரபஞ்சமாம். வாதம் செய்பவர்கள் விளக்கம் பெறும் பொருட்டு வினவும் வினாக்கள்: உலகம் தோற்றமாத்திரமே, உண்மையல்ல என்று உலகத்தை விடுத்து நமது உண்மைவடிவம், அறிவு வடிவம் என்று நிச்சயிக்குமாறு சாத்திரங்கள் கூறுகின்றன. உலகை தனக்கு அன்னியமாகக்கருதி உண்மையல்ல என்று நிச்சயித்து விட்டு விடவேண்டும் எனில், நிலையில்லாத உலகம் மெய்யாயின் ஒருவர் முயற்சியால் ஒருகாலும் அது இல்லாமல் போகாதாம். மீண்டும் சந்தேகம்: தெட்சிணாமூர்த்தி முதல் சுகர்வரை ஞானம் பெற்றவர்களுக்கு உலகம் உண்மையல்ல என்ற ஞானம் உளதாம். அவ்விதமாக நமக்கு உலகம் உண்மையல்ல என்ற ஞானம் தோன்றவில்லையே, எனில்? அவர்களது ஞானத்தால் உலகம் அழிந்து இல்லாமல் போனால் இப்போதும் உலகம் விளங்கிக் கொண்டிருக்க நியாயமில்லை. உண்மையல்லாத உலகமதனை இல்லையென்றே சாத்திரமும் நீக்கிவிடக்கூறுகின்றது. சொப்பனத்தில் தோன்றும் உலகினை, அது உண்மையல்ல யென்றே சாக்கிரத்தில் நிச்சயம் செய்வது போலவே, சாக்கிரத்தில் தோன்றும் உலகினையும் இல்லை யென்று நீக்குவதே உலகம் இல்லையென்னும் ஞானமாகும். ஆதலால் குற்றமில்லாத நாம் நிஷ்பிரபஞ்சன் ஆகும்.

### நானாரூபன்

**இயலும்நா னாரூபம் வெகுரூப மாம்சங்கை**
**இவைஎலாம் பிரமம் அல்ல**

**எனும்வாக்கி யத்தினால் உலகைத்து டைத்துமிக**
**ஏகசித்து உருவ தாக**
**இயல்சுருதி பிரமத்தை நிலைநிறுத் தப்பிரமம்**
**எண்ணும்வெகு ரூபம் என்பது**
**எவிதம்எனில் வெகுவிதம் பிரிவுபெறும் நீரினால்**
***இனன்ஒருவ னேஅ னேக**
**அயல்உருவ மேஎன்ன இலகல்போல் வெகுரூபி**
**யாய்உறும்அ வித்தை யாலே**
**அலகில்ஒரு பிரமமும் வெகுரூப மேபோல**
**அமரவே இலகல் கொண்டு**
**சுயமாக வெகுரூபன் என்பதுஉப சாரமாகச்**
**சொல்லல்உறும் ஆகை யாலே**
**தோற்றிடும்அ வித்தைதன் னைக்குறித்து என்றும் நாம்**
**துகளில் நானா ரூபனே.** **103**

பலவிதமாக சொல்லப்படும் உருவம் அநேக உருவமாம். இதில் தோன்றும் சந்தேகம்: இந்த நாம ரூபம் எல்லாம் பிரம்மம் அல்ல என்னும் வாக்கியத்தினால் நாமரூப உலகை இல்லை என நீக்கி, பிரம்மம் ஒன்றே என்றும், அறிவு வடிவம் என்றும் சுருதி, பிரம்மத்தை நிலைநிறுத்துகிறது. இப்படியிருக்க பிரம்மத்தை அநேக உருவமாக சொல்வது எவ்விதம் எனில்? பலவிதமாக பிரிவுபட்ட நீரினில் சூரியன் ஒன்றே அநேக உருவங்களாக விளங்குகின்றது. அதுபோல அநேக ரூபமாய் பிரிந்து இருக்கின்ற அவித்தையாலே, அளவில்லாத பிரம்மம் ஒன்றே அநேக உருவங்களாகப் பொருந்தி விளங்கிக் கொண்டு இருக்கிறது. இயல்பாக அநேக உருவமுடையது என்பது உபசாரமாகக் கூறுவதாகும். ஆதலால் அவித்தைகளைக் குறித்து அநேகமாகப் பிரிந்து தோன்றும் நாம் எப்போதும் குற்றமில்லாத நானா ரூபனாம்.

### அபேதன்

**தேசம்அதன் பேதங்கள் பூத பேதம்**
**தேகம்அதன் பேதமோடு இந்திரிய பேதம்**
**ஈசர்களின் பேதங்கள் சீவ பேதம்**
**எனத்தோற்றம் மாயாகா ரியத்தி னுக்கும்**

* *இனன் : சூரியன்*

**மாசுறுமா யைக்கும்அதிட் டான சித்தாய்**
**மருவுசச்சி தானந்த நம்மை விட்டுப்**
**பேசுறும்ஓர் பேதஉரு இலதால் நாமே**
**பிரிவிலா அபேதன்எனப் பேணு வாயே.** **104**

தேச பேதங்கள், பூதபேதம், தேக பேத மோடு இந்திரிய பேதம், ஈசுவரர்களின் பேதங்கள், சீவபேதம் என்னும் மாயாகாரியங்களின் பேதங்கட்கும், குற்றம் பொருந்திய மாயைக்கும் அதிட்டானமாயும் அறிவு வடிவமாயும் நாம் இருக்கின்றோம். நமக்கு மேலாக பேதம் ஒரு சிறிதும் இல்லாதது எதுவும் இன்றாம். ஆதலால் நாமே எந்தவிதப் பிரிவும் இல்லாத அபேதன் என்று கருதுவாயாக.

### நிருவிசேஷன்

**நிருவிசே ஷன்உயர்வு தாழ்வாம்வி சேஷம்அவை**
**நீங்கின்அவன் நிற்றல் ஓடல்**
**நேர்கோணல் அதியா இலகலுறு மனுடரொடு**
**நிகழ்தருப் பட்சி முதலாம்**
**சருவம்என் விசேஷங்கள் உடன்உற்றுஅவ் வடிவையும்**
**சார்அதன் தொழிலும் உறல்போல்**
**தயங்குகினும் வெயில்ஏக ரூபமாய் விபுவதாய்த்**
**தனிநிரு விசேஷ மாபோல்**
**பொருவிபுப் பிரமம்முன் சொல்விசே ஷத்தொடு**
**பொருந்திஅத் தொழில்கள் தம்மைப்**
**பொருந்தல்போல் உறினும்தொ டக்கில்அது அசங்கமாய்ப்**
**புகலும்நிர் விசேஷ மாயே**
**இரிவிலா துஉறும்என்று உரைத்தபடி யேஅறிஞர்**
**இயல்விசே ஷங்கள் இயாவும்**
**எமதிடத்து இலகல்என்று எணிஅனு பவித்தலால்**
**இயாம்நிருவி சேஷ னாமே.** **105**

நிருவிசேஷன் என்பது உயர்ந்தது தாழ்ந்தது எனப்படும் விசேஷங்கள் நீங்கினவனாம். நிற்குதல், ஓடல், உயரம், கூன் முதலியனவாய் உயர்வு தாழ்வோடு விளங்குகின்ற மனிதர்களோடும், மரம் பறவைகள் முதலானவற்றிற்கு சொல்லப்படும்

விசேஷங்களோடும் நாம் பொருந்தியிருக்கிறோம். அந்தந்த வடிவங்களை அடைந்து அது அதன் தொழில்களையும் பொருந்தியிருக்கிறோம். எல்லா இடங்களிலும் வெயில் விளங்கிக் கொண்டிருந்தாலும் சூரியன் ஒரே வடிவமாயும், வியாபாகமாயும், ஒப்பிலாமலும் நிருவிசேஷமாய் விளங்கிக்கொண்டு இருக்கிறது. மேலான வியாபகமானப் பிரம்மம், முன் சொல்லிய சீவன், மரம், பறவைகள் ஆகியவற்றிற்குரிய விசேஷங்களுடன்பொருந்தி அதன் அதன் தொழில்களையும் பொருந்தி இருப்பது போல் தோன்றுகிறது. அப்படி தோன்றினாலும் நாம் அவற்றோடு சம்பந்தம் இல்லாமலும், பற்றற்றும், நிர்விசேஷமாயும் இருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. ஞானிகள், சிறந்த விசேஷங்கள் எல்லாம் எம்மிடத்து விளங்குகின்றன என்று கருதி, நம்மை துய்த்து அனுபவிக்கிறார்களே அல்லாது அவை நம்மிடத்தில்லை. ஆதலால் நாம் நிருவிசேஷனாம்.

## அத்வைதன்

**துவிதம்என்பது இரண்டுஇரண்டது**
**அற்றதுஅத்து விதமாம்**
**துவிதசகம் இலகலின்அத்**
**துவிதம்என்பது எவிதம்**
**புவியில்மரம் செடிகள்முதல்**
**ஆனதுஎலாம் உதித்துப்**
**பூமியிலே இருந்துபுவி**
**ஆகஅழிந் திடல்போல்**
**அவிர்அவத்தை களில்தோன்றும்**
**சகம்அறியும் சாட்சி**
**ஆனநமில் உதித்துஇருந்தே**
**அழிந்துவிட லாலே**
**தவறில்அறி வாம்தனைப்போல்**
**பின்னைஒரு வஸ்துத்**
**தான்இலதா தலின்நாமே**
**அத்தொய்தன் ஆகும்.** **106**

துவிதம் என்பது இரண்டாகும். இரண்டாவது பொருள் இல்லாமல் இருப்பது அத்துவிதமாகும். துவிதமாய் உலகம் விளங்குவதால் அத்துவிதம் என்பது எவ்விதம் எனில்? பூமியில் மரம் செடி கொடிகள் எல்லாம் உற்பத்தியாகி வளர்ந்து, அதனிடத்திலேயே

அழிந்து பூமியே ஆகிவிடுகின்றது. அதுபோல சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியாய் விளங்குகின்ற அவத்தைகளில் தோன்றுகின்ற உலகமானது, அவற்றை அறிகின்ற சாட்சியான நம்மிடத்தில் தோன்றி, இருந்து, அழிந்து விடுகின்றது. ஆதலால் குற்றமில்லாத அறிவு மாத்திரமாய் இருக்கும் நம்மிடத்தில் இண்டாவதாக ஒரு பொருள் இல்லை. ஆதலால் நாம் அத்வைதனேயாகும்.

### சர்வாபாவன்

**உண்மைஅறிவு ஆனந்தம் நமையன்றி மற்ற**
**உறும்ஐந்தேழ் தத்துவமாம் உலகுநினைவு அதனில்**
**உண்மைஎனத் தோற்றின்அதன் நினைவுபொய் ஆனதனால்**
**உள்ளின்மெய்போல் இலகுஉலகும் பொய்யான தாலும்**
**தன்மைஉலகு அதுநான்கு அபாவம்உற லாலும்**
**சசாதிமுதல் திரிபேதம் தனக்குஇலதி னாலும்**
**உண்மைசுகச் சிற்பிரமம் அன்றிமுப்பத் தைந்தும்**
**ஒருகாலும் இலதால்சர் வாபாவன் நாமே.** 107

சச்சிதானந்தமான நம்மையன்றி ஏனைய முப்பத்தைந்து தத்துவ வடிவமானது இந்த உலகம். இந்த உலகம் நினைவினில் மட்டும் உண்மை எனத் தோற்றினாலும், அந்த நினைவு இல்லாதபோது, இல்லாதது ஆகிறது. மேலும் அந்த நினைவும் பொய்யேயாகும். இப்படி சிந்தித்துப் பார்க்கும் போது உண்மைபோல விளங்கிய உலகம் பொய்யாகின்றது. இகழ்வான உலகம் முன்னின்மை, பின்னின்மை, ஒன்றில் ஒன்றின்மை, முற்றுமின்மை ஆகிய அபாவங்கள் நான்கையும் பொருந்தியிருக்கின்றது. சஜாதி, விஜாதி, சுவகதம் என்னும் மூன்று பேதங்களும் நமக்கு இல்லாது இருக்கின்றது. சச்சிதானந்தமாகிய பிரம்மத்தையன்றி முப்பத்தைந்து தத்துவங்களும் ஒருபோதும் இல்லாததால் சர்வாபாவன் நாமே.

### சர்வதோமுகன்

**காலமொடு தேசவஸ்து திக்கு வன்னம்**
**கருதுகின்ற ஆச்சிரமம் இவைகள் தம்மில்**
**ஏலவொன்றில் உள்ளதுமற் றொன்றில் இல்லை**
**என்னும்இவை யேமுதலா இயம்பா நின்ற**

**சீலமில்அப் பரிச்சேத மற்றே பத்துத்**
**திக்கினும்மற்று எங்கும்அடி முடியும் அற்றுச்**
**சாலவுமே சர்வபரி புரண மாகத்**
**தங்கலில்நாம் சர்வதோ முகன்என்று ஓர்வாய். 108**

மூன்று காலங்கள், தேசம், வஸ்து, திக்குகள், நான்கு வருணமோடு ஆச்சிரமங்கள் இவையாவும் ஒருகாலத்தில் இருந்து பிறிதொரு காலத்தில் இருப்பதில்லை. ஒரு தேசத்தில் இருந்து வேறொரு தேசத்தில் இருப்பதில்லை. ஒரு பொருள் பிறிதொரு பொருள் ஆவதில்லை. ஆனால் பிரம்மம் உற்பத்தி நாசமின்றி இருத்தலால் காலப் பரிச்சேதம் இல்லாததாம். வியாபகமாய் இருத்தலால் தேசப் பரிச்சேதம் இல்லாததாம். எல்லாப் பொருள்களுமாய் இருத்தலால் வஸ்துப் பரிச் சேதம் இல்லாததாம். பத்துத் திக்குகளிலும் மற்றும் எங்கும் வியாபகமாயும், ஆதியும் அந்தமும் இல்லாமல், மிகவும் பரிபூரணமாக நிறைந்து இருத்தலால் நாம் சர்வதோமுகன் என்று சிந்தனை செய்வாக.

### வேண்டுகோள்

**சுயம்பிர காச இன்பத்**
**தோன்றலே துரிய வாழ்வே**
**வயம்பெறு நினது நாம**
**வளத்தினை மிகத்தொ டுத்துத்**
**தயங்கும்இம் மாலை தன்னைத்**
**தமியனேன் பிழைத்தற் கேநின்**
**புயந்தனில் அணிந்துஉ நாளும்**
**புலையனேன் தனையும் காவாய். 109**

இயல்பாகவே ஆனந்த வடிவமாய் இருப்பவரே! நான்காவது அவத்தையாகிய துரியத்தில் எப்போதும் நிலைத்து இருப்பவரே! மேன்மை உடைய பிரம்ம சொரூபமான தேவரீருடைய நாமங்களின் பெருமையை கவிகளாக இயற்றி தொடுத்துப் பாமாலை யாக விளங்குகின்ற இதனை, அடியேன் உய்யும் பொருட்டு, தங்கள் தோள்களில் அணிந்துகொள்ள வேண்டுகிறேன். கீழ்மையான அடியேனை எக்காலமும் காத்து அருளுங்கள்.

### இலக்ஷணாவிருத்தி முற்றுப் பெற்றது

ஸ்ரீ முத்திராமலிங்க சுவாமிகள் திருவடி வாழ்க

சர்வம் சின்மயம்

செய்யப்பட்டது. இவ்வுரையை ஆராய்ந்து பார்க்கும் இடத்து வேதாந்த நூற்களின் பொருள் விரிவு எத்தகையது என்றிடின் முறைப்படி நாம் அதனைக் கூறுவோம்.

5. வாய்த்தநூல் முகத்துஉரைக்கும் மங்களா சரணை
வாழ்த்துவணக் கொடுவத்து நிர்த்தேசம் எனமூன்று
ஆத்தபதம் பதப்பொருளே வாக்கியயோ சனையே
அறிவினா விடைஇவைஐந்து உரைஇலக் கணம்ஆம்
கோத்துஉரைசெய் விசேடவி சேடியம்கருத்தா கருமம்
கொள்கிரியை இவைஐந்து அன்வயஇ லக்கணம்ஆம்
சாற்றும்அநு பந்தசதுட் டயம்நூற்கு விடயம்
சம்பந்தம் பயன்அதி காரிகள்என நான்கு அறியே.

சிறந்த நூலின் தொடக்கத்தில் கூறுகின்ற மங்களாசரணை எனப்படுவது, வாழ்த்துதல், வணக்கம், பொருள் இயல்பு உரைத்தல் என மூவகைப்படும். உரை இலக்கணம் ஆவது மூல நூலில் சொல்லப்படுகின்ற சொல், சொற்பொருள், சொற்றொடரின் முடிந்த பொருளை ஆராய்ச்சி வாயிலாய்க் கூறுதல், ஐயப்பொருளை அறிதற்கு உரிய வினாவைக்கூறல், அதற்கு விடை கூறல் என்னும் இவ்வைந்து வகையாம். பொருட் பொருத்த அன்வய இலக்கணம் ஆவது, பொருத்தமான பதங்களைச் சேர்த்துக் கூறப்படும் அடையெடுத்த பொருள் (விசேடியம்), பண்பு (விவேஷணம்), சிந்தனை வடிவம் (கர்த்துரு), செயப்படு பொருள் (கருமம்) , தொழில் (கிரியை) என்னும் ஐந்து விதமாகும். அநுபந்த சதுட்டயம் என்பன, விடயம், சம்பந்தம், பயன், அதிகாரி என்ற நான்கும் என அறிவாயாக.

6. விடயம்அது சிவசீவர் தமதுஏகத் துவம்ஆம்
விமலனொடு நூற்குஅறையப் படல்அறையும் தன்மை
அடைதல்உறு சம்பந்தம் பயன்துயர்எ லாம்நீத்து
ஆனந்தப் பதம்பெறுதல் சாதனம்நான் கினையும்
உடையவனே அதிகாரி என்றுஅறைவர் அறிஞர்
உரைத்த சாதன சதுட்டயம் நித்தஅ நித்தப்
படுபொருளின் விவேகம்இக பரபோக விராகம்
பழிப்புஅரிய சமைமுமூட் சுத்வம்எனப் படுமால்.

விடயமாவது சீவ ஈசுவரனது ஐக்கியத் தன்மையாம். பொருந்துகின்ற சம்பந்தமாவது பிரம்மத்தோடு வேதாந்த நூலுக்கு உள்ள சொல்லப்படுதலும், சொல்லும் தன்மையும்